


# ரோஜா முள்

## 1

அப்பாவுடன் ஒட்டிக்கொண்டே வாயிலுக்கு வந்தாள் சத்யா. "அப்பா, இன்று மாலை நான் வீட்டில் இருக்க மாட்டேன் நினைவிருக்கிறதா?" என்று நினைவுறுத்தினாள்.

"நிச்சயமாய்" என்று சிரித்தார் செல்வரத்தினம். மகளின் நெற்றியில் விழுந்து கண்ணை மறைத்த கற்றைக் கூந்தலை அன்புடன் ஒதுக்கிவிட்டு, "இது என்னடா கண்ணா ஸ்டைல்? கண் பார்வையைக் கெடுக்கிறதே" என்றார்.

"இந்தச் சித்ராதாம்பா வெட்டி விட்டாள். ஆனால் அது கிடக்கட்டும். நீங்கள் வந்ததும் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்" என்று விசாரித்தாள் மகள்.

வேண்டுமென்றே மறந்தவர் போல் நடித்தார் தந்தை. முகவாய்க் கட்டையைத் தடவி விட்டுக் கொண்டு "என்னடாம்மா செய்ய வேண்டும்? ம்ம்...? நினைவு வந்து விட்டது. ஆபீசிலிருந்து கொண்டு வரும் வேலைகள் எல்லாவற்றையும் உட்கார்ந்து முடித்துவிட்டுத்தான் தூங்க வேண்டும். சரிதானா?" என்று அப்பாவி போலக் கேட்டார்.

''என்னப்பா நீங்கள்? எத்தனை தடவை சொன்னேன்...?'' என்று சிணுங்கும்போதே தந்தையின் கண்களில் உண்மையைக் கண்டு கலீரெனச் சிரித்தாள் சத்யா. ''டிபன், காபி எல்லாம் டேபிளில் இருக்கும். ஒன்றுவிடாமல் சாப்பிட்டு விடவேண்டும். தெரியுமாப்பா? மிச்சம் மீதி வைத்தால்... எனக்குப் பொல்லாத கோபம் வருமாக்கும்,'' என்றாள் மிரட்டுவதுபோல.

''அடடே! உனக்கா! என் சத்யா குட்டிக்கா! கோபம் வருமா! அச்சச்சோ. பயம்மா இருக்கே...'' என்று நடித்த தந்தையுடன் சேர்ந்து கலகலத்தாள் மகள்.

''அப்ப வரட்டுமா, கண்ணம்மா'' என்று மகள் கையிலிருந்த ப்ரீஃப் கேஸை வாங்கிக் கொண்டார் செல்வரத்தினம். காரில் ஏறுமுன், ''டிபன் காபி எல்லாம் சாப்பிட்டு விடுவேன். என் சத்யாம்மா செய்யப் போவது ஆயிற்றே. இன்றுதானேம்மா, ஏதோ புது பஃப் செய்யப் போவதாகச் சொன்னாய்?'' என்று வினவினார்.

சத்யா, ஒரேயடியாக மகிழ்ந்து போனாள். ''அப்பா, உங்களுக்கு நினைவு இருக்கிறதா? போனவாரம் 'காடரிங்' வகுப்பில் கற்றுத் தந்தது. அதைத்தான் இன்று செய்யப் போகிறேன். அம்மாவும் வந்து சாப்பிடுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். சரி சரி. அப்பா, மணி ஆயிற்று கிளம்புங்கள்... நேற்று டைப் செய்தது எல்லாம் இந்தப் பெட்டியில்தான் வைத்திருக்கிறேன், பார்த்துக் கொள்ளுங்கள். டாட்டா'' என்று விடை கொடுத்து தந்தையை அனுப்பி வைத்தாள்.

வழக்கம் போலவே கேட்டைத் தாண்டியதும் காரை நிறுத்திவிட்டுத் திரும்பி மகளை மீண்டும் ஒரு தரம் பார்த்து கையசைத்துவிட்டு கிளம்பினார் செல்வரத்தினம்.

காரில் செல்லும்போது சுற்றுப்புற காட்சிகள் எதுவும் அவர் மனதில் பதியவில்லை. தேன் சிட்டுப் போல அழகிய மகளே அவர் நெஞ்சில் நிறைந்திருந்தாள்.

தந்தையின் கார் கண்ணுக்குத் தெரியும் வரை நின்று விட்டு ஒரு பாட்டை முனங்கியபடியே உள்ளே சென்றாள் சத்யா.



சமையல்கார சகாயத்திடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள் தாயார் விஜயா. ''அப்பா கிளம்பிப் போயாச்சா சத்யா?'' என்று மகளைக் கண்டதும் வினவினார்.

''ஆமாம்மா. இன்றைக்கு அந்த பஃப் செய்யப் போகிறேன்...'' என்று தாயை இடைமறித்தாள் மகள்.

''அதுதான் சகாயத்திடம் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்... பார் சகாயம், காய் எல்லாம் சின்னம்மா சொல்கிற மாதிரி வெட்டிக் கொடு. மாவு எல்லாம் அவள் எடுத்துத் தருவாள். அவளிடம் பக்குவம் காட்டிப் பிசைந்து கொடு. சத்யா, நான் ஆறு மணிக்கு மேல்தான் வருவேன்; வந்து சாப்பிடுகிறேன். நீயும் சீக்கிரமாக வந்து விடு. அல்லது எதற்கும் அப்பாவை அங்கே வரச் சொல்லட்டுமா?''

''ஊகூம், வேண்டாம்மா. சும்மாவே எல்லோரும் என்னை பயந்தாங்குள்ளி என்று கேலி செய்கிறார்கள். நான்தான் ஏழரைக்குள் திரும்பி விடுவேனே,'' என்று இயம்பினாள் மகள்.

''ஊம், சரி சரி... நான் போய்க் காரை உனக்கு அனுப்பி விடுகிறேன். ஜாக்கிரதையாக ஓட்டு, சித்ராவை அழைத்து வரும்படி அப்பாவுக்கு ஃபோன் செய்து விடுகிறேன். சகாயம், சம்பல் ஒன்றும் செய்துவிடு. அன்றே அய்யா கொத்துமல்லி சட்னி செய்து நாளாயிற்று என்றார். சத்யா பஃப்க்கு வேணுமானால் கொஞ்சம் மல்லித்தழை தனியே எடுத்து வைத்துவிடு. பார்த்துக் கொள்கிறாயா? நான் கிளம்ப வேண்டும். இன்று புவர் ஃபீடிங் இருக்கிறது'' என்று அவசரமாகக் கிளம்பினாள் விஜயா.

தாயாரையும் அனுப்பி விட்டு 'காடரிங் கிளாஸ்' நோட்டை எடுத்து வைத்துக் கொண்டு சாமான்களை நறுக்கத் தொடங்கினாள் சத்யா.

நாலரை மணிக்கு அழகாகத் தங்க நிறத்தின் மேலே லேசாக முறுகிச் சிவந்த பஃப் துண்டுகளைக் கோப்பைத் தட்டில் அடுக்கியபோது சத்யாவுக்கு ஆனந்தமாக இருந்தது.

அப்பாவுக்கு டேபிளில் காபி, பஃப், பாதாம் பர்பி எடுத்து மூடி வைத்தாள். அம்மா, சித்ராவுக்கும் எடுத்து வைத்தாள்.

''சகாயம், நீயும் சாப்பிட்டுப் பார்'' என்று சமையல்காரனிடம் சில துண்டுகளைக் கொடுத்தாள்.

அப்பா ரசித்து உண்பதைக் கற்பனையில் கண்டு முறுவலித்த படியே 'பாத்டப்'பில் இளம் சூடான வென்னீரை நிரப்பினாள். அந்த நீரில் அரை மணி நேரம் ஆசையுடன் அமிழ்ந்து கிடந்துவிட்டு அடுத்த ஷவரின் பூஞ்சிதறலையும் ரசித்து விட்டு மடமடவென்று கிளம்பலானாள்.

தளிர்ப் பச்சை உடலில் ரத்தச் சிவப்பும் எலுமிச்சை மஞ்சளும் 'ஸ்டிரா' வேலை செய்த அமெரிக்கன் ஜார்ஜெட் சேலை. அதே நிறச்சட்டை, பெட்டிகோட், ரத்தச் சிவப்பு திலகமும் நகப்பாலீஷும், சிகப்பு லாக் கெட்டுடன் கூடிய மெல்லிய சங்கிலி, தோடு, வளையல் ஐந்தரைக்குள் சத்யா ரெடி.

கண்ணாடியில் தன்னையே பார்த்துப் பரவசத்துடன் சிரித்துக் கொண்டாள் சத்யா.

இன்று என்ன இவ்வளவு குதூகலம்! வழக்கமாக அப்பா வீடு வரும் வேளையில வெளியே போக நேர்ந்தால் சத்யாவுக்கு வருத்தமாகவே இருக்கும். இன்று என்ன வித்தியாசம். பஃப் சரியாக வந்ததாலா? ஆனாலும்...

குதூகலத்தின் காரணம் தோழி சங்கீதாவின் வீட்டுக்குப் போன பிறகு தான் கொஞ்சம் புரிந்தது. அந்தக் காரணம் ஆறடி உயரத்தில் அங்கே இருந்த அத்தனை பேரையும் விட உயரமாக நின்றது. அவன் பெயர் மாதவன்.

********



**தா**னே கவனமாகக் காரை ஓட்டியபடி தோழி சங்கீதாவின் வீட்டை அணுகுகையில் அங்கே பிறந்த நாள் விழா தொடங்கும் சமயமாகி விட்டது.

சத்யாவைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் ஓடி வந்து வரவேற்றாள் சங்கீதா. பெரும்பாலான விருந்தாளிகள் உடன் பயின்ற தோழிகளே.

சங்கீதாவின் அண்ணனுடைய நண்பர்கள் சிலரும் வந்திருந்தனர்.

அவர்களுள் ஒருவன் மாதவன்.

''மாதவன், எம்.காம்'' என்று அறிமுகம் செய்வித்தாள் சங்கீதா. ''என் தோழி சத்யா, மிஸ்டர் செல்வரத்தினத்துடைய மகள்.''

தாமரை மொட்டாக கரம் குவித்து நிமிர்ந்தாள் சத்யா. உடனே திடுக்கிட்டுத் திகைத்தாள்.

எதிரே நின்றவனது கண்கள் செந்தணல் போல ஜொலிக்கவும் பயந்து போனாள். ஆனால் மறுகணமே அவை நகை புரியவும் நான் கண்டதே கனவோ என்று மயங்கினாள்.

அழகிய பல்வரிசை புன்னகையில் பளபளக்கக் கண்ணில் கனிவுடன், ''எவ்வளவு நேரம் நிற்பீர்கள்? வாருங்கள் உட்கார்ந்து பேசலாம்'' என்று அவளை அழைத்துச் சென்று ஒரு நாற்காலியில் அமர்த்தினான்.

சங்கீதாவிடம் சென்று இரண்டு குளிர்பானத் தம்ளர்களுடன் திரும்பினான்.

அவளிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை அருந்தியபடியே பேசலானான்.

பேச்சு சுவாரசியத்தில் அரைமணி நேரத்தில் அவன் கிளம்பியது அவளுக்கு ஏக்கமாகக் கூட இருந்தது.

ஒரு மணிக்கு மேல் சத்யா கிளம்பினாள். கிட்டத் தட்ட நல்ல இருள் பரவி விட்டது.

அண்ணா நகரில் இருந்து அடையாறு... அடேயப்பா எப்படியும் அரைமணி நேரத்துக்கு மேல் ஆகிவிடும் என்று எண்ணமிட்டபடி காரைத் திருப்பியவள். சட்டென பிரேக் போட்டு நிறுத்தினாள்.

மேலே செல்ல முடியாதபடி எதிரே வேகமாக வந்த ஒரு கார் குறுக்கே திரும்பி நின்றது.

கார் நின்றதும் நில்லாததுமாக ஒருவன் கையில் கத்தியுடன் ஓடி வந்து ''மூச்சு விட்டால் கொன்று விடுவேன் கழற்று நகையை'' என்று மிரட்டினான்.

சினிமாவில் கூட சத்யாவுக்கு 'திரில்லர்' பிடிக்காது. இப்போது நடுநடுங்கிப் போனாள். நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்ளப் பேந்த பேந்த விழித்தாள்.

அதற்குள்ளாக டிரைவர் சீட்டில் இருந்து இறங்கி வந்த இன்னொருவன், ''நகையோடு இவளையும் கொண்டு போலாம்டா'' எனவும் சத்யாவின் விரல்கள் தந்தியடித்தன.

மரத்துப் போன மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்தாள் சத்யா.

இறங்கி ஓடினால் நாலே எட்டில் பிடித்து விடுவார்கள்.

பிரேக்கை ரிலீஸ் பண்ணிக் காரை ஓட்டலாம் என்றால் எதிரே குறுக்காக அந்தக் கார் நின்றது.

'அப்பாவை வரச் சொல்லவா என்று அம்மா கேட்டார்கள். மட்டு மடச்சி மாதிரி வேண்டாம் என்றேனே' என்று புலம்பியது மனம்.

அதற்குள், ''ஏய் சீக்கிரம்'' என்றான் ஒரு முரடன்.

திடுமென ''யாரப்பா அது?'' என்ற அதட்டல் அமுதம் போல் சத்யாவின் காதில் விழுந்தது.

வந்தவன் மாதவன்தான்.



ஒருவன், ''ஓடி விடலாமாடா, வருகிறவன் பலசாலியாய்த் தெரியுது'' எனவும் இருவரும் காரில் ஏறிக்கொண்டு மின்னல் வேகத்தில் பறந்தனர்.

அதற்குள் சத்யாவின் அருகில் வந்து விட்டான் மாதவன். ''யார்? ஓ. மிஸ் சத்யாவா? என்னம்மா விஷயம்? யார் இவர்கள்? ஏன் ஓடுகிறார்கள். அட ஏன் அழுகிறீர்கள்?''

பதில் ஏதும் கூற முடியாமல் கைகளில் முகம் புதைத்து அழுதாள் சத்யா.

''ஷ்... இது என்ன குழந்தைபோல? தைரியமாக இருங்கள். இப்போது என்ன ஆகிவிட்டது? அவர்கள் தான் ஓடி விட்டார்களே? இதற்குப் போய் பயப்படுவார்களா? இந்தாருங்கள் கைக்குட்டை. முதலில் முகத்தைத் துடையுங்கள்'' என்று அன்புடன் கடிந்தபடி தன் கைக் குட்டையை நீட்டினான்.

முகத்தை விட்டுக் கையை எடுத்த சத்யா. ''ஏன்... என்னிடமே இருக்கிறது...'' என்று விக்கியபடியே தன் சிறு லேஸ் கைக்குட்டையை எடுத்தாள்.

அதன் அளவைக் கண்டதும் அவன் சிரித்தான். ''அதை உள்ளே வையுங்கள்... இதை வைத்துத் துடையுங்கள்'' என்று கூறினான்.

பேசாமல் அவன் கைக்குட்டையை வாங்கி முகம் துடைத்தாள் சத்யா.

''நன்றி'' என்று லேசாகச் சிரிக்க முயன்றபடி கைக் குட்டையை மீண்டும் அவனிடம் நீட்டினாள்.

அதை வாங்கி பாண்ட் பாக்கெட்டில் திணித்தபடி ''இனி தைரியமாகப் போய்க் கொள்வீர்கள், இல்லையா?'' என்று கேட்டான் மாதவன்.

அவன் 'தைரியமாக' எனவும் அவள் வயிற்றில் ஏதோ பிசைந்தது.

''வந்து...'' என்று இழுத்தாள்.

''என்ன? என்ன மிஸ் சத்யா என்ன வேண்டும்?''

''வந்து என்னோடு காரில் கொஞ்ச தூரம் வரமுடியுமா? து...துணையாக கொஞ்சம் பயமாகவே இருக்கிறது,'' என்று அவனை உடன் அழைத்தாள்.

லேசாகச் சிரித்தபடி அவள் அருகே ஏறி அமர்ந்தான் மாதவன். ''ஆனாலும் உங்களுக்கு இவ்வளவு பயம் கூடாது. சத்யா. தெரிந்தால் எல்லோரும் உங்களைப் பயந்தாங்குள்ளி என்ற கேலி செய்ய மாட்டார்களா?''

சத்யாவின் முகம் வாடியது. ''சும்மாவே அப்படித்தான் சொல்கிறார்கள். இது வேறு தெரிந்தால் கேட்கவே வேண்டாம்,'' என்றாள் வருத்தமாக.

''தெரிந்தால் தானே?'' என்றான் அலட்சியமாக. ''நீங்கள் யாரிடமும் சொல்லாதீர்கள். நானும்... நான் யாரிடம் சொல்லப் போகிறேன்? நாம் இருவரும் சொல்லாமல் யாருக்குத் தெரியும்?''

''அதானே!'' சத்யாவின் முகம் சட்டென மலர்ந்தது. ''ப்ராமிஸ்? பிராமிஸா யாரிடமும் சொல்லமாட்டீர்களே?'' என்றாள் குழந்தை போல!

''சத்தியமாக!'' என்றான் அவன்.

''தாங்க்ஸ், மெனி மெனி தாங்க்ஸ்'' என்று சிரித்தாள் சத்யா.

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்த அவன் முகம் மாறியது. உதட்டைக் கடித்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தாள்.

★★★★★★★★★



அடிக்கடி என்று இல்லையானாலும் அவ்வப்போது சத்யாவுக்கு இந்த சம்பவம் நினைவு வந்தது. இதை நினைக்கையில் மற்றதை எல்லாம் மறந்து விடுவாள்.

அன்று அப்பா அழைத்தது கூடக் கேளாமல் இதை நினைத்துக் கொண்டு தோட்டத்தில் நின்று விட்டாள்.

பிறகு அப்பாவாக வந்து, ''எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்த ரகசியத் திட்டம்'' என்று சற்று கோபமும் கேலியுமாகக் கேட்ட பிறகுதான் நினைவுக்கு வந்தாள்.

இப்படி நின்று விட்டோமே என்று அவளுக்கு வெட்கம் கூட. இனி இந்த மாதவனை நினைக்கக் கூடாது என்று எண்ணிக் கொண்டாள். ஆனாலும் இந்த மாதவன்தான் எவ்வளவு நல்லவன்! மனம் அங்கேதான் ஓடியது.

அவள் எண்ணத்தை உறுதிபடுத்தும் வகையில் இன்னொன்றும் நடந்தது.

ஒருநாள் சங்கீதா வீட்டிலிருந்து போன் வந்தது. அவள் ஸெட் எல்லாம் உழைக்கும் சிலையருகே வருவதாகவும், இவளையும் வரும்படிச் சொல்லச் சொன்னதாகவும் சொன்னார்கள். ஆறு மணிக்குள் திரும்பி விடலாம், என்று சொல்லவும் சரி என்றாள் சத்யா.

அன்று ஒரு பார்ட்டி, வரத் தாமதம் ஆகும் என்று செல்வரத்தினம் சொல்லியிருந்தார்.

எனவே தாயிடம் சொல்லிவிட்டு கிளம்பினாள் சத்யா.

ஆனால் அங்கே பார்த்தால் சங்கீதாவும் இல்லை. ஒருவரும் இல்லை. 'என்னடா' என்று யோசித்துக் கொண்டு இருந்த போதே மாதவன் வரக் கண்டாள்.

ஆனால் அவன் சத்யாவை இன்னமும் பார்க்கவில்லை. யாரையோ தேடுபவன் போல அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே வந்தான் அவன்.

இவள் அருகில் வந்ததும் திடுக்கிட்டவன் போல நின்றான். "நீங்கள் எங்கே இங்கே சத்யா?" என்று வினவினான் முறுவலோடு.

சத்யா விஷயத்தைச் சொல்லவும் அவனுக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று. அவர்கள் எல்லோரும் இன்று மகாபலிபுரம் போவதாக ரமேஷ் (சங்கீதாவின் அண்ணன்) சொன்னானே?" என்றான் வியப்புடன்.

புரியாமல் குழம்பி விட்டு "நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டாள் சத்யா.

"நானா? இந்த பர்ஸ் இங்கே கிடந்தது. யாராவது தேடுகிறார்களா என்று சுற்றிப் பார்க்கிறேன்" என்றான் அவன்.

சற்று கனமான பர்ஸ்தான். எவ்வளவு நல்லவன் என்று பெருமிதமாக நினைத்தாள் சத்யா.

சில தினங்கள் கழித்து இந்த பெருமிதம் பெரு மகிழ்ச்சியாக மாறியது.

அன்றுதான் அப்பா அவளை அழைத்து "மாதவனுக்கும் உனக்கும் திருமணம்" என்றார்.

ஆனால் சொன்னதைச் சற்று சிரித்த முகமாகச் சொல்லக் கூடாதா? எங்கோ சன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டு மொட்டையாகச் சொன்னார்.

'ஏன்' என்று யோசிக்கும் போதே அவளுக்குப் புரிந்து போயிற்று. மணமாகி விட்டால் மகளைப் பிரிய வேண்டுமே என்ற கவலை. அவள் ஏதோ சொல்ல முயலு முன் அறையை விட்டு வெளியே போய் விட்டார் அருமைத் தந்தை.

********



செல்வரத்தினம் கார் கேட்டைத் தாண்டி உள்ளே வருவதை மாடியில் இருந்து பார்த்த சத்யா அவசரமாக இறங்கி ஓடி வந்தாள்.

காரை விட்டு இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்த செல்வரத்தினம், "அப்பா" என்று அழைத்தபடி ஓடிவரும் மகளைக் கண்டார்.

புருவங்கள் சற்றே நெறிய டையைக் கழற்றியபடி அதிலேயே கவனமாக, "உம்" என்றார்.

சற்றே முகம் சிவந்து தரையைப் பார்த்தபடி, "அப்பா அழைப்பு இதழுக்கு "டிசைன்" இன்னமும் முடிவு செய்யவில்லையே. நான் மூன்று எடுத்து வைத்திருக்கிறேன். நீங்கள் பார்த்து அதில் ஒன்றை தேர்ந்து..."

"தேவையில்லை" என்று இடைமறித்தார் தந்தை.

திகைப்புடன் நிமிர்ந்த மகளைப் பாராமல் கையில் கிடந்த கோட் பையில் டையைத் திணித்தபடி அவர் சொன்னார். "நீயே ஒன்றைத் தேர்ந்து எடுத்து, அதை ராமனிடம் கொடு. எழுத வேண்டிய வாசகத்தை நான் அவரிடம் சொல்லிக் கொள்கிறேன்" என்றவர், கோர்ட்டுக்காகக் கை நீட்டிய மகளைக் கவனியாதவர் போல, தன் அறையை நோக்கி விரைவாகச் சென்று விட்டார்.

சத்யா ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

கலங்கித் திகைத்த முகம் மறுகணமே மலர்ந்தது.

"பாவம் அப்பா" என்று தனக்குள்ளேயே கூறிக் கொண்டு தந்தையின் வலக் கையான ராமனைத் தேடிச் சென்றாள்.

திருமண அழைப்பிதழின் பொறுப்பை ராமனிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்புகையில் சத்யாவுக்கு ஒரே யோசனை. பெண்ணைப் பெற்றுவிட்டால் என்றேனும் ஒரு நாள் அவளைப் பிரிந்துதானே ஆக வேண்டும்? உலகம் அறிந்தவர்; வெற்றி பெற்ற தொழில் அதிபர் - அவர் ஏன் கலங்க வேண்டும்?

திருமணம் பற்றிப் பேசினாலே முகம் மாறி விடுகிறது. மகளைப் பிரிய நேரிடுமே என்று கலங்கி விடுகிறார் போலும். ஆனால், பேசித்தானே ஆக வேண்டும்?

அம்மாவோ உடல்நிலை சரியில்லாமல் படுக்கையை விட்டே நகர்வதில்லை. அப்பாவோ திருமணத்திற்காக,

''மாதவனைத் தெரியுமா?'' என்று அவளிடம் கேட்ட நாளில் இருந்து அவளை நிமிர்ந்து கூடப் பேசவில்லை.

ஒருவனை மணந்துகொண்டு அவரிடம் இருந்து பிரிய சத்யா தயாராக இருக்கிறாளே மகள் மீது அவருக்குக் கோபமோ என்றும் சத்யாவுக்குத் தோன்றியது.

என்னவோ மொத்தத்தில் அப்பா அன்னியமாகிப் போனார் என்று நினைத்தாள் சத்யா. அடுத்த வீட்டுப் பெண் ஆகப்போகிறாள் என்ற எண்ணத்தினாலோ!

''அய்யோ அப்பா, எத்தனை உறவுகள் வந்தாலும் என் அப்பா நீங்கள் தானே. உங்கள் இடத்தை ஒருவரால் பறிக்க முடியுமா?'' மனத்திற்குள் தந்தையோடு பேசினாள் சத்யா.

சத்யா என்றைக்கும் அப்பாவின் மகள் அல்லவா? எதற்கும் அவளுக்கு அப்பாதான் வேண்டும். அவருக்கும் அப்படித்தான். காலையில் ''ப்ரீஃப்கேசை''க் கையில் கொடுத்து அனுப்புவது போலவே மாலையில் கோட்டை வாங்கி மாட்டவும் அவள்தான் வரவேண்டும்; சுமார் ஒரு வாரத்துக்கு முன்பு வரை.

திருமணப் பேச்சு வந்ததில் இருந்து எல்லாமே மாறிப் போயிற்று. ஆனாலும் இந்த அப்பா இவ்வளவு தடுமாறத் தேவையில்லை.

பெருமூச்சு விட்ட தமக்கையை அங்கே வந்த சித்ரா கண்டாள். ''என்னக்கா? அவ்வளவு நெடிய மூச்சு? அதற்குள் குடும்ப பாரம் தாங்க முடியவில்லையா?'' என்றாள் கேலியாக.

''போடி'' என்று முகம் சிவந்தாள் சத்யா.



''அதெல்லாம் ஒன்றுமில்லை. எல்லாம் இந்த அப்பா அடிக்கிற கூத்துதான்'' என்றாள் சலிப்பும் சலுகையுமாக.

சித்ராவின் முகம் மாறியது. ''என்ன கூத்தக்கா?''

''திருமணம் ஆகிவிட்டால் நான் எங்கேயோ கண் காணாமல் போய்விடப் போவது போல அப்பாவுக்கும் கலக்கம். அப்படி எங்கே போவேனாம்? இங்கே நம் கம்பெனியிலேயே அவருக்கு ஒரு வேலை கொடுத்துவிட்டால், இங்கேயே இருந்துவிடப் போகிறேன். இவ்வளவு சாதாரண விஷயம் புரியாமல் எந்நேரமும் முகத்தைத் தூக்கிக் கொள்கிறார். வான்முகட்டைப் பார்த்துக் கொண்டு பேசுகிறார். கல்யாண வேலைகள் ஒன்றுமே நடக்கக் காணோம். கேட்டால் ''ராமனிடம் சொல்லு'' என்கிறார். சேலை வாங்குவதையும் சூட் தைப்பதையுமா ராமன் பார்ப்பார்?'' என்றாள் கன்னங்களில் செம்மையுடன்.

சித்ரா சகோதரியைக் கூர்ந்து பார்த்தாள். கண்களில் வருத்தம் கலந்த பரிவு தோன்றியது. ''இனி அப்பாவை மாற்ற முடியுமா, அக்கா? நாம் பார்க்கலாம். உன் திருமணம் என் பொறுப்பு'' என்று சத்யாவை அழைத்துச் சென்றாள்.

அன்று இரவில் தாயை அணுகிப் பார்த்தாள் சத்யா.

அது பழக்கமற்ற ஒன்று.

சத்யா பிறந்த ஓர் ஆண்டு இடைவெளியிலேயே சித்ராவும் பிறந்துவிட்டாள். சித்ரா உண்டான போது விஜயாவின் உடம்பு பெரிதும் நலிவுறவே சத்யாவை வளர்க்கும் பொறுப்பை செல்வரத்தினம் முழுக்க முழுக்கத் தானே ஏற்றுக் கொண்டார்.

''ஓர் ஆயா...'' என்ற மனைவியின் முணுமுணுப்பைக் காதில் வாங்கிக் கொள்வதே இல்லை. பால் கரைப்பார். புகட்டுவார். அழுக்குத் துணி மாற்றக்கூட அவர் அஞ்சவில்லை.

சத்யா முதல் முதலில் சிரித்ததே தந்தை முகம் பார்த்துத்தான். பேச்சு மூச்சு எல்லாமே அவருக்கு சத்யாதான்.

சித்ரா பிறந்தவுடன் வேறு குழந்தை பிறவாது என்ற நிலை விஜயாவுக்கு ஏற்பட்டுவிடவும் அவள் அம்மா பெண் ஆனாள்.

ஆனால், விஜயா தாயாக மட்டும் இருக்கையில் செல்வரத்தினம் தாயும் தந்தையுமாக இருந்தார் சத்யாவுக்கு. பிள்ளை கீழே விழுந்தால், ''எழுந்து கைகால்களை உதறிக் கொள்'' என்பாள் விஜயா. ஆனால் செல்வரத்தினமோ ஓடோடிப் போய்த் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு 'வலிக்கிறதா, கண்ணே' என்று உருகுவார். மகள் தன்னம்பிக்கை அற்ற கோழையாகிவிடக் கூடும் என்று எச்சரித்து அலுத்துப் போய் விட்டுவிட்டாள் விஜயா.

செல்வரத்தினத்தின் பேச்சு மூச்சு எல்லாம், 'சத்யா' என்று ஆனது போலவே சத்யாவும் அப்பாவைச் சார்ந்து நிற்பாள். காலையில் அப்பாவுக்குக் காப்பி கலந்து தருவது, பைல் எடுத்து வைப்பது, உணவு பரிமாறுவது போன்றவைகளோடு மட்டும் நிற்கவில்லை. தொழிலில் தொடர்பான முக்கியமானவற்றை டைப் செய்வது போன்ற வேலைகளையும் செய்வாள். தந்தை 'குட்' என்றால் அன்று முழுவதும் ஆனந்தத்தில் மிதப்பாள்.

அவ்வளவு தூரம் அப்பா, அப்பா என்று இருந்தவள் அந்த அப்பாவை அணுக முடியாமல் போகவே தாயிடம் வந்தாள். இயல்பாக ரோஜா நிறம் கொண்ட தாயின் முகம் கன்றி கண்கள் சிவந்திருக்கக் கண்டாள். ''காய்ச்சல் இன்னமும் இருக்கிறதா அம்மா?'' என்று பரிவுடன் வினவியபடி படுக்கை அறையில் நெருங்கினாள்.

''குறைந்திருக்கிறது. ஓய்வாகத் தூங்கப் போகிறேன்'' என்று விழிகளை மூடிக் கொண்டாள், அந்த அம்மாள். ஓசை எழுப்பிவிடாமல் கவனத்துடன் சத்யா தாயின் அறையை விட்டு வெளியேறினாள்.

சித்ரா என்ன செய்தாலோ, திருமண வேலைகள் இப்போது நடந்தன.



அன்று இரவில் மாதவனைப் பற்றி நினைத்துக் கொண்டே வெகுநேரம் மொட்டை மாடியில் நின்று விட்டாள், சத்யா, கடைசியாக அதே கனவு மயக்கத்தில் இறங்கி வரும்போது தாயின் அறையில் பேச்சுக் குரல் கேட்டது.

''ஆனாலும் நீங்கள் செய்வது அநியாயம். அப்பா சத்யாவைப் பார்த்தால் பாவமாகக்கூட இருக்கிறது'' என்றாள் சித்ரா அழுத்தம் திருத்தமாக.

தன் பெயர் காதில் விழவும் சத்யா நின்றாள்.

மேலே தந்தையின் குரல் கேட்டது. ''சித்ரா கண்ணு சத்யா மேல் எனக்கு எவ்வளவு பாசம் என்று உனக்குத் தெரியாதா? உன்னை விட இருமடங்கு அன்பை அவளிடம் செலுத்தினேன். கடைசியில்... பிள்ளையைப் பிள்ளையாக மதியாமல் உயிராய் நினைப்பவர்கள் கதி இது தான்.''

''போதுமே, இப்படியே உங்களையே வதைத்துக் கொள்கிறீர்களே. உடம்பு பாதியாகி விட்டதே'' என்றது தாயின் கண்ணீர்க்குரல்.

''என்னைச் சொல்லு! நீ படுக்கையிலே விழுந்துவிட்டாயே, விஜி, சித்ரா, அம்மாவுக்கு மருந்து நேரம் ஆகிவிட்டது பார். கூடவே ஒரு கப் ஆர்லிக்ஸ் கரைத்துத் தரச் சொல்லி எடுத்துவா.''

தந்தையின் குரலைத் தொடர்ந்து வெளியே வந்த சித்ரா, வெளியில் சத்யாவைக் காணவும் திடுக்கிட்டாள்.

உதட்டின்மேல் விரலை வைத்து ஜாடை காட்டிவிட்டு அவளை அழைத்துச் சென்றாள் சத்யா,

தன் அறைக்குள் சென்றதும் தங்கையின் தோள்மீது விசித்தாள்.

பெற்றோரின் வேதனையுடன் சத்யாவின் கண்ணீரைக் காணவும் சித்ராவுக்கு அந்த மாதவன் மேல் கோபம் பொங்கியது. குதூகலமாக இருந்த இந்த வீட்டில் இவ்வளவு தூரம் வேதனையை உண்டாக்க அவனுக்கு என்ன உரிமை என்று ஆத்திரம் உண்டாயிற்று.

''அக்கா. அவரை உனக்கு மிகமிகப் பிடித்திருக்கிறதா?'' என்று வினவினாள் சித்ரா.

''ஆமாம்'' என்று மெல்லிய தளிர் விரல்களால் முகத்தை மூடிக் கொண்டாள் சத்யா.

''ரொம்ப நாளாக அவரைத் தெரியுமா?''

''இல்லையடி, கொஞ்ச நாளாகத்தான். நம் சங்கீதா வீட்டில்தான் முதலில் பார்த்தேன். அப்புறம் அங்கு இருந்து திரும்பி வரும்போது ஒரு திருப்பத்தில் ஒரு கார் குறுக்கே வந்து நின்றது. இரண்டுபேர் வந்து ''கழற்று நகையை'' என்றார்கள். ஒருவன் ''இவளையே கொண்டு போகலாம்'' என்றதும் நான் நடுங்கிப் போனேன், எப்படியோ இவர் சமயத்தில் வந்து என்னைக் காப்பாற்றி விட்டார், அப்புறம் அன்று சங்கீதா வரச் சொன்னதாக யாரோ தப்பாகச் சொல்லி கடற்கரைக்குப் போனேனே, அங்கே அவர் ஒரு பர்சைக் கண்டு எடுத்து உரியவரிடம் சேர்ப்பிக்க அலைந்து கொண்டு இருந்தார்... ரொம்ப நல்லவர்!''

இதெல்லாம் நாடகமாகவும் இருக்கக் கூடுமே. மேலும் நல்லவர் என்று பூரித்துப் போகிறவள் எப்படி... இப்படி? பொருந்தவில்லையே, காதல் என்றால் நியாய அநியாயங்கள் மதிப்பு இழந்து போகுமா? ஒரு பெருமூச்சுடன் சித்ரா எழுந்தாள். ''அம்மாவுக்கு ஆர்லிக்ஸ் கொடுக்க வேண்டும்.''

''நான் கொண்டு வரட்டுமா, சித்ரா?'' என்று ஆவலுடன் கேட்டாள், சத்யா.

''வேண்டாம், வேண்டாம்'' என்று அவசரமாக மறுத்தவள், தொடர்ந்து சமாதானமாக, ''நீ உன் மாதவனை நினைத்துக் கொண்டு இரு. இதெல்லாம் நானே பார்க்கிறேன்'' என்று முறுவலித்தாள்.

''போடி'' என்று முகம் சிவந்தாள் சத்யா.

திருமணம்கூட திருத்தணியில் வெகு அமைதியாக நடந்தது. உடல் நலம் இழந்த தாயார் வரவும் இல்லை. நெஞ்சில் சிறு



வேதனையுடனே இரவில் தனியறை சென்றவள் கணவன் கால்களில் பணிந்தாள்.

அவன் சொன்னான்...

''கோடீஸ்வரர் செல்வரத்தினத்தின் குலக் கொழுந்து கேவலம், நானூறு ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு கூலிக்காரனின் காலில் விழுவதா? சேச்சே! பொருத்தமே இல்லை.''

குத்தலாகக் கூறிக்கொண்டே விலகி நின்றான்.

அதிர்ச்சியுடன் அவனை அண்ணாந்து பார்த்தாள் சத்யா!

## 2

ஆசையுடன் பாலைப் பருகும்பொழுது, சூடான அந்தப் பால் நாக்கைச் சுட்டு விட்டால் எப்படியிருக்கும்?

அப்படி ஆகிவிட்டாள், சத்யா.

முதல் இரவு-

'ஆண்களுக்கு மீண்டும் வரக் கூடும்.'

ஆனால் சத்யா போன்ற பெண்களுக்கு வாழ்க்கையில் ஒரே ஒரு நாள் மட்டும் வரக்கூடிய திருநாள் அது.

எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்தாளோ, அவ்வளவு ஏமாற்றம் அடைந்தாள் சத்யா. மாதவனின் கடுமையிலும் குத்தலிலும் அவள் கலங்கிப் போனாள்.

ஒன்றுமே புரியாமல் திகைப்பும் கலக்கமுமாக நோக்கிய அவள் விழிகளைக் கண்டதும் அவனுக்கு என்ன தோன்றியதோ, சட்டென அருகில் வந்து அவள் கைகளைப் பற்றி எழுப்பி நிறுத்தினான்.

முகவாய்க்கடியில் விரலைக் கொடுத்து அவள் முகத்தை நிமிர்த்தி அவள் கண்களுக்குள் எதையோ தேடினான்.

''இந்த ஏழையை மணக்க உனக்கு வருத்தமாக இருந்ததா சத்யா?'' என்று வினவினான்.

''நான் அதெல்லாம் நினைக்கவே இல்லையே. ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?'' என்று விளங்காமல் கேட்கையிலேயே அவள் விழிகள் நீரால் நனைந்தன.

குனிந்து, அவள் விழிநீரை உதடுகளால் ஒன்றி எடுத்தான் மாதவன்.

மறுநாள் காலையில்...

கணவனின் தேவைகளைக் கவனித்துவிட்டு ஒரு புதுப் பெண்ணின் நாணத் தயக்கத்துடன் தந்தையை நாடிச் சென்றாள் சத்யா.

வெளியில் இரு கார்கள் கிளம்பத் தயாராக நின்றன. ஒன்றின் அருகே செல்வரத்தினம் நின்று கொண்டு இருந்தார்.

''என்னப்பா?'' என்று வியப்புடன் அருகில் சென்றாள் சத்யா.

செல்வரத்தினம் எங்கோ பார்த்தபடி பேசினார்; ''நான் அவசரமாகப் போக வேண்டும். வேலை இருக்கிறது. ராமன் உன்னை உன்... அங்கே காஞ்சிபுரத்தில் கொண்டு விடுவார். அவரிடம் மூவாயிரம் ரூபாய் கொடுத்து இருக்கிறேன். தேவைப்படுகிற சாமான்களை வாங்கிக் கொள். இப்போது நான் கிளம்புகிறேன்'' என்று டிரைவருக்கு ஜாடை செய்து விட்டுக் காரில் ஏறினார்.

சத்யா விழி அகல விழித்தாள்.

புதுப் பெண்ணிடம் பரிவில்லை. பிரியமில்லை. வீட்டிற்கு அழைத்துப் போகவில்லை. வீட்டுக்கு வா என்ற வார்த்தை கூட இல்லை.

மூவாயிரம் ரூபாய் - செல்வரத்தினத்தின் மகளுக்குச் சீர் செய்ய இந்தப் பணம் எந்த மூலைக்குப் போதும்? ஒரு ஃபிரிட்ஜ் வாங்கப் போதாதே!



எங்கோ பெரிய தவறு நடந்திருப்பதை சத்யா அப்போதுதான் உணர்ந்தாள். அளவு மீறிய அன்பினால் தந்தை ஒதுங்கவில்லை; அவளுக்கு விவரம் தெரியாத வெறுப்பினால்தான் அவர் விலகிப் போயிருக்கிறார் என்பதை அறிந்தாள்.

ஏன்? என்ன நடந்தது? அப்பாவுக்கு அவளிடம் வெறுப்பு வர முடியுமா? எப்படி முடியும்?

என்னவென்று கேட்டு வெறுப்பை மாற்றிவிடும் வேகத்துடன் ''அப்பா'' என்று அழைத்து அவசரமாக ஓர் எட்டு வைத்தாள்.

ஆனால், வலிய கரம் ஒன்று அவள் தோளை அதிகாரத்துடன் பற்றி நிறுத்தியது.

விடுவித்துக் கொள்ள முயன்றபடி திரும்பிப் பார்த்தாள் சத்யா.

அது அவளுடைய கணவனின் கரம். என்ன கடினமான விழிகள்! ''நில்'' என்றான் அவன் அதட்டலாக.

மீறிச் செல்ல முடியாமல் சத்யா தவிப்புடன் திரும்பிப் பார்க்கையிலேயே தந்தையின் பெரிய வெண்ணிறக் கார் வழுக்கிக் கொண்டு ஓடலாயிற்று. கண்ணீருடன் சித்ரா கையசைப்பது தெரிந்தது. பதிலுக்குக் கையாட்டக்கூடத் தோன்றாமல் விக்கித்து நின்றாள் சத்யா.

''சத்யாம்மா, இந்த காரில் உன்னைக் காஞ்சிபுரத்துக்கு அழைத்துப் போகச் சொன்னார், அப்பா. கிளம்புகிறாயா, குழந்தை!'' என்று பரிவுடன் வினவினார் ராமன்.

குழப்பத்துடன் கணவனைப் பார்த்தாள் சத்யா.

உதடுகளில் ஓர் ஏளன முறுவலுடன், ''ஏறு'' என்று காரைக் காட்டினான் மாதவன்.

''பெட்டி எல்லாம்...''

''சித்ராம்மா எடுத்துவைத்தாளம்மா'' என்றார் ராமன்.

பணிவுடன் கார் அருகில் சென்றாள், சத்யா. டிரைவர் ஓடி வந்து, கார் கதவைத் திறந்து விட்டான்.

அவன் கண்களில் என்ன கண்ணீரா?

ஒரு காரோட்டியின் பாசம் கூடப் பெற்றவருக்கு இல்லாமல்போக, அவள் என்ன தப்பு செய்திருக்கக்கூடும்!

காஞ்சியை அடைந்த பின் மாதவன் காரோட்டிக்கு வழி சொன்னான்.

ஒரு குறுகலான தெருவில் அடுத்தடுத்து ஒட்டினாற்போல அமைந்திருந்த வீடுகளைக் கண்டதும், சத்யா மிரண்டாள். ஏதோ, அடர்ந்த காட்டினுள் வழி அறியாமல் சிக்கியது போல...

பெரிய புல்வெளித் தோட்டத்தின் நடுவே தந்தையின் பெரிய அழகிய வீடு தானாக மனதில் தோன்றியது. ஒரு தனியான வீட்டை அப்பா ஏன் அவளுக்கு அளிக்கவில்லை. இந்த.... இந்த...

''என்ன? சேரி மாதிரி இருக்கிறதோ!'' என்றான் மாதவன் கிண்டலாக.

சட்டென முகபாவத்தை அடக்கினாள் சத்யா. நின்று விட்டிருந்த காரை விட்டு இறங்கினாள்.

அந்த மாதிரி கார் அங்கெல்லாம் வருவதே இல்லையோ... அக்கம் பக்கத்து வீட்டினர் வேடிக்கைப் பார்க்கக் கூடினார்கள். சொல்லொணாச் சங்கடத்துடன் சத்யா மாதவனை ஒட்டி நின்றாள்.

யாரோ ஒருவர் தொந்தியும் தொப்பையுமாக அருகில் வந்தார். ''புதுப் பொண்டாட்டியா, மாது ரொம்ப அழகாயிருக்காளே. பணக்காரி போலிருக்கு'' என்று சத்யாவின் நகைகளை உன்னிப்பாகப் பார்த்தார்.

''இல்லை. இதெல்லாம் இரவல் நகை'' என்றான் மாதவன்.

கதவைத் திறந்து, ''உள்ளே போ'' என்று சத்யாவிடம் கூறினான்.



''பிறகு பார்ப்போம்'' என்று அந்த மனிதரை அனுப்பிவிட்டு, அவனும் உள்ளே வந்தான்.

சாதாரணமான ஓர் அறை. முன்புறமாக ஒரு சன்னல் இருந்தது.

மாதவனின் பெட்டிகளையும், சத்யாவின் இரு பெரிய பெட்டிகளையும் டிரைவர் உள்ளே கொண்டு வந்து வைத்தான்.

அவன் வெளியே சென்றதும் ''அந்தப் பெட்டிகளில் என்ன இருக்கிறது?'' என்று ராமனிடம் கேட்டான் மாதவன்.

''சத்யாவின் துணிகள்தான்...'' என்று தடுமாறினார் அவர்.

''சரி, இருக்கட்டும்'' என்றவன் ''சத்யா, இங்கே வா'' என்று அழைத்தான்.

உன் தாலி தவிர மற்ற நகைகளை எல்லாம் கழற்று'' என்று கட்டளையிட்டான்.

''தம்பி...'' என்று குறுக்கிட்டார் ராமன்.

''யாருக்கு தம்பி? உமக்கா?'' என்றான் அவன் ஏளனமாக.

''மாப்பிள்ளை சார் நல்ல நாளும் அதுவுமாக காது கை எல்லாம் மொட்டையாக்காதீர்கள்.''

அவர் பேசாதது போல பாவித்து ''கழட்டுடீ'' என்று அதட்டினான் மாதவன்.

இருண்ட காட்டில் சிங்கம் உறுமுகிறது! சத்யா மிரண்டு போனாள். ராமனும் கூடத்தான்.

ராமன் கரம் குவித்துக் கெஞ்சினார். ''சார் காதுத் தோடும் கைக்கு ஒரு வளையலும் மட்டுமேனும் இருக்கட்டும். அவள், அந்தக் குழந்தை பூவும் பொட்டுமாக வாழட்டும்...'' என்று மன்றாடினார்.

அந்த ஒரு ''டீ''யில் உடல் கூசிக் குறுகிப் போன சத்யா எந்தப் பேச்சையும் கவனிக்கவில்லை. நடுங்கும் விரல்களால் வேகமாக நகைகளைக் கணவனிடம் நீட்டினாள்.

காதுத் தோடுகளையும் ஒரு ஜோடி வளையல்களையும் எடுத்து ''அணிந்து கொள்'' என்று அவளிடம் கொடுத்துவிட்டு, மற்றவற்றை அவன் ஒரு பொட்டலமாகக் கட்டினான்.

ராமனின் கைகளில் திணித்துக் ''கொண்டு போய் உம் முதலாளியிடம் கொடும். போம்'' என்றான்.

''சத்யாம்மாவுக்குக் குடித்தனம் வைக்க என்று மூவாயிரம் ரூபாய்...''

''அதையும் அவரிடமே திருப்பிக் கொடும். இரும்புப் பெட்டியில் போட்டுப் பூட்டி வைக்கட்டும்'' என்றான் மாதவன், அலட்சியமாக, ''இனி நீங்கள் போகலாம்'' என்று விரட்டினான்.

''வரட்டுமாம்மா?'' என்று விடை பெறுகையில் ராமனின் விழிகள் கலங்கிக் கண்ணீர் சொரிந்தன.

தடுக்க முயன்றும் முடியாமல் சத்யாவின் கண்களும் கலங்கின!

தந்தையிடம் சம்பளம் பெற்று வேலை செய்யும் ஒருவரின் பாசம்கூடப் பெற்ற தந்தைக்கு இல்லையே! ஏன் ஏன் இப்படிச் செய்தார்?

மாப்பிள்ளை என்பவரின் குணம் பார்க்கவில்லை? குலம் பார்க்கவில்லையா? பின்னணி ஆராயவில்லையா? ஏன்? ஏன்? ஏன்?

''டீ'' போட்டு பேசுகிற ஒருவனா சத்யாவின் கணவன்? சுமையை இறக்கித் தள்ளிவிட்டு ஓடுவது போல் ஏன் இந்த வெறுப்பு?

இங்கே சத்யாவுக்கு யார் துணை?

பயங்கர மிருகங்கள் நிறைந்த இருண்ட காட்டில் தனித்து மாட்டிக் கொண்டது போல் சத்யாவின் அடி வயிற்றில் ஒரு திகில் எழுந்தது.

ஏதோ ஆறுதல் போல பழைய வாழ்வின் தொடர்பான காரை கண் மறையும் மட்டும் பார்த்துக் கொண்டு நின்றாள்.



''காரிலேயே போய் விட்டிருக்கலாம் போல இருக்கிறதா?'' என்று மாதவனின் குரல் பிசிறடித்தது.

திணறிப் போய்த் திரும்பி 'இல்லையே' என்றாள் சத்யா அச்சத்துடன்.

பாண்ட் பாக்கெட்டில் கைகளை விட்டுக்கொண்டு கால்களை அகல விரித்து நின்ற அவனது கோலம் அவளது அச்சத்தை சற்றும் குறைக்கவில்லை.

அவளையே பார்த்தபடி ''சரி சரி போய் வேலைகளைப் பார்'' என்றான்.

''என்ன வேலைகள்?''

வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டுமா? சுத்தமாகத்தான் தோன்றியது.

ஒரு வேளை கழுவிவிட வேண்டுமோ? ஆனால் அதை வேலைக்காரி செய்ய மாட்டாளா?

சமையல் செய்ய வேண்டுமோ? சமையல் ஆளைக் காணவில்லையே. உதவிக்கு ஆள் இல்லாமல் எப்படி சமையல் செய்வது.

எதுவும் தோன்றாமல் அவனிடம் கேட்க தைரியம் இல்லாமல் மலங்க மலங்க விழித்துக் கொண்டு நின்றாள், சத்யா.

''அப்பா இங்கே எனக்குப் பயமாக இருக்கிறதே அப்பா! அப்பா!'' என்று புலம்பியது அந்த பேதையின் உள்ளம்.

## 3

திருமணத்திற்கு முன்பாக மாதவனைச் சந்திக்க நேர்ந்த மூன்று சந்தர்ப்பங்களையும் நினைத்துப் பார்த்தாள் சத்யா.

அந்த மாதவனுக்கும் இந்தக் கடுவன் பூனையாக உறுமும் மாதவனுக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும் அளவுக்கு ஓர் ஒற்றுமைகூட இல்லையே!

அவனிடம் எதுவும் கேட்கும் துணிவு அற்று அந்த அறையின் பின்புறக் கதவைத் திறந்தாள் சத்யா.

அது பார்த்தால் சமையல் அறை போல இருந்தது. பின்னே வரவேற்பு அறை, ஹால், படுக்கை அறை இதெல்லாம்? ஒரே ஓர் அறையும் சமையல் அறையும் மட்டும் வீடு ஆகுமா? முக்கியமாக ஒரு குளியலறை வேண்டாமா? இது... இதுவா வீடு சத்யா மீண்டும் மிரண்டாள்.

''இந்தக் குடிசையில் எப்படி வாழ்வது என்று பார்க்கிறாயா?''

கணவன் குரல் கேட்கவும் திடுக்குற்றாள், சத்யா.

''பாவம் லட்சாதிபதி செல்வரத்தினத்தின் அருமை புதல்வி அல்லவா? கஷ்டம்தான்'' என்றான் அவன் தொடர்ந்து கேலியாக.

இவன் ஏன் இப்படி குத்திப் பேச வேண்டும்? அவள் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே.

புலியின் கூரிய நகங்கள் போன்று அவனது வார்த்தை தன் நெஞ்சைக் கீறினாற்போல் உணர்ந்தாள் சத்யா. வேதனையை அடக்கிக் கொண்டு, ''நான் ஒன்றும் சொல்லவில்லையே'' என்றாள் அழமாட்டாத குறையாக.

''பின்னே வேலையைப் பாராமல் மரக்கட்டை மாதிரி நிற்கிறாயே.''



சத்யாவின் பார்வை மீண்டும் அறையை வலம் வந்தது.

அடுப்படியில் காஸ் அடுப்பும் இல்லை. மின் அடுப்பும் இல்லை. ஒரு மண்ணெண்ணெய் அடுப்பு இருந்தது.

பக்கத்தில் ஓர் அலமாரி ஒன்று. அதில் சில டப்பாக்கள். கீழே சில பாத்திரங்கள். ''மிக்சி'' இல்லை பதிலாக ஓர் அம்மி, ஆட்டுக்கல்...

பார்க்கப் பார்க்க சத்யாவுக்கு வயிற்றுள் குளிர் எடுத்தது.

உதட்டைக் கடித்துக் கொண்டு அடுப்படி பக்கம் போனாள். ஸ்டவ் அருகில் எண்ணெய் டின் இருந்தது. மண்ணெண்ணெய் அடுப்புக்கு எண்ணெய் ஊற்றினால்தான் எரியும் என்பது புரியும் அளவுக்கு புத்தி இருந்தது!

எண்ணெய் ஊற்றுவதற்குரிய திருகு மூடியைக் கழற்றினாள். ஸ்டவ் புதிது. பெயின்டில் சிக்கிக் கொண்ட மூடி அசையவில்லை. விரல் கன்றியதுதான் மிச்சம்.

அடுப்பில் எண்ணெய் ஊற்றக்கூட முடியாமல் சமைப்பது எப்படி? அழுகை வரும்போலச் சத்யாவுக்கு உதடு துடிக்கலாயிற்று.

அப்போது அவனுடைய கரம் அவளை விலக்கி நிறுத்தியது. ஒரு சின்ன ஸ்பானரை எடுத்து மூடியைப் பற்றித் திருகினான். எண்ணெய் டின்னை எடுத்து எண்ணெய் ஊற்றி மூடினான். பானர்களை அகற்றித் திரிகளை எண்ணெயில் நனைத்தான். ''முதலில் சோறு பொங்கி விடுகிறாயா?'' என்று சத்யாவிடம் கேட்டான்.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு ''குக்கர் இல்லையே...'' என்று பயத்துடனேயே இழுத்தாள், சத்யா.

''ஆயிரக்கணக்கில் சாலை ஓரமாக உங்கள் சென்னையில் கிடக்கிறார்களே, அவர்கள் எல்லாம் எப்படிப் பொங்குகிறார் களாம்?'' என்றான் அவன் சூடாக.

சத்யா வீட்டில் எப்போதும் ''குக்கர்'' சமையல்தான். திருமணம் என்று அவசரமாகச் சமையல் பயின்றபோது அதே மாதிரிதான்

கற்றுக் கொண்டாள், அவள். இப்போது தைரியமாகச் செய் என்றால் எப்படிச் செய்வது?

அவ்வளவு நேரமாக அடங்கிய கண்ணீர் வெடித்துக் கொண்டு வந்தது. விம்மி அழவும் பயந்து வேறுபுறம் திரும்பி ஓசையின்றிக் கண்ணீர் சொரியலானாள்.

சற்றுப் பொறுத்து, ''அந்த பானையில் தண்ணீர் இருக்கிறது. எடுத்து முகம் கழுவிக் கொண்டு வா, அதோ அந்த மூலையில் கழுவு'' என்று சமையல் அறையின் ஒரு மூலையைக் காட்டினான், மாதவன்.

அவள் இயந்திரம் போல இயங்கினாள்.

அவள் திரும்பி வந்ததும், முன் அறைக்கு அவளை அழைத்துச் சென்றான். ''பார் சத்யா, இனி நீ லட்சாதிபதி செல்வரத்தினத்தின் மகள் அல்ல. மாதம் நானூறு ரூபாய் சம்பாதிக்கும் மாதவனுடைய மனைவி. இங்கெல்லாம் நம் வேலையை நாம் தான் செய்ய வேண்டும். கூப்பிட்ட குரலுக்கு வேலையாள் யாரும் வரமாட்டார்கள். அதே போல் நகரத்தில் அழுக்கு படாமல் ஸ்விட்சைத் தட்டி விட்டு அரைப்பது சமைப்பது என்று முடியாது தெரிந்ததா?'' என்றான், அமைதியாக.

அவன் குரல் சற்றுத் தணிந்திருக்கவே, பெரும் ஆறுதலாகத் தலையை ஆட்டினாள் சத்யா.

''வா, இன்று எல்லாம் நான் உனக்கு கற்றுத்தருகிறேன்'' என்று அவன் கூறவும், சத்யாவின் விழிகள் வியப்பால் விரிந்தன. அவள் அப்பா சமையல் அறைக்குள் நுழைந்ததே கிடையாது. அவன் சமையலைக் கற்றுத் தருகிறேன் என்கிறானே!

அவன் புன்னகை செய்தான். ''என்ன விழிக்கிறாய். பி.காம். எம்.காமில் எல்லாம் சமையல் கூட கற்றுத் தருகிறார்களா என்றா? பாரேன். இன்று என் விருந்து நாளையில் இருந்து உன் பொறுப்பு. இப்போது குடத்தில் தண்ணீர் எடு'' என்றான்.



அவள் புன்னகையில் மனம் குளிர்ந்து போனாள் சத்யா. அவசரமாகக் குடத்தைத் தூக்கியவள் மீண்டும் விழித்தாள். ''குழாய் இல்லையே?''

''தேவுடே!'' என்ற தலையில் போட்டுக் கொண்டான். அவன், ''வெளியே கிணறு இருக்கிறது. வாளி, கயிறு அதிலேயே இருக்கும். நீர் எடுத்து இந்தக் குடத்தில் ஊற்றி எடுத்து வர வேண்டும். எப்படி நீர் எடுப்பது என்றும் கேட்பாயா?'' என்றான் கிண்டலாக.

''சினிமாவில் பார்த்திருக்கிறேன்'' என்று குடத்தைத் தூக்கிக் கொண்டு, சமையல் அறையின் மறுபுறக் கதவைத் திறந்து சென்றாள் சத்யா.

ஒரு குடம் நீர் இறைக்குமுன் அவள் கை சிவந்து போயிற்று. அதைவிட மற்ற வீட்டினர் வேடிக்கை பார்த்ததுதான் அவளுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. குனிந்த தலை நிமிராமல், இடையில் நில்லாமல் நழுவிய குடத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு வேகமாக உள்ளே வந்தாள், ஒரு வழியாக.

''இப்படிச் செய்!..'' என்று அரிசி எடுத்து உலையில் இட்டும், புளி கரைத்தும் அவன் கற்றுத் தருவதை ஆச்சரியமாகப் பார்த்தாள் சத்யா.

அவளைப் பார்த்து சிரித்தவாறு ''கண்களை இவ்வளவு விரிக்கிறாயே சத்யா! ஒரு ஆண்பிள்ளைக்கு இதெல்லாம் தெரிகிறதே என்றா? என்ன செய்வது? இந்த வேலை எல்லாம் செய்யாவிட்டால், எனக்கும் என் அம்மாவுக்கும் என் மாமா வீட்டில் சோறு கிடையாதே. முதலில் அம்மாதான் செய்தார்கள். அம்மா நோயில் விழுந்த பிறகு அடியேனின் ஏகபோக உரிமை. நான் ஏதாவது திருடித் தின்கிறேனா என்று பார்க்க மட்டும் தான் அத்தை சமையல் அறைக்குள் வருவாள். வேறு போக்கிடம் அற்ற அநாதைகள் சொல்கிறபடி செய்து தானே ஆக வேண்டும்.''

''உங்கள் மாமா அவர் கூடவா இப்படி?''

''முதலில் பிரியமாகத்தான் இருந்தார். இடையில் லாட்டரி குலுக்கலில் பரிசு கிடைத்துப் பணக்காரர் ஆனார். பணம் வந்துவிட்டால் தான் இருதயம் மாறி விடுகிறதே.''

அதை கவனியாதவள் போல், ''பின்னே எப்படிப் படித்தீர்கள்?'' என்று கேட்டாள் சத்யா.

''தனியாக ஓர் ஆசிரியரிடம் படித்தேன். மாலையில் ஒரு மணி நேரம் கற்றுத் தருவார். அப்புறம் மாமா பையனின் புத்தகங்களை அடுக்கி வைப்பது போல் புரட்டிப் பார்த்துப் படிப்பேன். அவனும் தன் வீட்டுப் பாடங்களை சரி செய்து வை என்று என் தலையில் கட்டுவான். எனக்கு வசதியாகப் போயிற்று. ஆனால் அவன் பள்ளி இறுதி வகுப்பிலேயே கோட்டை...''

''அய்யய்யோ பிறகு எப்படி மேலே படித்தீர்கள்?''

''மாமா வீட்டில் இருந்து வெளியேறினேன். ஒரு கல்லூரி ஆசிரியரிடம் வேலை பார்த்துக் கொண்டே படித்தேன். உதவி சம்பளமும் கிடைத்தது.''

''நன்றாகப் படித்தீர்களாக்கும்.''

''வகுப்பிலே முதல்'' என்றான் அவன் பெருமையாக. உடனே அவன் முகம் மாறியது. ''என்ன படித்தேன்?, நன்றாகப் படித்தும், நல்ல மார்க் வாங்கிப் பாஸ் செய்தும், நல்ல வேலை கிடைக்கவில்லையே. நானூறு ரூபாய் சம்பளத்து வேலை கிடைப்பதே பெரும்பாடாகிப் போயிற்று. ஏனெனில் எனக்கு பெரிய பணக்காரர்களின் சிபாரிசு இல்லை பார்.''

''அப்பா ஏதேனும் செய்வார். கேட்கலாம்'' என்றாள் சத்யா யோசியாமல்.

''என்னது!'' என்று வெடித்தான், அவன். ''அவரிடம் பிச்சை எடுக்கும் அளவுக்கு நான் இன்னும் ஈனம் அடையவில்லை.''

சத்யா வாயை மூடிக் கொண்டாள்.



தந்தைக்கும் கணவனுக்கும் இடையில் ஏதேனும் மோதல் நிகழ்ந்திருக்குமோ? அதனால்தான் அப்பா அப்படி நடந்துக் கொண்டாரோ? மாதவன் மீது உள்ள கோபத்தின் வேகம் சத்யா மீதும் பாய்ந்ததோ? என்ன நிகழ்ந்திருக்கும்?

பிறகு ஒருநாள் கணவரோடு நன்கு பழகி, அவன் குணம் புரிந்து, அவனது முழு அன்பையும் அடைந்த பிறகு அவனிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள் சத்யா.

ஆனால், அந்த நாள் வராமலே போய்விடும் என்று அவள் அப்போது எண்ணவே இல்லை!

## 4

புதுக் குடித்தன வாழ்வு பழக முதலில் சத்யா மிகவும் சிரமப்பட்டாள்.

ஏஸன்சும், ஸாகம் கலந்து இலகு சமையல் மட்டும் பயின்றவள் இடித்தல், அரைத்தல் எல்லாம் வேலையாட்கள் மூலம் செய்து கொண்டவள், இங்கே எல்லாம் தானே செய்ய வேண்டும் என்கையில் திணறிப் போனாள்.

நாலு மிளகாயை அரைக்கு முன் அவளுடைய மிருதுவான உள்ளங்கைகளும் விரல்களும் தீப்பற்றினாற் போல எரியத் தொடங்கின.

காட்டுத் தீயினுள் தப்பிச் செல்ல வகையின்றிச் சிக்கியது போலத்தான் அவளுக்கும் தோன்றியது.

கூடவே புலியின் உறுமல் போல மாதவனின் பொறுமையிழந்த குத்தல் பேச்சுக்கள்.

அநேக நேரங்களில் ''இதுகூடத் தெரியாமல் நீயும் ஒரு பெண்ணா'' என்று எரிந்து விழுந்தான். ''ஓ பணக்காரி அல்லவா?'' என்று நக்கல் செய்தான்.

பழக்கம் அற்ற வேலைகளால் உடல் நொந்திருக்கும் வேளைகளில் அவன் இப்படிப் பேசும்போது, அவளுக்கு அழுகை வந்துவிடும். அவன் காணா வண்ணம் முகத்தை திருப்பிக் கொண்டு கண்ணீர் வடிப்பது வழக்கம் ஆயிற்று.

லோஷனில் கழுவி பாலிஷில் பளபளத்த நீண்ட நகங்கள் உடைந்து போயின. முதல் நகம் உடைந்தபோது வேதனைப்பட்ட சத்யா, மற்ற நகங்களைத் தானாக வெட்டினாள். பார்த்துப் பாதுகாத்து வளர்த்த நகங்களை இழந்ததைவிட அவன், ''அய்யோ பாவம்'' என்று கிண்டல் செய்ததுதான் அவளுக்கு அதிக வேதனை தந்தது.

எல்லா வேலைகளையும்விட கிணற்றில் நீர் இறைப்பது மிகவும் வேதனையாக இருந்தது. காலையிலேயே அவன் குளிக்க நாலு வாளி இறைக்க வேண்டும்.

முதலில் அக்கம் பக்கத்தாருடைய குறுகுறுத்த பார்வையே அவளைக் கூச வைத்துவிடும். குனிந்த தலை நிமிராமல் நீர் இறைப்பாள்.

அந்த முரட்டுக் கயிறு உராய்ந்து உள்ளங்கையின் மென்மையான தோல் கொப்பளித்து புண்ணாகிப் போயிற்று. இரண்டு நாட்கள் சமாளித்தவள் மூன்றாம் நாள் கயிற்றைத் தொடவும் முடியாமல் வேதனையில் துடித்துப் போனாள். முயன்றும் நீர் இறைக்க முடியாமல் போகவே அதை விட்டுவிட்டு சிற்றுண்டி வேலையைச் செய்யத் தொடங்கினாள்.

'ஷேவ்' செய்து முடிந்ததும், குளியல் அறைக்குள் நுழைந்தான் மாதவன். குளியல் அறை என்றால் பெயர்தான் பெத்தபேர். சும்மா நாற்புறமும் தட்டியால் மறைத்த ஓர் இடம் அவ்வளவுதான். அங்கே குளிப்பது என்று நினைக்கையிலேயே சத்யாவுக்கு உடல் கூசி விடும். அதற்காகவே மாதவன் அலுவலகம் சென்றபின் சமையல் அறையிலேயே ஓர் ஓரமாகக் குளிப்பாள், அவள்.



குளியல் அறையில் இருந்து மனைவியிடம் வந்தான். மாதவன் ''மகாராணியாருக்கு நீர் சேந்துவது அவமானமாக இருக்கிறதோ அல்லது திமிரா?'' என்றான் குத்தலாக.

கை மட்டுமின்றி அப்போது சத்யாவின் நெஞ்சும் புண் பட்டுப்போயிற்று. உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள். ''பணத்திமிர். பதில் சொல்லக்கூட விடவில்லையா?'' என்றான் அவன் அதட்டலாக.

கண்ணீரை அடக்கியபடி புண்ணான கைகளை அவன் முன் நீட்டினாள் சத்யா. நீர் கோதிய கொப்புளங்களும் திட்டு திட்டாகச் சிவப்பு மேடுகளுமாகக் கைகள் பயங்கரமாக இருந்தன.

அவன் முகமாற்றமே இல்லாமல் ''நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியது சாக்கா?'' என்றான் இரக்கமற்று.

கையைப் பார்த்தால் அவன் கட்டாயம் இளகுவான் என்று எண்ணியிருந்த சத்யா, உள்ளூர இடிந்தாள். இந்தக் கையைப் பார்த்த பின்னரும் பாம்பாய்க் கொத்துகிறானே. காட்டுக்குள் மாட்டிக் கொண்டாற்போல அந்தப் பயங்கர உணர்ச்சி மீண்டும் அவளைத் தாக்கியது.

எதுவுமே பேசாமல் அடுப்பை இறக்கிவிட்டு வெளியே போனாள். கொல்லும் வேதனையைப் பாராமல் மடமடவென்று நீர் இறைத்து வைத்துவிட்டு உள்ளே வந்தாள். அவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கி விட்டுச் செல்லவும் அடக்க மாட்டாமல் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழலானாள்.

குளித்து முடித்துவிட்டு வந்த மாதவன் விம்மலில் குலுங்கும் சத்யாவின் முதுகைப் பார்த்தபடிச் சற்று நேரம் நின்றான். அவன் முகத்தில் ஏதோ ஒரு திருப்தி பரவியது. யோசனையோடு அவள் அருகில் சென்று தோளைப் பற்றித் தன்புறம் திருப்பினான்.

அவன் தொட்டதும் திடுக்கிட்டுப் போன சத்யா, அவசரமாக முகத்தைத் துடைக்க முயன்றாள்.

''ம்ஹூம்'' என்று தோளில் கிடந்த டவலால் அவள் கண்ணீரைத் துடைத்தான், அவன். பிறகு அவள் தோளை அணைத்து முன் அழைத்துச் சென்றான்.

நார்க் கட்டிலில் அவளையும் அமர்த்திக் கொண்டு, ''வலி என்று வேலையை நிறுத்திவிட்டால், இரண்டு நாளில் இந்தப் புண் எல்லாம் ஆறிவிடும்தான், சத்யா, ஆனால் மீண்டும் வேலையைத் தொடங்கிய உடனேயே திரும்பவும் புண்ணாகிவிடும். அதைவிட இப்போது வலியோடு வலியாக வேலை செய்து விட்டால், கையில் காய்ப்பு ஏற்பட்டு மரத்துப் போய்விடும்! பிறகு புண்ணோ, வலியோ தெரியாது'' என்று மெல்ல அவள் கரத்தை வருடினான்.

சத்யாவின் நினைவு பின்னே சென்றது. சத்யா வீணை பயில ஆசைப்பட்டாள் என்று ஒரு வீணை வித்துவானை ஏற்பாடு செய்திருந்தார் செல்வரத்தினம். ஒரு நாள் வாசித்து பழகு முன் தந்தியை அழுத்திய இடக்கை விரல்கள் இரண்டும் புண்ணாகிப் போயின. இரண்டு நாள் போனால் காய்ப்பு ஏற்பட்டு வலி போய்விடும் என்று வீணை ஆசிரியர் எவ்வளவோ சொல்லியும் வீணைப் பயிற்சியை நிறுத்தி விட்டார் அவளுடைய தந்தை.

இப்போது இந்தக் கைகளைப் பார்த்தால் எப்படித் துடித்துப் போவார் என்ற எண்ணமிட்டாள், சத்யா. ஆனால் துடிப்பாரா? துடிக்கக்கூடும் என்றால், அவளை நல்ல நிலையில் வைக்க அவர் ஒன்றும் செய்யவில்லையே!

மருமகனிடம் கோபம் என்றாலும் மகள் துன்புறுவாளே என்று எண்ணவில்லை.

அல்லது, அவர் ஏதாயினும் செய்ய முயன்றதையும் மாதவன் அனுமதிக்கவில்லையோ? அந்த மூவாயிரம் ரூபாயைத் திருப்பி அனுப்பவில்லையோ?

ஏதேதோ எண்ணமிட்டவள் மேலே மாதவன் பேசும் குரல் கேட்கவும் திடுக்கிட்டு கவனித்தாள். ''போகட்டும் இன்று எதுவும் செய்ய வேண்டாம். வெறும் பருப்பை வேக வைத்து மிளகும் சீரகமும் தட்டிப்போட்டு தாளித்து விடு. அதையே பிசைந்து கொண்டு சாப்பிடலாம். அப்பளம் பொரித்தால் ஜோராக இருக்கும்.''



சத்யா ஆச்சரியத்துடன் கணவன் முகத்தையே பார்த்தாள் பாவம். தன் சொற்ப சம்பாதியத்தில் படிப்புக்கும் செலவு செய்து மீதியில் சிக்கனமாகச் சாப்பிட்டு இருப்பார் போலும். நினைக்கையிலேயே அவள் நெஞ்சு உருகியது.

ஆனால், அவளது உருக்கம் அவனுக்குத் தேவையில்லையோ? சட்டென அவளை விலக்கி எழுந்தான். ''சரி சரி, சிற்றுண்டி எடுத்து வை. எனக்கு அலுவலகத்துக்கு நேரமாவது தெரியவில்லை!'' என்று அவளை விரட்டினான்.

சத்யா விழித்தாள். இப்போது அவள் என்ன தப்பு செய்திருக்கக் கூடும்?

மற்றொருநாள்-காய் - கறி வெட்டும்போது கையில் வெட்டிக் கொண்டாள். கணவனிடம் ப்ளாஸ்டர் கேட்டபோது ''இந்தக் கூலிக்காரன் மனைவிக்குக் காயம் பட்டால், ஈரத்துணிதான் சுற்ற வேண்டும்'' என்றான். வெடுக்கென்று, பேசாமல் ஒரு துணியை நனைத்துச் சுற்றிக் கொண்டு மேலே பீன்சை வெட்டினாள் சத்யா.

ஆனால் அவன் பின்னோடு வந்து, ''இலட்சாதிபதி செல்வரத்தினத்தின் வீடானால் ஒரு வேலையாள் காய் வெட்ட, சமையலாள் சமைக்க, இன்னொருவர் பரிமாற உண்பது மட்டும் உன் வேலையாக இருந்திருக்கும். ஊ...ம் பாவம்'' என்று போலியாகப் பரிதாபப் பட்டான்.

அவனை அண்ணாந்து பார்த்து, ''நான் ஒன்றும் சொல்லவில்லையே'' என்று மீண்டும் வேலையில் மூழ்கினாள் சத்யா.

அருகில் அரவம் கேட்டு அவள் திரும்பியபோது அவன் அவளை அணைத்து முத்தமிட்டு விட்டுத் தன் கன்னத்தைக் காட்டி ''உம்'' என்றான்.

சத்யா வெட்கித் தயங்கியபோதும் அவன் விடவில்லை. பிடிவாதமாக அவளைத் தன் விருப்பம் போலச் செய்ய வைத்துவிட்டுச் சிரித்தான்.

அவனது சிரிப்பில் சத்யாவுக்குக் கைக் காயம் ஆறி விட்டாற் போலத் தோன்றியது.

இந்த மாதிரி அவன் அணைக்கும் நேரங்கள் வெகு அபூர்வம். பல சமயங்களில் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல குத்தல் வார்த்தைகள்தான் அவனிடம் இருந்து கிடைக்கும்.

குத்தலும் கேலியுமாக மட்டம் தட்டிவிட்டு இரவானதும் ''நீ அழகாய்த்தான் இருக்கிறாய் சத்யா?'' என்று அவன் அணைக்கையில் அவளுள் ஏதோ முரண்டியது. அப்போதெல்லாம் அவன் சற்று மென்மையாகப் பேசிய ஓரிரு நிகழ்ச்சிகளை பிடிவாதமாக நினைவுப் படுத்திக் கொள்வாள்.

சத்யாவின் நிலையில் இன்னொரு பெண் இருந்திருந்தால் என்ன செய்திருப்பாளோ? ஆனால் சத்யா எதற்கும் குறைப்படுகிறவள் அல்ல. பிறர் திருப்தியில் மகிழ்கிறவள் அம்மா மெச்ச வேண்டும் என்று ''சமையல்'' வகுப்பில் பயின்று வந்தாள். அப்பாவின் முறுவலுக்காக ''டைப்பிங்'' படித்து வீட்டில் அவரது வேலையில் உதவி செய்தாள்.

இப்போதும் கணவனைக் குறைகூறத் தோன்றவில்லை அவளுக்கு. அவன் மெச்சும் வண்ணம் வீட்டு வேலைகளைச் செய்துவிடவே விரும்பினாள். ஆனால், அடியோடு தெரியாத வேலைகளை ஐந்தே நாட்களில் கற்பது எளிது அல்லவே. அதிலும் அந்த முரட்டு வேலைகள் அவளுடைய மென்மையான மேனியைக் கசக்கிப் பிழிந்தன.

உடல் களைத்துச் சோர்வடைகையில் மனம் பிறந்த வீட்டை நாடி ஓடும். உடம்பை இதமாகப் பிடித்து விடுவது போல அமுங்கிக் கொடுக்கும். நுரை ரப்பர் மெத்தைக்கு உடலும் உள்ளமும் ஒருங்கே



ஏங்கும். குளிக்கையில் சுடுநீர்க் குழாயுடன் கூடிய ''ஷ''வரின் பூஞ்சிதறலுக்கு நெஞ்சு தவிக்கும்.

இந்த ஏக்கமும் தவிப்பும் நினைவுகளைத் தந்தையிடம் தள்ளிவிடும்.

''அப்பா, எனக்கு உடம்பெல்லாம் வலிக்கிறதே. மனதுக்குள் கஷ்டமாக இருக்கிறதே. ஏதாவது செய்யுங்களேன் அப்பா'' என்று மனதினுள்ளேயே தந்தையிடம் கெஞ்சுவாள்.

எல்லாம் மனதோடு சரி. அங்கே யாருக்கும் கடிதம் எழுதக் கூடாது என்று மாதவன் தடுத்தபின், மீறி எழுத அவளுக்குத் தோன்றவும் இல்லை.

ஆனால், தந்தையிடமிருந்து விரைவில் கடிதம் வரும் என்று நிச்சயமாக எதிர்பார்த்தாள். அவரே வந்துவிடக் கூடும் என்றுகூட ஆவலோடு எதிர்பார்த்தாள்.

அவரோ?

இவர்களை காஞ்சிபுரத்தில் விட்டுவிட்டு, சென்னைக்குத் திரும்பிய ராமன் தன் முதலாளியிடம் பணத்தையும் சத்யாவின் நகைகளையும் நீட்டியபோது செல்வரத்தினம் அதை வாங்கிக் கொள்ளவில்லை.

''ஏதாவது அனாதை ஆசிரத்துக்கு அனுப்பிவிடும் ராமன், ஓர் அனாதைக்குக் கடைசிப் பிச்சையாகக் கொடுத்ததுதானே?'' என்றார் வெறுப்புடன்.

## 5

ஐந்து நாளில் ஏற்பட்ட வழக்கப்படி ஐந்தரைக்கு அலாரம் அடித்ததும் விழித்தாள் சத்யா.

எப்போதுமே விழித்ததும் படுக்கையில் ஓர் ஐந்து நிமிடம் புரள்வது அவளுக்குப் பிடிக்கும். ஆனால் வந்த முதல் நாளே, ''பணக்கார சோம்பேறித் தனத்துக்கு என் வீடு இடமல்ல'' என்று கூறிவிட்டான் மாதவன். எனவே விழித்ததும் கை நீட்டி அலாரத்தை நிறுத்திவிட்டு, உடனே எழுந்து உட்கார்ந்து விடுவாள் சத்யா.

இன்றும் அப்படி எழ முயன்றவளை அவன் கரம் தடுத்தது.

''என்ன?'' என்று திணறியபடி திரும்பினாள் சத்யா.

''தூங்கு.''

''உங்களுக்கு அலுவலகத்துக்கு நேரமாகி விடுமே.''

அவன் கண்ணைத் திறவாமலே சிரித்தான்.

பரவி வந்த இளம் வெளிச்சத்தில் பார்த்துவிட்டு, 'என்ன அழகான பல்வரிசை' என்று ஆச்சரியமாக நினைத்தாள் சத்யா.

சிரிப்புடனேயே, ''ஞாயிறன்று எந்த ஆபீஸ் திறந்திருக்கும். மக்குப் பெண்ணே'' என்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டான், அவன்.

அன்று அவன் வேலை செய்கையில் அவனும் கூடவே சுற்றினான், தானே நீர் இறைத்துக் குளித்தான். சமையலுக்குக் காய் வெட்டிக் கொடுத்தான். வேலை முடிந்ததும் சத்யா யோசனையில் ஆழ்ந்தாள். அதற்குள் அவனாகவே ''ஏய், நீ இன்னும் குளிக்கவில்லையா?'' என்றான்.

''இப்போதுதான் குளிக்க வேண்டும்.''

''மாற்றுடை எடுத்துவா. நான் நீர் இறைத்துத் தருகிறேன்'' என்று சென்றான் அவன்.

நீர் இறைத்து முடித்த பின்னும் அவள் துணிகளுடன் வீட்டின் உள்ளேயே நிற்கக்கண்டதும், ''என்ன?'' என்றான்.



அவன் எப்படி எடுத்துக் கொள்வானோ என்ற பயத்துடனேயே, ''நான்... இங்கே சமையல் அறையிலேயே குளிக்கிறேனே'' என்றாள்.

அவன் புருவங்களை நெரிய, ''ஓகோ! பணக்காரச் சத்யாவுக்குத் தகுந்ததாகக் குளியலறை இல்லையே? பாத் டப் ஷவர்...'' என்று பேசுமுன் அவள் குறுக்கிட்டாள்.

''அய்யோ அப்படி இல்லை. மேலே திறப்பாக இருக்கிறதா, குளிக்கக் கஷ்டமாக இருக்கிறது. பக்கத்தில் லாட்ஜ் வேறு...''

அவன் கண்களில் கொலைவெறி தாண்டவம் ஆடிற்று ''யார் பார்த்தது?'' என்று உறுமினான் புலிபோல.

''யாரும் இல்லையே எனக்கே பார்த்து விடுவார்களோ என்று பயம்... கூச்சம்'' என்று தந்தியடித்தாள், அவள்.

அவன் முகம் தெளிந்தது. கண்களில் குறும்பு மிளிர ''அதுவும் நல்லதுதான். நான் பேப்பர்கூடப் படிக்கவில்லையே. இன்று சமையல் அறையிலேயே இருந்தே படிக்கிறேன். நீ குளி'' என்றான்.

''அய்யய்யோ ஊகூம். வேண்டாம்'' என்றாள் அவள் முகம் சிவக்க.

''என்ன ஊகூம் நான் இங்கேதான் இருப்பேன். என்னிடம் உனக்கு என்ன வெட்கம்'' என்று நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்துவிட்டான்.

சத்யா திணறிப் போனாள், ''ப்ளீஸ்...''

அவன் சிரித்துவிட்டுப் பத்திரிகையில் மூழ்கினான்.

அவள் மீண்டும் கெஞ்சியபோதும் முறுவலுடன் மறுத்துவிட்டு, ''சரிசரி நாற்காலியைவிட்டு அசைவது இல்லை. சரிதானா! சீக்கிரம் குளித்துமுடி. பசிக்கத் தொடங்கி விட்டது'' என்றான்.

அந்த அளவில் அவள் திருப்தி அடைய வேண்டியிருந்தது. பெரிய துண்டு ஒன்றை ஒற்றிக் கொண்டு அவனுக்கு முதுகு காட்டி நின்று குளித்து முடித்தாள்.

திடீரென்று "சத்யா, எலி... எலி" என்றான் மாதவன்.

அவள் பதறி விலகினாள்.

"அதோ உன் கால் பக்கமாய்..."

பயத்துடன் அவன் அருகே ஓடியவளை இழுத்து அணைத்துக் கொண்டு சிரித்தான்.

அவள் முகம் அந்திவானமாய்ச் சிவந்தது.

ரசனையுடன் லேசாக முத்தமிட்டுப் பத்திரிகையை எடுத்துக் கொண்டு வெளியேறினான். "சீக்கிரம் வா."

வியப்புடன் கணவன் முதுகைப் பார்த்தாள் சத்யா.

தன் கூச்சத்தை மதித்து அவன் செல்லக்கூடும் என்று அவள் எண்ணவே இல்லை. ஆனால் அவன் என்னதான் செய்யக்கூடும் என்று அவளால் ஊகிக்க முடியவில்லை தானே.

"நீயும் உட்கார்" என்று அவன் கூற இருவரும் சேர்ந்தே உணவு அருந்தினார்கள்.

மாலையில் உலாவக் கூட்டிச் சென்றான்.

வழி நெடுகிலும் விளையாட்டான சில வேடிக்கைப் பேச்சுக்கள்.

இவன் கூட இப்படிச் சிரிக்கக்கூடும் என்று யாரால் எண்ண முடியும்?

திரும்பி வருகையில் "என்ன ஆச்சியும் அய்யருமாக உலாக் கிளம்பினேளா!" என்று வெற்றிலைக் காவி ஏறிய பற்களைக் காட்டினார், மூன்றாம் வீட்டு ரங்கண்ணா.

சத்யா தயங்கி நிற்கையிலேயே "ஆமாம்" என்று சுருக்கமான பதிலுடன் அவள் கைகளைப் பற்றி இழுத்துக் கொண்டு வேகமாக நடந்தான் அவன்.



அன்றைய சுமுகம் தந்த துணிவுடன், "அவர் சினேக பாவத்துடன் தானே பேசினார்?" என்றாள் சத்யா.

"அவர் சினேகம் எனக்குத் தேவையில்லை" என்றான் மாதவன் எடுத்தெறிந்தாற்போல. "இந்தக் கூட்டத்துடன் பழகுவதும் சாக்கடையில் புரள்வதும் ஒன்றுதான், சத்யா. நான் உயரவேண்டும், எல்லோரும் என்னை அண்ணாந்து பார்க்க வேண்டும். என்னை இகழ்ந்தவர்கள் - எள்ளி நகைத்தவர்கள் எல்லோருமேதான்."

உணர்ச்சி வேகத்தில் அவன் பிடியில் இருந்து சத்யாவின் கை நடுங்கிச் சிவந்தது. வலி பொறுக்காமல் கையை மெல்ல இழுத்தாள் சத்யா.

குனிந்து கையில் சிவப்பை பார்த்துவிட்டு, "ச்சு" என்று அவள் கையை விட்டான், மாதவன்.

வீட்டைத் திறந்து உள்ளே சென்றதும் அவசரமாக ஒரு டம்ளர் தண்ணீரைக் கொண்டு வந்து அவனிடம் நீட்டினாள். வீட்டினுள் வந்ததுமே அப்படி நீர் அருந்துவது அவன் பழக்கம்.

ஏதோ கவனமாகத் தம்ளரை வாங்கி நீர் அருந்துகையிலேயே சற்றுக் கவலையுடன் ஓரக் கண்ணால் தன்னைப் பார்த்தபடி சத்யா நிற்பது கண்ணில் பட்டது.

மனம் இளகி, "என்ன பார்க்கிறாய்?" என்று முறுவலோடு காலித் தம்ளரை நீட்டினான்.

சட்டென முகம் மலர, "ஒன்றுமில்லையே" என்று தம்ளரை வாங்கிக் கொண்டு, ஓடினாள் சத்யா.

மறுநாள் அலுவலகத்தில் இருந்து மாதவன் ஏக உற்சாகத்துடன் திரும்பி வந்தான். "பெரிய வேலை கிடைக்கப் போகிறது சத்யா. சம்பளம் அறுநூறு ரூபாய். ஒரே எடுப்பில் இருநூறு ரூபாய் கூடப் போகிறது. சும்மா என்றால் டெபாசிட் ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும். எனக்குத் தேவை இல்லை என்று சிபாரிசு செய்வதாக நிர்வாகி சொல்லியிருக்கிறார்" என்றான் மகிழ்ச்சியோடு.

''ரொம்ப நல்லவராகத் தெரிகிறது.''

''அதெல்லாம் இல்லை. நான் மேலே போனால் இந்த வேலையில் அவருடைய மருமகனை அமர்த்துவதற்காகத்தான் இவ்வளவும்'' என்றான் மாதவன் விட்டேற்றியாக.

''வந்து... வந்து...'' என்று தயங்கினாள் சத்யா.

''என்ன வந்து....''

''...''

''சொல்லத் தொடங்கினால் முடித்து விட வேண்டும், சத்யா.''

''வந்து... அவர் - உங்கள் நிர்வாகி சிபாரிசு செய்வாரே தவிர முடிவு செய்வது அவர் இல்லையே.''

''ஒவ்வொரு கிளை நிர்வாகியும் சிபாரிசு செய்வார்கள். பொது நிர்வாகி முடிவு செய்வார்.''

''அதுதான் கேட்க வந்தேன், இன்னொரு கிளை நிர்வாகி சிபாரிசு செய்யும் மனிதர் பணமும் கட்டி விட்டால்?''

''இதுவரை செய்த வேலையையும் பார்ப்பார்கள். அந்த அளவில் என்னை யாரும் மிஞ்ச முடியாது'' என்றான் அவன் பெருமையோடு.

''எதற்கும் பணமும் கட்டி விட்டால் நிச்சயமாக இருக்கும் அல்லவா?''

அவன் சற்று கேலியாக அவளைப் பார்த்தான். ''உண்மைதான். ஆனால் நினைத்தாற்போல ஆயிரம் ரூபாயை அள்ளி வீச நான் ஒன்றும் பணக்கார செல்வரத்தினம் இல்லையே. அல்லது அவரிடம் பிச்சைக் கேட்கச் சொல்கிறாயா?''

ஒரு கணம் தயங்கிவிட்டு, ''இந்த வளையல் இரண்டையும் விற்றால்...'' என்று முடிக்குமுன், அவன் முகம் மாறிய விதத்தைக் கண்டு பயந்து போனாள் சத்யா.



அவள் அச்சத்துடன் விழிக்கக் கண்டதும், அவன் தன்னை அடக்கிக் கொண்டான். ''சத்யா இது உன் அப்பாவின் பணத்தில் வாங்கியது. இதை விற்று நான் பயன்படுத்தினேன் என்றால், எனக்கும் திருடனுக்கும் என்ன வித்தியாசம். இனி ஒருதரம் இந்த வார்த்தை பேசாதே. போ'' என்று அவளைத் தன்னிடம் இருந்து விலக்கித் தள்ளி விட்டான்.

இன்னமும் நெருங்கி அறியாத அவனுடைய இதயத்தில் இருந்தும் தன்னை விலக்கித் தள்ளுவது போல சத்யா உணர்ந்தாள்.

சுற்றிச் சுழன்று அவள் மனம் மீண்டும் தந்தையிடம் சென்று நின்றது.

செல்வரத்தினத்துடைய மருமகன் ஓர் ஆயிரம் ரூபாய்க்கு விதியற்று நிற்பானேன்? அப்பா...

இன்னமும் மூன்று வாரம் இதேபோலக் கழிந்தது.

ஞாயிற்றுக் கிழமை எப்போது வரும் என்று சத்யாவுக்கு ஏக்கமாக இருக்கும். மற்ற ஆறு நாளின் சிடுசிடுப்பு, கோபம் எதுவும் இல்லாமல் கூடிய வரையில் அவன் அன்பான கணவனாகவே இருப்பான்.

மூன்றாம் ஞாயிறன்று சத்யாவுக்கு உடம்பு சரியாக இல்லை. ''நீ படுத்துக்கொள். நான் காபி போட்டுக் கொண்டு வருகிறேன்'' என்று காபி போட்டுக் கொண்டு வந்தான். சற்று நேரத்திலேயே சத்யாவுக்குச் சரியாகி வேலை செய்யத் தொடங்கி விட்டாள்.

''போச்சுடா! இன்றேனும் நானே சமைத்து நல்ல சாப்பாடு சாப்பிட நினைத்தேனே. காலை வாரி விட்டு விட்டாயே'' என்று சோகமாக நடித்து அவளுடன் சேர்ந்து நகைத்தான்.

அப்போது சத்யா கேட்டு விட்டாள். ''ஞாயிற்றுக் கிழமை மட்டும் தான் சிரிப்பதாக விரதமா?''

''அப்படியா இருக்கிறேன்?'' என்று வியப்பாகக் கேட்டு விட்டு, ''என்ன செய்வது சத்யா? எல்லாம் எனக்கு ஒரே எரிச்சலாக

இருக்கிறது. வெளியே தலையை நீட்டினால், வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு அந்த ரங்கண்ணா வந்து விடுகிறார். அலுவலகத்திலோ எல்லாம் ஒரே மடத்தனமாக இருக்கிறது. வேலை செய்யத் தெரியாதவன் எல்லாம் அவனுக்குச் சொந்தம் அது இது என்று வந்துவிடுகிறான்கள். செய்யத் தெரிந்தவனுக்கும் செய்ய மனதில்லை. இதையெல்லாம் பார்க்கும் பொழுது பற்களைக் கடித்துக் கொண்டு இருக்க வேண்டியிருக்கிறது'' என்று முடித்தான்.

''அந்த கோபம் எல்லாவற்றையும் அப்படியே வீட்டுக்கு மூட்டைக்கட்டி எடுத்து வருவீர்களாக்கும்'' என்று கேலியாக கேட்டு விட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள் சத்யா.

ஆனால், அவன் கோபம் கொள்ளவில்லை. சிரித்துக் கொண்டே அவள் காதைப் பிடித்து இழுத்தான்.

'இவர் எல்லாம் பெரிய வேலையில் இருந்து மற்றவர்களை வேலை வாங்க வேண்டியவர்; ஆனால், அது மாதிரி ஏற்பாடு அப்பா ஏன் செய்யவில்லை?' என்று யோசித்தாள் கூடவே 'அவராகவே முன்னேறி அந்த இடத்தைப் பெற்று விடுவார்' என்று திருப்தியோடு நினைத்தாள்.

ஆனால், அந்த திருப்தியில் இடி விழுந்தது. மெல்ல மலர்ந்துகொண்டு இருந்த இல்வாழ்விலும் சேர்ந்துதான்!

## 6

**மா**தவனின் வேலை உயர்வு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அது மட்டும் அல்ல. அந்த ஊர்ப் பணக்காரர் ஒருவருடைய, பி.ஏ. பெயில் ஆன மகனுக்கு அந்த வேலை கிடைத்துப் போயிற்று.

மாதவன் நெருப்பாக மாறினான். பணம் படைத்தோர் எல்லாம் அவனது விரோதிகள் ஆயினர். அந்த பணக்காரச்



செல்வரத்தினத்தின் மகளான சத்யாவும் அந்த வர்க்கத்தவளாகவே கருதப்பட்டாள்.

அவள் நின்றால் குற்றம், நிமிர்ந்தால் குற்றம் என்றான். பல நாட்களாகத் தானே நீர் இறைத்துக் குளித்தவன் ''ஏழைக் கணவனிடம் அலட்சியமா?'' என்றான். அவனுக்கு பிடிக்கும் என்று சிப்ஸ் செய்தால் ''பணக்கார நாக்கு பத்து வகை கேட்கிறதா'' என்று பாய்ந்தான். செய்யாவிட்டால் ''இந்த பிச்சைக்காரப் பயலுக்கு இது போதும் என்று இருந்தாயா'' என்று நாவால் சுட்டான்.

இருபத்து நாலுமணி நேரமும் பாம்பின் சீறலும் புலியின் உறுமலும் என்று ஆகியது. எப்போதும் தீ மேல் நடப்பது போல் சத்யா தவித்தாள். மனம் உடலையும் பாதித்தது.

ஞாயிறு வந்தது. அன்றேனும் இளகமாட்டானா என்று ஏக்கத்துடன் பார்த்தாள், சத்யா. ''மாட்டேன்'' என்பது போல் மறுபுறம் திரும்பிக் கொண்டான் அவன். எழமுடியாமல் ஏதோ அவள் உடலைத் தள்ள அவன் கையைப் பற்றி, ''எனக்கு என்னமோ செய்கிறதே'' என்றாள் பயத்துடன்.

''சீ'' என்று கையை உதறினான் மாதவன்.

அதற்கு மேல் பேசவில்லை. சத்யா மனதின் பிடிவாதத்தி னாலேயே எழுந்து சென்றாள். குளிர் நீரை அள்ளி அள்ளி முகத்தில் அடித்துக் கொண்டபின் சற்றுத் தெளிவாகத் தோன்றியது.

அவன் தன் போக்கில் குளித்து, உடையணிந்து ''நான் மாலையில்தான் வருவேன்'' என்று வெளியே போய் விட்டான்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு திரும்பிய சத்யாவுக்கு தாளமாட்டாமல் அழுகை வந்தது. அப்படியே விம்மி விம்மி அழுதாள். மூன்று ஞாயிறுகள் எவ்வளவு இனிமையாகக் கழிந்தன. இந்த நாலாவது... நாலாவது...

சத்யாவின் கண்ணீர் திடுமென நின்றது. ஓடிச் சென்று காலண்டரைப் பார்த்தாள். திருமணமாகி இருபத்தெட்டே நாட்கள் தானே ஆகின்றன. அதற்குள்ளாகவா இப்படி?

ஆச்சரியத்துடன் குனிந்து தன்னையே பார்த்துக் கொண்டாள். ஒன்றும் மாறுபாடே தெரியவில்லையே கதைகளில் படிப்பது போலக் காலையில் அசதி, தலை சுற்றல், இன்று வாந்தி மாதிரி கூட இருந்ததே.

மெல்லக் கையால் அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்தாள்.

சிரிப்பு வந்தது, வெட்கமும் வந்தது.

மீண்டும் கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாள் சத்யா.

சற்று மெலிந்து கன்னத்து எலும்பு தெரிந்த போதிலும் தன் முகம் முன்னிலும் அழகாக இருப்பதுபோல அவளுக்குத் தோன்றியது.

''அப்பா, இனிக்கூட இவர்மேல் உள்ள கோபத்தில் என்னிடம் நீங்கள் பாரா முகமாக இருப்பீர்களா? முடியுமா உங்களால்'' என்று கேலியாக எண்ணிச் சிரித்தாள்.

தாத்தா ஆகப்போகிறோம் என்பது தெரிந்ததும் அப்பாவுக்கு எப்படி இருக்கும்? வெட்கப்படுவாரா? அம்மா! அம்மா! உடனேயே பாப்பாவுக்கு ''சாக்ஸ்'' பின்னத் தொடங்கி விடுவார்கள். முதலில் இங்கே ஓடி வந்து விடுவார்கள். வந்து இருவரையும் அங்கே அழைத்துப் போய் விடுவார்கள். ஆயிரம் ஆயிரம் இன்பக் கற்பனைகள் சிறகு விரித்தன.

கதவு தட்டும் ஒலி கேட்டுத் திரும்பினாள் சத்யா. மாதவன் தட்டுவது இப்படி இராது. யோசனையோடு ''யார்'' என்றாள்.

''எல்லாம் உன் அத்தை மகன் ரத்தினம்தான். ராஜவீதி நாலும் நடந்து உன் அரண்மனைக்கு வந்து சேர்வதற்குள் கால் உடைந்து போயிற்று கதவைத் திற'' என்று உரத்த குரல் கூவினான் மதன்.

''ஏய், அத்தானா!'' என்று குதூகலத்துடன் ஓடிச் சென்று கதவைத் திறந்தாள் சத்யா. ''வா அத்தான் வா. ஆயிரம், பத்தாயிரம், ஒரு லட்சம் நல்வரவு.''



''ஒரு லட்சம்தானா. ஒரு கோடிக் குறையாது என்று நினைத்தேனே'' என்று சிரித்தபடி உள்ளே வந்தான் மதன்.

''பார்த்து, பார்த்து'' என்று சத்யா கூறியதைக் கவனிக்காமல் நிலைப்படியில் தலையை இடித்துக் கொண்டான்.

''உனக்கு மரியாதை கற்றுக் கொடுக்கிறது'' என்று சிரித்தாள், சத்யா.

நெற்றியை தேய்த்தபடி, ''உன் கணவர் கூட அப்படித்தானா? குனிந்து உனக்கு மரியாதை காட்டுவதோடு நிற்பாரா? அல்லது கும்பிடு போடுவாரா?'' என்று பதிலுக்குக் கொடுத்தான் மதன்.

சத்யா கலீரென்று நகைத்தாள். மாதவனாவது கும்பிடு போடுவதாவது!

அதற்குள், ''அது யார் சத்யா, இந்த வரிசையில் மூன்றாம் பகுதியில் வெற்றிலைக் குதப்பிக் கொண்டு வயிற்றில் பானையைக் கட்டிக் கொண்டவர் போலத் திண்ணையில் இருப்பவர்? சத்யா அவர்தான் வீட்டைக் காட்டினார்'' என்றான் மதன்.

''ரங்கண்ணா சரியான அறுவை அத்தான்.''

''அறுவை அத்தானா, அறுவை ரங்கண்ணாவா?''

''நீயும்தான் அறுவை. ஆனால் முதலில் கதவைத் தாளிடு. இல்லையானால் அவர் பாட்டில் உள்ளே வந்து நிற்பார்.''

கதவைத் தாள் போட்டுவிட்டு, ''சரியான சமயத்தில் காப்பாற்றினாய், சத்யா. இங்கேதான் அவரும் வந்து கொண்டிருக்கிறார்... ஆமாம், மாப்பிள்ளை எங்கே? ஞாயிறன்று கூட வேலையா?'' என்று கேட்டான்.

''வேறு வேலையாக வெளியே போனார். ரங்கண்ணா வம்பு ஆசாமி என்றாலும் அவர் மனைவி நல்ல குணம் அத்தான். அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் தெரியுமா? பிறந்தது

பதினாறாம். அதில் இறந்தது போக மீதி ஆறு. இப்போது மாதமும் ஆறு.''

''கடவுளே!'' என்று தள்ளாடினான் மதன், ''மனிதர் கடும் உழைப்பாளியாய் இருப்பார் போலும், சத்யா நீ தந்த அதிர்ச்சியில் நிற்கக்கூட முடியவில்லை. ஒரு சிம்மாசனம் தந்து அருளுகிறாயா?''

சிரித்தபடியே மாதவனின் நாற்காலியை இழுத்துப் போட்டாள், சத்யா. உட்காராமல், ''நீ...'' என்று அவன் தயங்குகையிலேயே ''இங்கே'' என்று தரையில் அமர்ந்து கொண்டாள் சத்யா.

அவர் அதிர்ச்சி அடைந்ததைக் கவனியாதவள் போல, ''என்ன அத்தான் திடீர் விஜயம்?'' என்று அவள் விசாரித்தாள்.

''நீ அவசரக் கல்யாண அழகி அல்லவா, எல்லாம் மறந்து போய்விடும். உன் திருமணத்திற்குக்கூட வராமல் நான் எதற்காக இரண்டு மாதமாக டெல்லியில் பழியாய்க் கிடந்தேன்?''

''ஓ...அத்தான்! உன் வெளிநாட்டுப் பயணம் என்ன ஆயிற்று?''

''அப்பாடா நினைவு வந்ததா? இனி சொல்லுகிறேன் கேள்'' என்று தொண்டையைக் கனைத்துக் கொண்டான். ''மகா கனம் பொருந்திய மதனாகிய நான்...''

''எலும்புக் குச்சி'' என்று குறுக்கிட்டாள் சத்யா.

''குறுக்கே பேசாதே, மதனாகிய நான் வருகிற புதன் அன்று பம்பாயில் இருந்த வெளிநாடு போவதாகவும், அங்கே மூன்றாண்டுப் பயிற்சி பெறுவதாகவும் தீர்மானிக்கப்பட்டுவிட்டு காரணத்தினாலே...''

''மூச்சை விட்டுக் கொண்டு பேசு. அத்தான் ஒரேயடியாக நின்றுவிட்டால் ஆபத்து'' என்று கேலி செய்தாள் சத்யா.

''குறுக்கே பேசாதே என்றேனே. ம்ம். நான் எங்கே நின்றேன்?''



''நிற்கவில்லையே. உட்கார்ந்து கொண்டு அல்லவா சொல்மழை பொழிகிறாய்?''

''கல்யாணமானால் அடக்கம் வரும் என்பார்கள். உனக்கானால் இருந்ததெல்லாம் போய்விட்டதே. வாய் எட்டு முழம் நீளுகிறது. மாப்பிள்ளையிடம் புகார் செய்கிறேன் பார். முதலில் சொல்ல வந்தது மறக்குமுன் சொல்லி முடிக்கிறேன். ம். காரணத்தினாலே நெருங்கிய உறவினர்கள் எனப்படும் கழுத்தறுப்புகளைக் கண்டு...''

''உதை அவனை.''

''கழுத்தறுப்புகளைக் கண்டு விடைபெற எண்ணிவிட்ட காரணத்தினாலே இங்கே வந்துவிட்டேன். ஹ... எங்கே சோடா, எங்கே ஃபாண்டா? எங்கே 7?'' என்று கையாலேயே விசிறிக் கொண்டான்.

சிரித்துச் சிரித்து சத்யாவின் கண்களில் நீர் வந்துவிட்டது.

அவள் சிரிப்பதை அன்புடன், சற்று நேரம் பார்த்திருந்துவிட்டு, ''இதெல்லாம் என்ன சத்யா?'' என்று வினவினான் மதன்.

''அது சன்னல், இது கண்ணாடி.. இது...'' என்று விளையாட்டாகப் பதில் கூறினாள், சத்யா.

''சு அதல்ல சத்யா. இது என்ன வீடு? அத்தையும் மாமாவும் இந்தச் சூழ்நிலையில் உன்னைப் பார்த்தார்களா, இல்லையா?''

ஒரு ரகசியப் புன்னகையுடன் ''சீக்கிரம் வருவார்கள்'' என்றாள் சத்யா.

''இதுவரை ஏன் வரவில்லை? அங்கேயும் கேட்டால் சரியாக பதில் இல்லை...'' என்று தொடங்கியவனைத் தடுத்து, ''அதுதான் வருவார்கள் என்றேனே...'' என்று எழுந்தாள் சத்யா.

''ஏனோ?''

அவள் முகம் சிவந்தது. ''அதெல்லாம் உனக்குச் சொல்ல மாட்டேன். நான்.. நான் இப்போது உனக்குச் சாப்பாடு சமைக்கப் போகிறேன்'' என்று நடந்தாள்.

''நீயா? கடவுளே! நான் உருப்படியாக ஜெர்மனி செல்ல வேண்டுமே!'' நடுங்கிக் காட்டினான் மதன்.

''எட்டுக்கால் பூச்சி மாதிரி இருந்து கொண்டு பேச்சைப் பார்'' என்று ஒரு கப் காபியைக் கலந்து கொணர்ந்தாள் சத்யா. ''கறுப்பு காபி நன்றாயிருக்கும்.''

காபியுடன் நாற்காலியையும் தூக்கிக் கெண்டு அவனும் சமையல் அறைக்கு வந்து அமர்ந்தான். அரட்டையும் சிரிப்புமாக நேரம் சென்றது.

சில ஆண்டுகள் மூத்தவன், மதன். அத்தை மகன் உறவு வேறு. தடையின்றி கேலி பேசிச் சிரித்தனர் இருவரும்.

திடீரென்று, ''அதென்ன சத்யா, பொத்திப் பொத்தி தேர் அசைவது போல் நடக்கிறாய்'' என்று வினவினான் மதன்.

அவள் முகம் சிவந்தது. வேகமாக நடந்தால் அவளுள் இருக்கும் பாப்பாவுக்கு நல்லது இல்லையே என்ற பயத்தில் மெல்ல நடப்பதாக அவனிடம் சொல்ல முடியுமா? ''மக்கு அத்தான் உனக்கு ஒன்றும் தெரியாது சும்மா இரு'' என்றாள் வெட்கத்துடன்.

''ஓகோ'' என்று நகைத்தான். ''எனக்கா தெரியாது'' விருந்தாளி வரப் போகிறார். தெரியாதாக்கும். குவா குவா பாப்பா முத்து முத்துப் பாப்பா...'' என்று பாடினான் மதன்.



## 7

ஐந்தரை மணிவரை இருந்து விட்டு மதன் கிளம்பினான்.

''மாமாவுக்குக் கடிதம் எழுதுகிறேன், சத்யா. இப்போது அப்பாவைப் பார்க்கத் திருநெல்வேலி செல்ல வேண்டியிருக்கிறது. அல்லது சென்னைக்கே சென்று மாமாவிடம் நாலு வார்த்தை சூடாகப் பேசுவேன்'' என்றான்.

''அதெல்லாம் தேவையிராது'' என்றாள் சத்யா தெம்புடன்.

''உன் கணவரைப் பார்க்க முடியவில்லை பார். ஆனால் இனியும் தாமதிக்க முடியாது வரட்டுமா?'' என்று விடை பெற்றான் மதன்.

''நல்லபடியாகப் போய் வா, அத்தான். ''குட்லக்'' என்று வாழ்த்தி அனுப்பினாள் சத்யா.

வெளியே சென்ற மதனை ரங்கண்ணா பேச்சுக்கு இழுப்பார் என்று அவள் எண்ணவே இல்லை.

இருட்டிவிட்ட வேளையில் களைப்புடன் மாதவன் வந்த போது தெரு முனையிலேயே எதிர்கொண்டார் ரங்கண்ணா. ''ஆக உன் வீட்டுக்கு முதல் தடவையா விருந்தாளி வரப் பார்த்தாச்சுது மாதவா...'' என்று தொடங்கினார்.

லேசான புருவச் சுளிப்புடன், ''சரி'' என்று வெட்டி விட்டு வேகமாக நடந்தான் மாதவன்.

அவன் வேகத்துக்குச் சரியாகத் தொப்பையைப் பிடித்தபடி ஓடியவர், ''இன்னைக்குத்தான் உன் பெண்டாட்டி இப்படிச் சிரிக்கக் கேட்டேன். அடாடா, கிண்கிணி நாதம் போல என்ன அழகான சிரிப்பு!'' என்று சிலாகித்தார். ''ஆனால் அந்தப் பையன்...''

''சரி சரி. அப்புறம் பார்ப்போம்'' என்று தன் வீட்டுக் கதவைத் தட்டினான் மாதவன்.

கதவைத் திறந்த சத்யாவின் மலர்ந்த முகத்தைப் பார்த்ததும் அவன் முகம் இன்னும் அதிகமாகச் சுளித்தது.

உள்ளே வந்ததும் வராததுமாக ''சாப்பாடு எடுத்துவை சத்யா, பசிக்கிறது'' என்று டவலை எடுத்துக்கொண்டு குளிக்கப் போய்விட்டான்.

அதன்படி சத்யா எல்லாம் எடுத்து வைத்தாள். அவன் உண்கையில் தட்டில் பால்கோவாத் துண்டை எடுத்து வைத்தாள்.

''இன்று அத்தான் மதன் வந்திருந்தான். வரும்போது கொண்டு வந்தான்'' என்றாள்.

அவன் இனிப்பை உண்டதும் தன் இனிய சேதியைச் சொல்ல ஆவலுடன் காத்திருந்தாள்.

அவனோ இனிப்பை எடுத்து மீண்டும் பாத்திரத்திலேயே போட்டு விட்டான். ''இப்போது எனக்கு இனிப்பு உண்ணத் தோன்றவில்லை'' என்றான் தட்டைப் பார்த்துக்கொண்டு.

சத்யாவுக்கு ஒரு மாதிரி ஆகி விட்டது. இனிப்பு உண்ணத் தோன்றாதவனுக்கு இந்த விஷயத்தை எப்படிச் சொல்வது? முதலில் பசி தீரட்டும் என்று காத்திருந்தாள்.

அவன் உண்டு முடித்துக் கைகழுவி வந்ததும் மீண்டும் அவனிடம் ஓடி வந்தாள் ''வந்து...''

கைப்பெட்டியைத் திறந்து சில புத்தகங்களை எடுத்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்தான். ''நீ இன்னும் சாப்பிடவில்லை?''

மூச்சடைக்க ''இல்லை வந்து...'' என்று மீண்டும் தொடங்கினாள் சத்யா.

''போய்ச் சாப்பிடு.'' என்று ஒரு புத்தகத்தைப் பிரித்தான் மாதவன்.



''வந்து... உங்களிடம் ஒன்று...'' அவள் ஆவலுடன் மீண்டும் தொடங்கினாள்.

அவன் அலுப்புடன், ''போ சத்யா. போய்ச் சாப்பிடு. எனக்குப் பரீட்சை நெருங்குவது தெரியும் அல்லவா? தொல்லை பண்ணாமல் போ'' என்று புத்தகத்தில் மூழ்கினான்.

சத்யாவின் முகம் வாடிப் போயிற்று. அவன் ''மானேஜ்மெண்ட்'' பரீட்சை ஒன்றுக்காகப் படித்து வருவது அவளுக்குத் தெரியும்தான். ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் படிப்பது இல்லை. ஆனால், இந்த ஞாயிறு தொடங்கிய விதமே வேறுதானே.

ஏமாற்றத்துடன் அவனுக்கு படுக்கை விரித்துவிட்டு ஓரமாகப் படுத்துக் கொண்டாள். சற்று நேரம் காத்திருந்தவள் அப்படியே தூங்கிவிட்டாள்.

பாடத்தை மூடி வைத்த பின்னரும் அவன் அறையினுள்ளே குறுக்கும் நெடுக்குமாக வெகுநேரம் நடை பயின்றது அவளுக்குத் தெரியாது.

மறுநாளும் மாதவன் முகடு போலவே இருந்தான்.

சும்மாவே சரியாகச் சாப்பிட முடியாததால் வந்த சோர்வும் தலை சுற்றலுமாக கஷ்டமாக இருந்தது. சமாளித்துக் கொண்டே எல்லாம் செய்து அவனை அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தாள்.

பின்னர் வழக்கம் போலத் தட்டில் இட்டிலியைப் போட்டுக்கொண்டு உண்ணத் தொடங்கினாள். முந்திய நாள் சரியாகச் சாப்பிடாததால் பசி வேகத்தில் இரண்டு இட்டிலிகளும் நிமிடத்தில் காலியாயின.

மதன்கொணர்ந்த பால்கோவாவை உண்ணலாமே என்று ஒரு துண்டு வாயில் போட்டுக் கொண்டதுதான் தாமதம். ஒரேயடியாக வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. அவளுக்கு ஓடிச் சென்று குளியலறையை அடையவும் ஒரே வாந்தி.

வாந்தி என்றால் பயங்கரம். குடலே வெளியில் வந்து விடுமோ? இது நிற்கவே நிற்காதோ என்று அஞ்சி விட்டாள் சத்யா. இதெல்லாம் யாருக்கும் நேர்ந்து பார்த்த அனுபவமும் இல்லாததால் மிகுந்த பயம் வந்தது.

ஆனால் அதற்குள் ரங்கண்ணாவின் மனைவி அவசரமாகப் பின் வழியே வந்தாள். சத்யாவின் தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள். ஒரு கையால் அணைத்துப் பிடித்து, மறு கையால் நீர் எடுத்து முகத்தில் அடித்தாள். வாயைக் கொப்பளிக்க வைத்தாள்.

ஒருவாறு சத்யாவுக்கு வாந்தி நின்று முகம், உடல் எங்கும் வியர்த்துக் கொண்டு வந்தது. ஓர் எட்டு எடுத்து வைக்கு முன் எங்கோ பறப்பது போல இருந்தது. அந்த அம்மாளை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

சத்யாவின் மிரண்ட விழிகளைப் பார்த்து அந்த அம்மாள் ஆறுதலாகப் புன்னகை செய்தபடி, "வா உள்ளே வந்து படுத்திரு" என கைத்தாங்கலாக உள்ளே அழைத்துச் சென்றாள்.

''இல்லை... இதை'' என்று பலவீனமான குரலில் கூறிக் குளியலறையைச் சுத்தம் செய்ய முனைந்தாள் சத்யா. மீண்டும் வயிற்றைப் புரட்டவே நிமிர்ந்தாள்.

''சொன்னால் கேளம்மா'' என்று உள்ளே அழைத்துச் சென்று படுக்க வைத்தாள் ரங்கண்ணாவின் மனைவி. வியர்வை மறைய லேசாக விசிறினாள்.

''அங்கே நான் பார்த்துக் கொள்கிறேன்... வேண்டாமா? ஏன் நானும் அக்கா தங்கையோடு பிறந்தவள் தானே. நானும் பதினாறு பெறவில்லையா, உனக்கு முதல் என்பதால் பயப்படுகிறாய் சும்மா, அதுதானே'' என்று வினவினாள்.

வெட்கத்துடன் தலையசைத்தாள்.



''அம்மாவுக்கு எழுதி விட்டாயா? அவர்களைப் பார்க்க மிகவும் ஆசையாக இருக்குமே இப்போது.''

''எழுதவில்லை'' என்ற சத்யாவின் இளம் முகத்தில் இருந்த ஏக்கத்தை, அந்த அம்மாள் புரிந்து கொண்டாள்.

மணமான கையோடு இருவரும் அங்கே வந்து விட்டதையும், உறவு முறை என்று யாரும் அங்கே வராததையும் கண்டு அவளும் தனக்குள் ஒரு கதையை ஊகித்திருந்தாள். இன்னொரு பெண்ணின் உணர்ச்சியினைச் சரியாகப் புரிந்து கொண்ட அந்த நல்ல பெண்மணிதான் செய்ய வேண்டியது என்ன என்று முடிவு செய்து கொண்டாள்.

அன்று மாலையும் மாதவன் வீடு திரும்ப வெகு நேரம் ஆயிற்று.

இருட்டிவிட்ட அந்த வேளையிலும் அவன் வரவை எதிர்நோக்கி காத்திருந்த ரங்கண்ணா அவசரமாக அவனிடம் சென்றார்.

அவன் தோளில் தட்டி "ரொம்ப சந்தோஷம் ஆனால் என்னைப் போலவே அவசரப்பட்டுட்டே. இன்னமும் பிடிவாதமா இருக்காதே. ஆத்துக்காரிச் சொல்லச் சொன்னா, அவா ஆத்துக்கெல்லாம் சொல்லிப்புடு'' என்றார் வெற்றிலையைக் குதப்பியபடி.

அருவெறுப்புடன் அவர் கையைத் தட்டிவிட்டு விலகினான் மாதவன்.

அவர் கவனியாமல் ''அதைவிடப் பேசாம ஒரு மூணு மாசம் அவாத்துக்கே அனுப்பிச்சுடு. இல்லேன்னாக்கா வாந்தி மசக்கைன்னு நம்ம உயிரை எடுத்துப்பிடுவாள். அதோட நேத்து அந்தப் பிள்ளையாண்டான்கூட ரொம்பச் சொன்னான். இந்த நிலையிலே கூட சத்யாவை இங்கேயே அடைச்சு வைக்கணுமான்னான்'' என்று பேசிக்கொண்டே போனார்.

மாதவன் பதிலே கூறாமல் வீட்டை நோக்கி விரைந்தான்.

கதவைத் திறந்த மனைவியின் முகத்தை வெறித்துப் பார்த்தான்.

பிறகுதான் ரங்கண்ணாவுடைய மனைவி அங்கே இருப்பதைக் கவனித்தான்.

சேலையை இழுத்துப் போர்த்திக் கொண்டு ''இது மாதிரி வேளையிலே பிடிவாதம் பிடிக்கக் கூடாது. சத்யாவுக்குத் தள்ளலை. அவ அம்மாவுக்கு எழுதச் சொல்லுங்கோ. ஆசை தீரச் சீராட்டிவிட்டு வரட்டும். நான் வரட்டுமாடி சத்யா?'' என்று பின்வழியே வெளியேறினாள்.

அவள் சென்ற பின்னர் வீட்டில் சற்று நேரம் அமைதி நிலவியது.

அந்த அம்மாள் தன் கணவன் முன் விஷயத்தை இப்படிப் போட்டு உடைத்து விட்டாளே என்று சத்யா வெட்கத்தில் சிவந்து போனாள்.

சற்று நேரம் தலை குனிந்து நின்ற சத்யா கணவன் ஒன்றும் சொல்லாததால் நிமிர்ந்தாள்.

அவன் சன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டு விறைப்பாக நின்றான்.

ஏன் என்று புரியாமல் அவன் அருகே சென்றாள் சத்யா.

சட்டெனத் திரும்பி மனைவியைப் பார்த்தான் மாதவன்.

அவன் விழிகளில் இரத்தப் பசி கொண்ட புலியின் கொடூரத்தை கண்ட சத்யா திகைப்பும் அச்சமுமாகப் பின்னடைந்தாள்.

''தெருவில் போகிறவனெல்லாம் சொல்லித்தான் தாலி கட்டிய கணவனுக்குத் தெரிய வேண்டியிருக்கிறது. ஆனால் நேற்று வரவழைத்திருந்தாயே - அவனுக்குச் சொல்லி விட்டாய் அல்லவா?''

மதனை அவள் வரவழைத்ததாக எண்ணிச் சினம் கொள்கிறானோ என்று சத்யா நினைத்தாள். ''அத்தான்! அவனாகத்தான் வந்தான். நான் வரவழைக்கவில்லை.''



''பிரிந்திருக்க முடியாது.''

சத்யா புரியாமல் விழித்தாள்.

ஆனால், அவன் முகம் அவளுக்கு அச்சத்தைத் தந்தது.

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்கையிலேயே அவள் நெஞ்சுக் கூட்டினுள் ஏதோ எரிந்தது.

''பிள்ளைக்குத் தகப்பனிடம் தானே முதலில் சொல்லத் தோன்றும்'' குரூரப் பார்வையுடன் கூறினான் மாதவன்.

இடி விழுந்தாற்போலத் திகைத்த சத்யா, ''நீங்கள்... நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்'' என்று கூவிவிட்டாள்.

## 8

தன் காதுகளையே நம்ப முடியாதவள் போல சத்யா கணவனை வெறித்துப் பார்த்தாள்.

அவனே விடாமல், ''ஒருவேளை நேற்று வந்தவன்தான் உன் பிள்ளையின் தகப்பனோ என்று கேட்கிறேன்'' என்றான்.

''அம்மா... அய்யோ அப்பா... கடவுளே...'' எதையும் கோவையாகப் பேசும் திறன் இழந்து நெஞ்சில் ஏற்பட்ட காயத்தின் வலி பொறுக்க மாட்டாமல் சத்யா அரற்றினாள்.

அவன் இரக்கமற்றுத் தொடர்ந்தான். ''வெளிநாட்டு மோகத்தில் உன்னை உதறி விட்டானா? அதனால் தான் உன் அப்பா அவசரமாக என் தலையில் உன்னைக் கட்டி விட்டாரா உன் வயிற்றுப் பிள்ளைக்கு ஓர் இளிச்சவாய் அப்பன் வேண்டும் என்று.''

சற்று நேரம் சத்யாவால் எதையும் எண்ணவோ செய்யவோ சொல்லவோ முடியவில்லை. மூச்சு விடக்கூட முடியவில்லை.

பதினெட்டு ஆண்டு வரையிலும் அவள் அறிந்த உலகம் ஒரு பூந்தோட்டம். அங்கே மயில்கள் ஆடின. குயில்கள் கூவின. மான்கள் துள்ளி விளையாடின.

ஆனால் மணமானதில் இருந்து அவள் சுற்றுப்புறம் இருண்ட காடாகி விட்டது போன்ற பிரமை பலமுறை தோன்றியது. அங்கே புலியின் உறுமலையும் கோட்டானின் அலறலையும் கேட்பது போலத் தோன்றியதும் உண்டு. உறுமலோடு நின்றிருந்த புலி இப்போது பயந்து அவள் நெஞ்சைப் பல்லால் கடித்து நகங்களால் குத்திக் கிழிப்பது போல உணர்ந்தாள். அந்தப் புலியையே கணவனாகக் கண்டாள்.

இவனுடைய மகவு அவள் வயிற்றில்... அந்த வயிறு எங்கும் தீயைத் தாங்கினாற் போலக் காந்தலெடுத்தது அவளுக்கு.

வினாடிக்குள் அந்தத் தீ அவன் தொட்டணைத்த உடல் முழுமையிலும் பரவிற்று.

''எரிகிறதே'' என்று கதறியபடி வயிற்றைக் கைகளால் அழுத்திக் கொண்டாள்.

என்னவெல்லாம் சொல்லி விட்டான்? ''இது மாதிரி எல்லாம்... உங்களால் எப்படி பேச முடிகிறது'' என்று பிரயாசையுடன் கேட்டவள் மேலே பேச முடியாமல் விம்மினாள்.

''ஏன் பேச முடியாது? பெற்ற தகப்பனுக்கே உன்னிடம் நம்பிக்கை இல்லையே. பதினெட்டு ஆண்டு உடனிருந்து வளர்த்த பெற்றோருக்கு இல்லாத நம்பிக்கை எனக்கு எப்படி வரும்?'' அவன் மேலும் மேலும் நெருப்பை வாரிக் கொட்டினான்.

நெஞ்சையும் வயிற்றையும் கனல் தாங்காதவளாக அழுத்திவிட்டுக் கொண்டிருந்த சத்யா திகைத்து நிமிர்ந்தாள். தந்தையின் பாராமுகம். தாயின் கண்ணீரும் உடல் நலக் குறைவும்...



கடவுளே? இவன் என்ன சொல்கிறான் ''நீங்கள்... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்'' என்றாள் மீண்டும்.

அவன் இகழ்ச்சியாக நகைத்தான். ''உண்மையைச் சொல்கிறேன். உன் நடத்தையைப் பற்றி ஒரு மொட்டைக் கடிதமும், காதலன் போலப் பாவனை செய்து நான் எழுதிய இரண்டு கடிதங்களும் உன்னைச் சந்தேகிக்கப் போதுமானதாக இருந்தது. உன் அப்பாவுக்கு, பெற்று வளர்த்த மகளை முன்பின் அறியாத ஏழையிடம் கொண்டுள்ள இது போதும் என்றால் அந்த மகளின் நடத்தை எப்பேர்ப்பட்டதாக இருக்கும்? திருமணத்துக்கு முன் எத்தனை பேரிடம் பழகினாய், சத்யா?''

''கடவுளே, கடவுளே, கடவுளே...'' சத்யா துடித்துக் கொண்டே அந்த அறையை விட்டு அகன்றாள். சமையல் அறையினுள் சென்று தரையில் சாய்ந்தாள்.

''அப்பா, அப்பா! உங்கள் பாரா முகத்துக்கு இதுதானா காரணம்! நம்ப முடியவில்லையே! இந்த' அற்பக் காரணத்தால் என்னை வெறுக்க உங்களால் முடிந்ததா! எப்படி முடியும்? அப்பா... அப்பா நான் என்ன தப்பு செய்தேன்? அப்பா. கடவுளே, முருகா...'' என்று புலம்பியது கபடு அறியாத அவள் மனம்.

வெகு நேரம் வரையிலும் விழிநீர் ஓயும்வரைக் கண்ணீர் பெருக்கியது தவிர சத்யாவிடம் அசைவில்லை. முன் அறையில் அவனிடமும் அசைவில்லை.

எங்கோ மணி பத்தடித்த ஓசை கேட்டது.

''சாப்பாட்டு நேரம் தாண்டி விட்டது, சத்யா?'' என்று எச்சரிப்பவன் போலக் கூறிவிட்டுக் கை கழுவிப் பின்புறம் சென்றான்.

கை கால்களை அசைப்பதும் சிரமமாயிருந்தது சத்யாவுக்கு. வேதனையைப் பாராமல் இயந்திரம் போல உணவை எடுத்து

வைத்தாள்; அவன் எதை உண்டான் என்று எதுவும் அவள் மனதில் பதியவில்லை.

அவன் உண்டு கை கழுவச் சென்றதும், மீண்டும் பாத்திரங்களைச் சமையல் அறையில் எடுத்து வைத்துவிட்டு அடுப்படிச் சுவரில் சாய்ந்து விட்டாள். என்ன ஏது என்று புரியாத நிலையில் மனம் கலங்கி இருந்தது. ஆனால் முன் அறையும் படுக்கையையும் நினைத்தாலே நெஞ்சில் நெருப்பு பற்றி எரிந்தது.

கை கழுவி விட்டு வந்த பின் கதவைத் தாளிட்டான் மாதவன். சத்யாவைப் பார்த்தபடி சில வினாடிகள் நின்றான். அதிகம் பேசி விட்டோம் என்று உறுத்தினாலும் மன்னிப்புக் கேட்க தன்னகங்காரம் இடம் தரவில்லை, எனவே "சாப்பிடவில்லையா?" என்றான் சற்றுத் தணிவான குரலில்.

அவள் காதில் விழாதது போலப் பேசாதிருந்தாள்.

அவள் முன்னே சென்று. "சாப்பிடவில்லையா?" என்று அழுத்தி கேட்டான் அவன்.

பிறகுதான் திடுக்கிட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்து விழித்தாள் சத்யா. "சாப்பிடவில்லையா என்று கேட்டேன்" என்றான் அவன் மீண்டும் குரலைத் தணித்து.

தலையசைத்து விட்டு பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள் சத்யா.

"சாப்பிடு" என்றான் அவன்,

மீண்டும் ஒரு தலையசைப்பு.

"சாப்பிடு" என்றான் அவன் அதட்டலாக.

மெல்ல நிமிர்ந்தாள் சத்யா அதற்குள் உதடு துடித்து மீண்டும் விழிகளில் நீர் பெருகலாயிற்று.

"பட்டினி கிடந்தால் உடம்பு கெட்டுவிடும் சத்யா."



......

"சரி வேண்டாம் எழுந்துவா படுத்துத் தூங்கு" என்றான், அவன் மேலும் இதமான குரலில்.

தலையசைத்துவிட்டு மீண்டும் பழையபடியே சாய்ந்து கொண்டாள், சத்யா.

"இப்படியே தூங்குவாயா?"

பதில் இல்லை எனவும் அவன் சுதி ஏறியது. "கேட்டுக் கொண்டே இருக்கிறேன். நீ அசையாமல் இருந்தால் என்ன அர்த்தம்?" என்று அருகில் வந்து கால்களைப் பற்றி அவளை எழுப்பினான்.

அவள் கையை உதற முயன்றாள் சத்யா. அவன் விடாமல் அவளைத் தூக்கி நிறுத்தி, "சொன்னால் கேட்க வேண்டும் சத்யா. வா, வந்து கட்டிலில் படுத்து தூங்கு" என்று குழைவாகக் கூறி அவளை மென்மையாக அணைத்தான், ஒரு கையால் அவள் கன்னத்தை மெல்ல வருடினான்.

எதையும் உணராமல் சற்று நேரம் நின்றாள் சத்யா. பிறகு தான் சொல்லக்கூடாததை எல்லாம் கூசாமல் சொல்லிவிட்டு இந்த அணைப்பினால், அவன் தன்னை மீண்டும் அடிமைப்படுத்த முயல்வதைப் புரிந்து அறியாத பெருஞ்சினம் சீறி எழுந்தது. அந்தச் சினம் தந்த பலம் கொண்டு அவனை உதறினாள். மிகுந்த வெறுப்புடன் அவனைப் பார்த்தாள். "எச்சில் இலை என்று கண்ட பிறகுமா இந்த மோகம்?" என்றாள் இகழ்ச்சியாக.

தன்னை அறிந்து கொண்டாளே என்பதுடன் அவளது வார்த்தைகளும் அவனைச் சீண்டின. அவளைக் குதறி விடுகிறவனாக "ஏன் ஊர் அறிந்த பரத்தையிடம் கூடப் போட்டிப் போட்டுக்கொண்டு ஓடுவது இல்லையா?" என்று அவளை இறுகப் பற்றினான், மாதவன்.

அவனது அந்தக் கொடிய வார்த்தைகளில் அரைகுறை உயிருடன் இருந்த ஏதோ ஒன்று தன்னுள் சாவதைச் சத்யா உணர்ந்தாள்.

முதல் நாளில் இருந்தே மெல்லிய நூல் அளவிலேயே இணைந்திருந்த திருமண பந்தம் அந்த வேளையில் அறுந்து விழக் கண்டாள்.

''முடிந்தது எல்லாமே முடிந்தது'' என்று உள்ளத்தின் குரல் உறுதியாகக் கூறக் கேட்டாள்.

இரவெல்லாம் ஆயிரம் கனவுகள் வந்து அவளை அஞ்ச வைத்தன. காடும் புலியும் பாம்பும் தேளுமாக அவள் கனவில் தோன்றி பயமுறுத்தின. பயந்து அவள் கதறியதில் ஒரு முறை மாதவன் அவளை எழுப்பி நீர் அருந்தச் செய்து படுக்க வைத்தான். கடைசியாக விடிகாலை நேரத்தில்தான் சத்யா சற்று அயர்ந்து உறங்கினாள்.

மீண்டும் அவள் கண் விழித்தபோது வெயில் ஏறியிருந்தது. மெல்ல எழுந்தாள். தலை தாங்கொணாத பாரமாகிக் கனத்தது. தலையைக் கையில் தாங்கிக்கொண்டு அப்படியே அமர்ந்திருந்தாள்.

அதற்குள் சமையல் அறையில் இருந்து மாதவன் வந்தான். ''காபி குடிக்கிறாயா சத்யா?''

''வேண்டாம்'' என்பது போலத் தலையசைத்துவிட்டு அவள் எழுந்தாள். உடல் தள்ளாடியது. அவன் வேகமாக அவளைத் தாங்க வந்தபோது, விலகி மெல்ல நடந்தாள்.

''சத்யா பசிக்கிறதா?''

மீண்டும் ஒரு தலையசைப்புத்தான் பதிலாயிற்று.

''இரவு நீ சாப்பிடவில்லை. கொஞ்சம் காபி மட்டுமாவது குடி'' என்று காபி தம்ளரை அவள் வாய் அருகில் கொண்டு வந்தான்



மாதவன். ஆனால் அவளுக்குக் குமட்டுவதைக் கண்டதும் தம்ளரை விலக்கி விட்டான்.

''சத்யா சமையல் எல்லாம் முடித்து விட்டேன். புளிக்காய்ச்சல்கூட உனக்குப் பிடிக்குமே என்று செய்தேன். இப்போது நீ அலட்டிக் கொள்ளாமல் ஓய்வாக படுத்திரு'' என்றான் பரிவாக.

அவனது பரிவை உணரமாட்டாதவள் போல அசையாமல் அமர்ந்திருந்தாள் சத்யா. தலையில் கனம் ஒன்றுதான் புரிந்தது. முன்போலவே தலையைக் கைகளில் தாங்கி அமர்ந்தாள்.

டிபன் பாக்சுடன் மாதவன் வந்தான். ''நான் அலுவலகம் சென்று வரட்டுமா சத்யா? உனக்குத் துணையாக ரங்கண்ணாவின் மனைவியை வரச் சொல்லட்டுமா?''

மீண்டும் மறுத்துத் தலை அசைத்தாள் சத்யா.

''வரட்டுமா, சத்யா?'' மீண்டும் தயங்கி நின்றான் மாதவன். ''சத்யா இன்று கட்டாயமாக அலுவலகம் செல்ல வேண்டியிருக்கிறது. முடிந்த அளவு மாலையில் விரைவாகத் திரும்பி விடுவேன். நீ எந்த வேலையும் செய்ய வேண்டாம், சத்யா. எல்லாம் நான் வந்து பார்த்துக் கொள்கிறேன். நீ படுத்து ஓய்வு எடுத்துக் கொள். மறக்காமல் சாப்பிடு வரட்டுமா.''

ஒரு சிறு தலையசைவு தவிர வேறு பதில் இல்லை.

உதட்டைக் கடித்துக்கொண்டு சற்று நேரம் நின்று விட்டுப் பிறகு கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான் மாதவன்.

சத்யா இருந்த இடத்திலேயே உறைந்தவள் போல இருந்தாள். வெகுநேரம் கடந்தது.

''சென்னை பஸ் இன்னும் அரைமணி நேரத்தில் கிளம்பும்'' என்று யாரோ தெருவில் சொன்னது கேட்டது.

சென்னை அப்பா இருக்கும் ஊர். உயிர் வந்தாற்போல் சத்யா எழுந்தாள்.

சென்னைக்குச் செல்ல டிக்கட்டு எவ்வளவு இருக்கக்கூடும்? பத்து ரூபாய்? இருபது ரூபாய்?

மாதவனின் பெட்டியைத் திறந்து ஓர் இருபது ரூபாய் எடுத்தாள்.

எழுந்து கதவைச் சாத்திக் கொண்டு நடந்தாள்.

மூன்று ஞாயிறு உலாப்போன பலன் - பஸ் ஸ்டாண்டுக்குச் செல்ல வழி தெரிந்தது.

டிக்கட்டு வாங்கி, பஸ்ஸில் ஏறி அமர்ந்து இருக்கையில் தலையைச் சாய்த்துக் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

முன்னதாகக் கேட்டுக் கொண்டு வீடு திரும்பிய மாதவன் எதிரே பஸ் வரவும் ஒதுங்கினான்.

பஸ்ஸில் கண்களை இறுக மூடிக்கொண்டு சத்யா இருப்பதைக் கண்டு திகைத்தான்.

அவசரமாக ஓர் எட்டு வைக்கு முன், பஸ் வேகமாகச் சென்று மறைந்தது.

## 9

அலுவலகத்திலிருந்து அப்போதுதான் திரும்பி வந்திருந்தார், செல்வரத்தினம்.

உடைமாற்றிக் கொண்டு வருகையிலேயே மனக்குரங்கு ஓடியது. முன்னெல்லாம் இந்த நேரத்தில் ''அப்பா டிபன் காபி ரெடி'' என்று சத்யா முகத்தில் முறுவலுடன் எதிர் கொள்வாள். கோட்டையும் ப்ரீஃப்கேசையும் எடுத்துப் போய் வைத்துவிட்டு, அவர் முகம்



கழுவி வருமுன் சிற்றுண்டி எடுத்து வைத்துவிட்டு வந்து விடுவாள். சிட்டாகப் பறப்பாளே?

மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு மாடியிறங்கி சாப்பாட்டு அறைக்குள் சென்றார். அங்கே சின்ன மகள் ரொட்டியில் வெண்ணை தடவி தட்டில் எடுத்து வைப்பதைக் காணவும் சற்று ஆறுதலாக இருந்தது.

மேசைமேல் மூன்று தட்டுகள் இருந்தன.

''அம்மா வந்தாயிற்றா, சின்னக் கண்ணா?'' என்று ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

''ஆமாம், இன்று நானும் சித்ராவும் சேர்ந்துதான் போய்விட்டு வந்தோம்'' என்று வந்து அமர்ந்தாள் விஜயா.

''காபிக்கு சர்க்கரை எவ்வளவு வேண்டும் அப்பா?'' என்று கப்பில் டிகாஷனை ஊற்றினாள், சித்ரா.

''ஒன்றரை ஸ்பூன்'' என்ற தந்தை, சத்யாவுக்குச் சொல்லாமலே தெரியும் என்று நினைத்தார்.

அவர் முகம் வாடுவதைக் கண்ட சித்ரா பேச்சை மாற்றினாள்.

''அப்பா, இன்று சமூக சேவை செய்ய சேரிக்குப் போனபோது என்ன நடந்தது தெரியுமா? அம்மா சொல்லட்டுமா?'' என்று தாயைப் பார்த்து சிரித்தாள்.

முகம் சிவக்க, ''சரிதாண்டி வாயை மூடிக் கொள்'' என்றாள். தாயார்.

''என்ன, என்ன நடந்தது? சொல்லு'' என்று மகளை ஊக்கினார் தந்தை.

இதழுக்கிடையில் சிரிப்புடன், ''சேரிப் பையன் ஒருவன் புழுதியில் புரண்டு கொண்டிருந்தான். சட்டையை அழுக்காக்கு கிறாயே என்று கேட்டால், ''காரிலே வர்ர அந்தம்மா நல்லா

தோய்த்துத் தருவாங்க'' என்று அம்மாவைக் காட்டுகிறான்'' என்று முடிக்கவும் செல்வரத்தினமும் சேர்ந்து சிரித்தார்.

''அப்படியா சங்கதி இங்கே டிரை கிளீனுக்கு மாதம் இருநூறு ரூபாய் செலவு. அங்கே சேரிப்பையன் சட்டையை துவைக்கிறாயா? விஜி, கேட்டுக்கொள். நாளையிலிருந்து என் லுங்கி, சட்டை எல்லாம் துவைத்த பிறகுதான்...''

வாயில்புறம் அசைவு கண்டு நிமிர்ந்த செல்வரத்தினத்தின் வாக்கியம் பாதியில் நின்றது.

இளைத்து, கறுத்து, தேய்ந்து, உருமாறி நிற்க முடியாமல் கதவு நிலையில் சாய்ந்திருந்த மெலிந்த உருவம்... சத்யாவேதான்.

''சத்யா...''

''சத்யாவா?''

''அக்காவா?''

அவசரமாக எழுந்து திரும்பிய தாயின் குரலும் தங்கையின் குரலும் அவளை எட்டாதது போல விழிகளில் நீர்த் திரையுடன் தந்தையை பார்த்துக் கொண்டு நின்றாள்.

சற்று நேரம் கூர்ந்து பார்த்துவிட்டு, ''என் மேல் சந்தேகப்பட்டீர்களாமே, அப்பா?'' என்று கேட்டாள் மிகவும் மெல்லிய குரலில்.

செல்வரத்தினத்தால் ஒன்றும் பேச முடியவில்லை.

முதலில் அந்த மொட்டைக் கடிதம் அவரை பாதிக்கவில்லைதான். ''உன் மகளின் நடத்தை கெட்டுவிட்டதே! மானத்தை வானத்துக்கு அனுப்பி விட்டாயா செல்வரத்தினம்?'' என்று தொடர்ந்த கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டார். பணக்கார வீடு என்றால் இந்தச் சில்லுண்டிகள் விஷமம் இருக்கத்தான் செய்யும் என்று அலட்சியமாகத்தான் இருந்தார்.



ஆனால், என்றும் இல்லாதபடி ''அந்தரங்கம்'' என்று போட்டு சத்யாவுக்கு வந்த இரு காதல் கடிதங்கள் அதிலும் ''தந்தை நிச்சயம் மறுப்பார்'' என்றும் ''அதனால் யாருக்கும் தெரியாமல் ஓடி விடலாம்'' என்றும் சத்யா எழுதியதைக் குறிப்பிட்டு அது பற்றி யோசிப்பதாக அவன் எழுதியிருந்த அந்தக் கடிதம், அவர் நெஞ்சைப் பிளந்தது. அங்கே குடியிருந்த சத்யாவை எடுத்து வெளியே எறிந்தது.

ஓடிவிடுவதா? அந்த எண்ணம் செல்வரத்தினத்தின் மகளுக்கா? அந்த மகள் மேலா உயிரையே வைத்தார்! அப்போதும் கவனித்தார். கடற்கரையில் அவனிடம் சிரிக்கக் கண்டார். ஓடிப்போய் வாழ்கிற வாழ்வையே வாழட்டும் என்று அந்தப் பையனுக்கே அவளை மணமுடித்து அவளுக்கு தலை முழுகினார். அப்போது மனம் கேளாமல் தான் மூவாயிரம் ரூபாயை அனுப்பினார். எப்படியோ தொலையட்டும் என்று எண்ணினார்.

அதனால் அந்த மகள் இன்று வாடிய கோலத்தில் ''சந்தேகப்பட்டீர்களாமே அப்பா'' என்று ஈனசுரத்தில் கேட்கவும், அவர் உடல் ஆடிப் போயிற்று. நான் செய்தது தவறோ? காதலித்தவனை மணந்த களிப்பை அவள் முகத்தில் காணவில்லையே. கண்ணீர் ததும்பும் கண்களும் எலும்பெருத்த முகமும்...

அதோ அவள் மேலும் பேசுகிறாளே.

''பதினெட்டு ஆண்டுகள் உயிராக வளர்த்தீர்களே அப்பா, என்னிடம் நீங்கள் அவநம்பிக்கை அடைய ஒரு மொட்டைக் கடிதமும் நீங்கள் அறியாமல் என் விலாசமிட்டு யாரோ எழுதிய இரு கடிதங்களும் போதுமானதாகி விட்டதா அப்பா? இவ்வளவு எளிதில் என்னிடம் நம்பிக்கை இழக்க நான் என்ன செய்தேன்? நான் என்னப்பா தப்பு செய்தேன்.''

பெருமூச்சுகள் இடையே பேச முடியாமல் மகள் தவிக்கத் தவிக்க அவருக்கு பொறுக்க முடியவில்லை.

பொய்க் கடிதம் என்கிறாளே; கடவுளே அப்படியானால்? என்ன தபபு செய்தேன் என்றும் கேட்கிறாளே? அவளாக என்ன செய்தாள்? எதுவும் இல்லையே... ஏன் இல்லை? ''அன்று கடற்கரையில் அவனைக் கண்டு சிரித்துப் பேசினாயே'' என்றார்.

''அறிமுகம் ஆன மனிதரைப் பார்க்க நேர்ந்தால், முகம் திருப்பிக் கொள்ள வேண்டுமா அப்பா? அப்படிப்பட்ட மரியாதையையா நீங்கள் எனக்குத் கற்றுத் தந்திருக்கிறீர்கள்?''

''சத்யாம்மா, அப்படியானால்...'' என்று கலக்கத்துடன் எழுந்தார் செல்வரத்தினம்.

''யார், என்ன என்று கூடப் பார்க்கவில்லையே அப்பா. அவர் ஒரு சூதாடியாக இருந்திருக்கலாம்; மனைவியை அடிக்கும் குடிகாரனாக இருந்திருக்கலாம்; ஏன்? பெண்களை மணந்து விபசார விடுதிக்கு விற்கும் கயவனாகக் கூட இருந்திருக்கலாம்; அப்படி இருந்திருந்தால் என் கதி என்ன அப்பா?''

சத்யாவின் மெலிந்த குரல் ஒவ்வொரு பயங்கரத்தையும் படம் பிடித்துக் காட்டிற்று.

''சத்யாம்மா...'' என்று அலறினார் தந்தை.

பொங்கி வழிந்த கண்ணீரைக் கையால் துடைத்தாள் சத்யா.

கையின் சொரசொரப்பு மிருதுவான கன்னத்தில் உறுத்தவும் இரு கைகளையும் தந்தை முன் விரித்துக் காட்டினாள்.

''என் கைகளைப் பார்த்தீர்களா, அப்பா? வீணை கற்றுக்கொண்டால் விரல் புண்ணாகிவிடும். வேண்டாம் என்றீர்களே அந்தக் கைகளால் நான் கயிற்றைப் பிடித்து நீர் இறைத்தேன். அப்பா கல் அம்மியில் மிளகாய் அரைத்தேன். ஆட்டுரலில் மாவு ஆட்டினேன்; அப்போதெல்லாம் என்னைக் கஷ்டப்பட விட்டு விட்டு நீங்கள் ஏன் சும்மா இருந்தீர்கள் என்று எனக்குப் புரியவே இல்லை. அப்பா யோசித்து யோசித்துப் பார்த்தேன். ஒரு வேளை அவர் மேல் ஏதாவது கோபம் இருக்கும் என்று நினைத்தேன். ஆனால், என் மேலேயே வெறுப்பு கொண்டிருந்தீர்கள் என்று நான் எண்ணவே இல்லையேப்பா... அப்பா, ஒரு வார்த்தை கேட்கவில்லையே. அப்பா விசாரிக்கும் அளவு கூட நம்பிக்கை இல்லையே! அந்த அளவுக்கு நான் என்றைக்கு என்ன தப்பு செய்தேன்?''



சுளீர் சுளீர் என்று அறை விழுந்தாற்போலச் செல்வரத்தினம் துடித்துப் போனார் ''கண்ணம்மா... நான்...''

மூச்சு வாங்க மீண்டும் சத்யா பேசினாள். ''பதினெட்டு ஆண்டு வளர்த்த நீங்களே என்னை நம்பாத போது அவர் எப்படியப்பா நம்புவார்? அவர் கேட்டதிலேதான் என்ன தப்பு?''

''அவன் என்னடீ கேட்டான்?'' மகளின் கண்ணீரையும் அதைவிட அதிகமாகக் கணவரின் தவிப்பையும் பொறுக்க மாட்டாமல் விஜயா ஆத்திரமாக கேட்டாள்.

அப்போதுதான் தாய் இருப்பதை உணர்ந்தவள் போலச் சத்யாவின் பார்வை மெல்லத் தாயிடம் திரும்பியது. சகிக்க முடியாத வேதனையில் முகம் நசுங்கியது.

''என்ன கேட்டார்?'' மெலிந்த கையால் அடி வயிற்றைத் தொட்டு, ''இந்த வயிற்றில் இருக்கும் குழந்தையின் தகப்பன் யார் என்று கேட்டார். அந்தத் தகப்பன்...நான்தான்...என்று..எப்படி நம்புவது என்று...அம்மா...அம்மா.. எனக்கு உடம்பு எல்லாம் எரிகிறதே அம்மா வயிற்றுக்குள் தீப்பற்றுகிறதே அம்மா. எரிகிறதே அம்மா...'' என்று கதறினாள்.

எல்லோருக்கும் முன்பாக சத்யாவை எட்டிய சித்ரா ''அம்மா அக்காவின் உடல் கொதிக்கிறது'' என்றாள் பதட்டத்துடன்.

இந்த வார்த்தையை கேட்பதா என்ற கொதிப்புடன் ''அப்படி எல்லாம் நினைக்கிறவன் எப்படி உன்னை...'' என்று ஆங்காரமாகத் தொடங்கிவிட்டு நிறுத்தினாள் தாய்.

முற்றிலும் அதிக வேதனையுடன் ''அதை நானும் கேட்டேன் அம்மா, அவர் அதற்குப் பதில் சொன்னாரே அம்மா.. ஊர் அறிந்த பரத்தை..'' சொல்ல இயலாமல் சத்யா தவிக்கையில் சட்டெனச் ''சொல்லாதேடி சத்யா'' என்று கூவினாள் தாய்.

அரை மயக்க நிலையில் சத்யா தொடர்ந்தாள்.

''பரத்தையிடம்... கூட ஓடுவ...தில்லையா என்று.. அம்மா எரிகிறதே அம்மா. நெஞ்சமெல்லாம் எரிகிறதே... வயிறு காந்துகிறதே... தீ... அம்மா... அம்மா அம்மா...''

முழுக்க முழுக்க நினைவு இழந்து விழுகிற வரையிலும் சத்யாவின் கதறல் நிற்கவில்லை!

## 10

''எரிகிறதே அம்மா... அப்பா... எரிகிறதே?''

மருத்துவமனையில் தனி, அறையில் கட்டிலில் புரண்ட சத்யா முனகினாள்.

''சரியாகிப் போகும் கண்ணம்மா'' என்றார் அருகில் இருந்த தந்தை கண்ணீருடன்.

மகளின் தவிப்பு அவள் பட்ட வேதனையும் அவருக்குத் தாள முடியவில்லை. முக்கியமாக இதற்கெல்லாம் அவர் அல்லவா காரணமாகிப் போனார்.

''அப்பா...'' என்று கண்ணைத் திறவாமலே கையால் துழாவினாள் மகள்.

''என்னடா அம்மா'' என்று அவசரமாக அவள் கையைப் பற்றிக் கொண்டார் செல்வரத்தினம்.



''என் பக்கத்திலே இருப்பீர்களா? அப்பா? எனக்கு... எனக்கு ஒரே பயமாக இருக்கிறதே.''

''அப்பா உன் பக்கத்திலேதான் இருக்கிறேன் கண்ணா.''

சற்று நேர அமைதிக்குப்பின், ''அப்பா...'' என்றாள் சத்யா.

''என்ன கண்ணம்மா?''

''அங்கே காடு அப்பா. புலி பாம்பு...''

''அதெல்லாம் ஒன்றும் வராது கண்ணா. நான் உன் அருகிலேயே இருக்கிறேன் பார்.''

''முன்னே காட்டில் விட்டீர்களே...'' முனகியவள் தந்தையின் கையைப் பிடித்தபடி சற்று அமைதி பெற்றுத் தூங்கத் தொடங்கி னாள்.

சாப்பாட்டை எடுத்துக்கொண்டு விஜயா வந்தாள். ''நீங்கள் சாப்பிடுகிறீர்களா?'' என்றபடி வந்தாள். கணவரின் கண்களில் நீரைக் கண்டதும் பதறி ''என்ன'' என்று அருகில் ஓடி வந்தாள்.

அவர் ''உஷ்'' என்று எச்சரிக்குமுன் சத்யாவின் தூக்கம் கலைந்து போயிற்று. ''அப்பா அப்பா, என் பக்கத்திலேயே...''

''இருக்கிறேன் கண்ணா, காடு, பாம்பு, புலி ஒன்றும் வராது. நீ தூங்கம்மா'' என்றார் அப்பா.

அதற்குள் விஷயத்தைப் புரிந்துகொண்டு ''அப்பா சாப்பிட வேண்டாமா, சத்யாம்மா! இதோ, அம்மா உன் பக்கத்திலேயே இருக்கிறேன், அப்பா சாப்பிட்டுவிட்டு வரட்டும்'' என்று மகளின் மறுபுறம் அமர்ந்து அடுத்த கையைப் பிடித்துக் கொண்டாள்.

தாயின் கரத்தையும் இறுகப் பற்றினாள் சத்யா.

''அப்பா என் பக்கத்திலேயே...''

''இருக்கிறேன் சத்யா கண்ணா.''

இரவு எட்டு மணிக்கு ''ரவுண்ட்ஸ்'' வந்த டாக்டர், செல்வரத்தினத்தைப் பார்த்து, ''இனி நீங்கள் இங்கே இருக்கக் கூடாதே செல்வம். விஜயம் இருக்கட்டும். நீங்கள் காலையில் வரலாம்'' என்றார்.

''டாக்டர், என் தங்கம் பயப்படுகிறாளே, நான் இல்லாவிட்டால் அலட்டுகிறாளே'' என்று கலங்கினார் தந்தை.

செல்வரத்தினத்தின் குடும்ப நண்பரான அந்த டாக்டர் புன்னகை செய்தார். ''நீங்கள் தான் அலட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும். சத்யாவுக்குத் தூக்கத்துக்காக ஊசி போட்டு இருக்கிறேன். அவள் தூங்குவாள். நீங்களும் நன்கு தூங்குங்கள் போங்கள்'' என்று நண்பரின் தோளை அணைத்து அழைத்துச் சென்றார்.

நாலு நாட்கள் கடந்த பின்னரும் சத்யாவின் சுரம் இறங்கவில்லை. தூக்க மருந்தின் வலிமையால் உறங்கிய நேரம் தவிர, மற்ற போதெல்லாம் ஒரே அலட்டல்தான். பயம் பயம் பயம். ''அப்பா அப்பா பக்கத்திலேயே இருங்களேன்'' என்று அதே புலம்பல். எப்போதேனும் தாயின் குரல் அவளை எட்டுமானால் ''அப்பா'' வோடு ஓர் ''அம்மா''வையும் சேர்த்துக் கொண்டாள். மற்றபடி மாறுபாடாயிற்று.

''அம்மா அப்பா'' என்று அச்சத்துடன் அந்த பலவீனமான குரல் அரற்றுகையில் பெற்றவர் இருவரும் மனம் உடைந்தனர்.

மாடியில் தனியே நின்று கண்ணீர் சிந்திக் கொண்டிருந்த தந்தையைச் சித்ரா அணுகினாள். ''சிறு குழந்தை போல் என்ன அப்பா இது'' என்று அவர் விழிகளைத் துடைத்தாள்.

''என்னால் தாங்க முடியவில்லையே கண்ணம்மா,'' என்று வேதனைப்பட்டார் அவர்.

காரண காரியங்களால் தந்தையைத் தேற்ற முடியாமல் ''நடப்பது நடந்து தானே தீரும்'' என்று வேதாந்தம் பேசினாள், இளையவள்.



''தானாக நடந்திருந்தால் அப்படி மனதை சமாதானப்பட்டுக் கொள்ளலாம். சின்னக்கண்ணா ஆனால் நானாக அல்லவா என் செல்வத்தின் வாழ்வைப் பொசுக்கி விட்டேன். என் கண்மணி இப்படி செய்யக்கூடுமா என்று ஒரு கணம் நினையாமல் போனேனே.''

''கெட்ட நேரம், அப்பா'' என்ற குரல் தழுதழுக்கத் தந்தையைத் தேற்ற முயன்றாள், சித்ரா.

''ஆமாம்மா, அதுதான். அப்போதுகூட நான் சத்யா மேல் சந்தேகப்படவில்லை பாப்பா. பாழாய்ப் போன கோபம்தான். என் மகள் இப்படிச் செய்யலாமா என்ற ஆங்காரம். அந்த வெறியில் தப்பு செய்துவிட்டேன்'' என்று தனது தவறுக்கு ஒரு காரணம் கண்டுபிடித்தார். செல்வரத்தினம், ''நீ என்னை நம்புகிறாய் அல்லவா, பாப்பா?'' என்று பரிதாபமாக கேட்டார்.

''சந்தேகப்படவில்லை: ஆனால் சத்யா குற்றவாளி என்று தீர்மானித்துத் தண்டனையே, கொடுத்து விட்டீர்கள்'' என்று நினைத்தபோதும் சித்ரா அதைக் கூறவில்லை.

மாறாக, ஆறுதலாக. ''ஆமப்பா, உங்களுக்கு அக்காளிடம் அளவு மீறிய அன்பு. அதனால்தான் அந்தக் கடிதங்களைக் கண்டதும் நிலை தடுமாறி விட்டீர்கள். கிங்லியர் கதை மாதிரி கடைசி மகளை அளவு மீறி நேசித்ததால்தானே அவள் ''ஒரு தந்தையை மகள் நேசிக்கிற மாதிரி நேசிக்கிறேன்'' என்று கூறியதும், அவனுக்கு அவ்வளவு கோபம் வந்து காட்டுக்கு அனுப்பினான். வள்ளுவர்கூட அறத்திற்கும் மறத்திற்கும் அன்பே சார்பு என்று கூறவில்லையா?'' என்று ஏதேதோ கூறினாள்.

அவர் மனம் அதற்குள் மற்றொன்றில் பாய்ந்தது. ''அம்மா, அன்று சத்யா கேட்டாளே, சூதாடியாய், குடிகாரனாய் அப்புறம் விபச்சார விடுதித் தரகனாய் இருந்திருந்தால் என்று... நினைக்க

நினைக்க நெஞ்சு நடுங்குகிறதே. அப்படி இருந்திருந்தால் என் பெண் என்ன ஆகியிருப்பாள்?'' என்று உடல் குலுங்கினார்.

''அச்சச்சோ. என்னப்பா நீங்கள். அதெல்லாம்தான் இல்லையே. பிறகு ஏன் ''இருந்திருந்தால்'' என்று கலங்க வேண்டும்?'' என்று மீண்டும் அவர் கண்ணைத் துடைத்தாள் சித்ரா.

அவர் முகம் சற்று தெளிந்தது. ''ஆமாம் பாப்பா, அதெல்லாம் இல்லை அல்லவா.. ஆனால், என் மகளை அவன் எப்படி வதைத்தானோ தெரியவில்லை. எந்நேரமும் பயம் பயம் என்கிறாளே. இருபத்து நாலுமணி நேரமும் அவளை என்ன கொடுமை செய்து இப்படிக் குற்றுயிர் ஆக்கினானோ - கண் திறவாமல் கிடக்கிறாளே. பாசம் பாசம் என்று படுகுழியில் தள்ளினேனே'' என்று கலங்கினார்.

சற்று அமைதியாக இருந்துவிட்டு, எதையோ எண்ணியவள் போலச் சித்ரா தந்தையிடம் திரும்பினாள். இதழ்களில் இளம் முறுவலுடன் ''இருபத்து நாலு மணி நேரமும் கொடுமை செய்திருக்க மாட்டார், அப்பா. அக்கா ஈருயிராக இருக்கிறாள் என்பதை மறவாதீர்கள்'' என்று எங்கோ பார்த்துக் கொண்டு கூறினாள். தந்தையிடம் பேசி அறியாத விஷயம்தான். ஆனால் அவர் மனம் சற்றேனும் அமைதி பெறச் செய்ய வேண்டியிருந்தது.

செல்வரத்தினம் எதையோ சொல்ல வாயெடுத்து விட்டு நிறுத்தினார். ''ஆமாம் பாப்பா நீ சொல்வது மெய்தான். இப்போது நீ போய்ப் படுத்துத் தூங்குபோ. வெகுநேரம் விழித்திருந்தால் உடம்பு கெட்டுவிடும். போம்மா'' என்று அவளை அனுப்பினார்.

ஆனால் மகளிடம் சொல்லக்கூடாமல் மறைத்ததை மனைவியிடம் கூறினார். ''விஜி சித்ராவிடம் நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், கட்டிய மனைவியை ஒரு பர...ஊம்...வந்து, நடத்தை கெட்டவள் என்று கூறிவிட்டு அவளையே அனுபவிப்பது என்றால் அதைவிட அவமானம்



மிகுந்த சித்ரவதை வேறு இருக்க முடியாது என்று அவளுக்குத் தெரியாது. பாவம் ஆனால் நம் கண்ணம்மா அந்தச் சித்ரவதையையும் எத்தனை நாள் அனுபவித்தாளோ தெரியவில்லையே. இவள் இத்தனை கொடுமைப்பட நானே காரணமாகிப் போனேனே'' என்று விழி நீர் சொறிந்தார்.

''நீங்கள் காரணம் இல்லை. இத்தனை துன்பத்திற்கும் காரணம் நான்தான். இரு பிள்ளைப் பெற்றவள் பார்க்க முடியாதா? நோய் அது இதென்று ஒன்றை உங்கள் தலையில் கட்டி விட்டேன். பெற்ற மகளையே அன்னியவள் ஆக்கிக் கொண்டேன். தாய்-மகளுக்கு உரிய நெருக்கம் இருந்திருந்தால், அந்தக் கடிதங்களை நம்பியிருப்போமா? கொஞ்சம் நம்பினாலும் ஏண்டி என்று அதட்டிக் கேளாமல் இருந்திருப்பேனா? முட்டாளைப் போல மகளை படுகுழியில் தள்ளி விட்டு இப்போது மருகுகிறேன்'' என்று விம்மினாள், விஜயா.

அப்படி இருந்திருந்தால்? இப்படி இருந்திருந்தால்? என்று மனதை வேதனைப்படுத்திக் கொள்ளத் தொடங்கி விட்டால் அதற்கு முடிவு ஏது? நிவர்த்தி செய்ய முடியாத தவறைச் செய்துவிட்ட இரு உள்ளங்களும் கலங்கிப் புலம்பின. வேறு ஏதும் செய்ய இயலாத காரணத்தினால்.

''மெடிக்கல் ஸயன்ஸ் எவ்வளவு முன்னேறி இருக்கிறது. இந்தக் காய்ச்சலைக் குறைக்கத் தெரியவில்லையா?'' என்று டாக்டரிடம் எரிந்து விழுந்தார் செல்வரத்தினம்.

''அவள் தனி ஆளாக இல்லையே, செல்வம்! கடுமையான மருந்துகளைப் பயன்படுத்துவது தாய், சேய் இருவருக்குமே நல்லதில்லையே'' என்றார் டாக்டர் பொறுமையுடன்.

''பெரிய குழந்தை அது எக்கேடும் கெட்டட்டும். என் மகளைக் குணப்படுத்துங்கள்'' என்றார், மகளைப் பெற்ற தந்தை.

தாய் மனம் வேறுபட்டது. மருமகனைப் பற்றிய நம்பிக்கையோ அல்லது அவனிடம் அவளை மீண்டும் அனுப்பும் எண்ணமோ அவளுக்கு இல்லை. எனவே, இந்த குழந்தையேனும் மகளுக்குத் தங்க வேண்டுமே என்று கவலைப்பட்டாள் விஜயா. ''குழந்தையைக் காப்பாற்ற முயலுங்கள் டாக்டர், ஆனால், இரண்டில் ஒன்றுதான் என்றால் என் மகளை கைவிட்டு விடாதீர்கள்.''

டாக்டர் புன்னகை செய்து ''எந்த உயிரையும் கைவிடுவது டாக்டரின் கடமை அல்ல. செல்வம்தான் தடுமாறுகிறார் என்றால் நீங்களும் கலங்குகிறீர்களே, எல்லோரையும் கடவுள் காப்பார் தைரியமாக இருங்கள்'' என்றார்.

''அப்பா காட்டில் புலி... கடிக்கிறதே'' என்ற முனகினாள் சத்யா. ''கிட்டவே இருங்கள் அப்பா...''

''இருக்கிறேன் அம்மா. உன் பக்கத்திலேயேதானே இருக்கிறேன், புலி வந்தால் சுட்டு விடுகிறேன். நீ தூங்கடா...'' என்றவர் மனைவியின் ''யார்?'' என்ற சொல்லைக் கேட்டு வாயிலைத் திரும்பிப் பார்த்தார்.

அங்கே ராமனுடன் மாதவன் நின்று இருந்தான்.

''அப்பா, புலி'' என்று முனகிய சத்யா, திரும்பினாள்.

## 11

சட்டென மகளின் முகத்துக்கும் வாயிலுக்கும் இடையே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டார் செல்வரத்தினம். ராமனை உறுத்து விழித்து, ''நீர் புத்திசாலி என்று நினைத்தேன், ராமன்'' என்றார் கடுமையான குரலில்.

ராமன் தலைகுனிந்தார். ''சத்யாவைப் பார்த்தாக வேண்டும் என்று நிரம்பப் பிடிவாதமாய்க்...''



''கேட்டதால் அவளிடம் மிச்சம் இருக்கும் அரை உயிரையும் பறித்து விடட்டும் என்று அழைத்து வந்தீரா?'' என்று எரிந்து விழுந்தார் செல்வரத்தினம்.

''என்ன பேச்சு பேசுகிறீர்கள்?'' என்றாள் மனைவி. வந்தவன் யார் என்பதைக் கவனித்துக் கொண்டவள் மகளைத் தன்புறம் திருப்பினாள். ''நீங்கள் வெளியே சென்று பேசி அனுப்பிவிட்டு வாருங்கள்.''

ஆனால், மகள் விட்டால் அல்லவா? கண்ணைத் திறவாத அரை மயக்க நிலையிலும் தந்தையின் கையை இறுகப் பிடித்துக்கொண்டு ''அப்பா, என் பக்கத்திலேயே இருங்கப்பா... காடு வரும்...பாம்பு வரும்...'' என்று முனகினாள்.

கனவு கண்டு அன்று இவள் கதறியது நினைவு வர மாதவன் அடிபட்டாற்போல நிமிர்ந்தான்.

''வராது கண்ணம்மா உன் அருகில் வந்தால் அடித்து விரட்டி விடுவேன்'' என்றார் செல்வரத்தினம். உறுதியுடன் ''உன்னைத் தானடா'' என்பது போல மருமகனை ஒரு பார்வையும் பார்த்தார்.

''வந்ததே... கடித்ததே...புலி.''

''சும்மா இரு சத்யாம்மா'' என்று கதறினாள், தாய். ''பாவி! நன்றாகப் பார்த்துக் கொள். உன் அசுரத் தனங்களின் விளைவைப் பார். பூமாலைப் போன்ற என் மகளைக் குரங்கு போலப் பிய்த்தெறிந்து விட்டாயே.''

ஆனால் மாதவன் அவரது பேச்சைக் கேட்டுக் கொண்டு அங்கே நிற்கவில்லை. அவன் டாக்டரின் அறையை நோக்கிச் சென்று கொண்டு இருந்தான்.

கதவுக்கு வெளியே அவன் மறைந்ததும் செல்வரத்தினம் மகளிடம் திரும்பினார். ''காடு புலி, பாம்பு எல்லாவற்றையும் ஓட்டு

மொத்தமாய் விரட்டி விட்டேன் கண்ணம்மா. இனி வரவே வராது'' என்றார்.

இருமாதங்கள் சென்றபின் ''என்புதோல் போர்த்திய உடம்பு'' என்பதற்கு இணங்க எலும்பும் தோலுமாக வீடு வந்து சேர்ந்தாள் சத்யா.

மெல்லிய கண்ணாடிப் பாத்திரத்தைக் கையாளுவது போல அவளைக் கண்ணுக்குள் வைத்துக் காத்தனர் எல்லோரும்.

'சமூக சேவை' 'சேரி முன்னேற்றம்' எல்லாவற்றையும் ஏறகட்டிவிட்டு வேளை தவறால் டானிக், மருந்து என்று மகளைக் கவனித்தாள், தாய்.

ஆனால், மருந்துகள் என்ன செய்ய முடியும்? நன்றாகி விடவேண்டும் என்ற ஆர்வம் இல்லாததால் சத்யாவின் உடம்பு எதிர்பார்த்த அளவு தேறவில்லை.

''கண்ணம்மா, என்ன வேண்டும்'' எனும் தந்தை முதல் ''சின்னம்மா, என்ன வேண்டும்?'' என்று எடுபிடிச் சிறுவன் வரை அவளை மகிழ்விக்க துடிப்பதை அவள் உணர்வதாகவே தெரியவில்லை.

முடிந்த அளவு தந்தையின் அருகில் இருக்க முயன்றாள். அவரது அருகாமையில் மட்டுமே பாதுகாப்பு கிட்டினாற் போல அவள் முகத்தில் அமைதி இருக்கும்.

''இந்தச் சேலை, அந்த நகை'' என்று அவளை உற்சாகப்படுத்தும் முயற்சிகள் தோற்றன. தந்தை போல் அவள் தனக்குள்ளேயே ஒடுங்குவது விஜயாவுக்கு வேதனையைத் தந்தது.

அன்றும் செல்வரத்தினம் தொழிற்சாலைக்குச் சென்ற பின் தன் அறையில் கட்டிலில் சாய்ந்து கிடந்த சத்யாவின் அருகில் உட்கார்ந்தாள், தாய். மிருதுவாக மகளின் முதுகை வருடியபடி, ''கண்ணம்மா, உனக்கு என்னடா செய்கிறது?'' என்றாள் கனிவுடன்.



''ஒன்றும் இல்லையேம்மா.''

ஒரு கண அமைதிக்குப் பின், ''உனக்கு எது வேண்டுமானாலும் அம்மாவிடம் சொல்லும்மா உனக்கு.. யாரையேனும் பார்க்க வேண்டும் போல் இருக்கிறதா, கண்ணே?'' என்று வினவினாள்.

ஒரு வேளை கணவனைப் பார்க்கும் ஆவல் உண்டாகி அதை வெளியிட்டுச் சொல்ல முடியாமல் மகள் ஏங்குகிறாளோ என்ற எண்ணம் அவளுக்கு.

மிரண்டு போய் விழித்துவிட்டு ''ஊகும்'' என்று அவசரமாகத் தலையசைத்தாள் சத்யா.

மகளின் முக மாறுதலை கவனித்து விட்டு, அவளை வயிற்றுடன் அணைத்துக் கொண்டாள், விஜயா. ''அம்மா முன் மாதிரி இல்லை கண்ணா, உனக்காக எது வேண்டுமானாலும் செய்வேன், தெரியுமா?''

சத்யாவின் மெல்லிய கரங்கள் தாயின் இடையைச் சுற்றின.

அதன்பின் சத்யாவிடம் மாற்றம் தெரிந்தது. எதற்கெடுத்தாலும் வேண்டாம்மா என்பதை விடுத்தாள். மாலை வேளைகளில் கல்லூரியில் இருந்து திரும்பி வந்த சித்ரா சிரிக்கக் கதை அளக்கையில் தானும் சிரிக்கத் தொடங்கினாள். முன்னைய கலீர்ச் சிரிப்பு அல்ல ஆனாலும் மென்சிரிப்பேனும் சிரித்தாளே.

மேலும் இரு மாதங்கள் சென்று சத்யாவின் மசக்கை எல்லாம் தீர்ந்து அவளது ஆரோக்கியம் கிட்டத்தட்ட திரும்பிவிட்டபோது, மீண்டும் மாதவன் வந்தான்.

மருத்துவமனையில் டாக்டர் சபேசன் கூறிய ஆலோசனைப்படி மசக்கைக் காலம் என்று அவர் கூறிய ஐந்து மாதங்களும் அவன் ஒதுங்கியே இருந்தான். பின்னர் செல்வரத்தினத்தின் வீட்டிற்கே வந்தான்.

மாதவன் வந்த சமயத்தில் வீட்டினர் யாருமே வீட்டில் இல்லை. சத்யாவை 'செக்கப்'பிற்காக டாக்டரிடம் விஜயா அழைத்துச் சென்றிருந்தாள். வரும்போது கல்லூரியில் இருந்து சித்ராவை அழைத்து வருவதாக ஏற்பாடு. செல்வரத்தினமும் வீடு வந்து சேரவில்லை.

மாதவன் வந்த தோரணையில் கூர்க்கா அவனைத் தடை செய்யாமல் உள்ளே அனுப்பினான். வராந்தா நாற்காலியில் அமர்ந்திருந்த அவனை ராமன்தான் முதலில் பார்த்தார். பார்த்ததும் என்ன செய்வது என்று விழித்தார். பிறகு ''வாருங்கள்... என்ன சாப்பிடுகிறீர்கள்? காபியா குளிர்பானமா?'' என்று உபசரித்தார். என்ன ஆனாலும் சத்யாவின் கணவன் ஆயிற்றே என்ற எண்ணம் அவருக்கு.

''ஒன்றும் வேண்டாம்'' என்று மறுத்துவிட்டான், அவன் ''சத்யா...'' என்று அவன் தொடங்கியபோது அவர் குறுக்கிட்டு, ''சத்யா வீட்டில் இல்லை. நான் சொல்வதைக் கேட்பதானால்...'' என்றார்.

''நான் சத்யாவுடைய தந்தையைப் பார்க்க வந்தேன்'' என்றான் மாதவன் அமைதியாக.

'வருகிற நேரம்தான்' என்ற ராமன் சொல்லை மெய்ப்பிப்பது போலச் செல்வரத்தினத்தின் கார் உள்ளே வந்தது. காரில் இருந்து மடமடவென்று உள்ளே வந்த அவர், மாதவனைக் கண்டதும் நின்றார். கணத்தில் சினம் மிகுந்த அவர் முகம் சிவந்தது. ராமனைப் பார்த்து ''சத்யாவும் அம்மாவும் வந்தாயிற்றா?'' என்று கேட்டார்.

''இல்லை.''

''சத்யா பார்க்க கண்டவர்களையும் இங்கே ஏன் உட்கார விடுகிறீர்?'' என்று ராமனிடம் எரிந்து விழுந்தார்.

மாதவன் எழுந்தான். ''நான் உங்களிடம் பேச வந்தேன்.''



''உன்னிடம் பேச எனக்கு எதுவும் இல்லை'' என்றார் செல்வரத்தினம் முகத்தில் அடித்தாற்போல.

மாதவன் இமைகளைச் சுருக்கி அவரைப் பார்த்தான். ''நீங்கள் பேசாவிட்டால் நான் சத்யாவிடம் பேசிக் கொள்கிறேன்'' என்றான் நிதானமாக.

''என் ஆபீஸ் அறைக்கு அழைத்து வாரும்'' என்று மீண்டும் எரிந்து விழுந்துவிட்டு, அறையினுள் போனார் அவர்.

ராமன் வெளியேறிய பின் சற்று நேரம் நின்று பார்த்துத் தானாகவே மாமனாரின் எதிரே கிடந்த சோபாவில் அமர்ந்தான் மாதவன்.

''எங்கே வந்தாய்'' என்றார் பெரியவர்.

''இதைப் போலவே மரியாதை இல்லாமல் பேச எனக்கு எவ்வளவு நேரம் ஆகும்?'' என்றான். அவரிடம் பதில் எதிர்பாராமல் தொடர்ந்தான். ''சத்யா எப்படி இருக்கிறாள்?''

''அவளைப் பற்றி பேச உனக்கு என்ன தகுதி இருக்கிறது?'' என்றார் அவர் ஆத்திரத்துடன்.

''உங்களுக்கு உள்ள தகுதியை விடச் சற்று அதிகமாகவே இருக்கிறது'' என்றான் அவன் அழுத்தத்துடன்.

அவரும் எளிதாக விடுகிறவர் அல்லவே, ''முப்பது நாட்களுக்குள் அவரை அரை உயிராக்கிவிட்ட தகுதியா?''

ஒரு கணம் குனிந்த அவன் தலை மீண்டும் நிமிர்ந்தது. ''மகளை உயிரோடு தலை முழுகியவர் எந்த உரிமையைக் கொண்டு இப்போது பேசுகிறார்?''

''என் மகளை சித்ரவதை செய்து விட்டாயே பாவி'', என்று பொருமினார் அவர்.

''கொடுமை செய்ததாகச் சத்யா சொன்னாளா?'' என்றான், அவன் ஒரு விதமான குரலில்.

''அதை வாயால் சொல்ல வேண்டுமா? அரை உயிராய் எலும்புக் கூடு போல வந்தாளே. நாலு மாதம் படாத பாடு பட்டு அவளைக் காலனிடம் இருந்து மீட்டோம். மீண்டும் அவளைக் கொல்லவா வந்தாய்?''

''என் மனைவியைக் காப்பாற்ற எனக்குத் தெரியும்'' என்றான் அவன் சுள்ளென்று.

''மனைவியாம் மனைவி. வயிற்றுப் பிள்ளைக்கு யார் தகப்பன் என்றாயாமே. அதன் பின்னும் மனைவி என்று உரிமை கொண்டாட உனக்கு வெட்கம் இல்லையா? ஒரு மாதம் அவளோடு வாழ்ந்துமா அவள் குணம் தெரியவில்லை?''

''பதினெட்டு ஆண்டு வளர்த்த உங்களால் தெரிந்து கொள்ள முடியாத என்னிடம் கேட்க உங்களுக்கு வெட்கமாயில்லை?'' என்று பதிலடி கொடுத்தான் மாதவன்.

பதில் கூற தகையற்று, ''போடா வெளியே'' என்று கத்தினார் செல்வரத்தினம்.

அவன் கேலியாகச் சிரித்தான். ''மரியாதை மிகுதியாகிறதே மிக்க நன்றி. நானும் இங்கே இருக்க வரவில்லை. என் மனைவியை அழைத்துக்கொண்டு போய் விடுகிறேன்.''

''டேய்...'' என்று பதட்டத்துடன் எழுந்தார் சத்யாவின் தந்தை. ''அவளை உன்னோடு அனுப்ப மாட்டேன். நீ போய்விடு.''

''சத்யாவுக்குப் பதினெட்டு வயது முடிந்து விட்டது. எங்கே இருப்பதும் அவள் விருப்பம்.''

''பாவி! இவ்வளவு பாடுபட்டு இப்போது தானே கொஞ்சம் தெளிந்திருக்கிறாள். அவளை நீ மீண்டும்... நடக்காது. அவள் உன்னோடு வர மாட்டாள். நீ போய்விடு!''



சோபாவில் நன்றாகச் சாய்ந்துகொண்டு ''அதை அவள் வந்து சொல்லட்டும், மிஸ்டர் செல்வரத்தினம்'' என்றான் மாதவன்.

## 12

**கா**ர் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

மாதவன் சட்டென எழுந்து சன்னல் அருகே விரைந்தான்.

காரிலிருந்து முதலில் இறங்கியது சத்யாதான்.

மெலிவு அதிகம் மாறாத போதும் உதடுகளில் லேசான புன்னகை இருந்தது. வயிறு உப்பி நன்றாகத் தெரிந்தது.

ஆவலுடன் இரண்டு எட்டு எடுத்து வைத்தவன் நின்றான். உணர்ச்சிகளை உள்ளடக்கிய முகத்துடன் வாயிலைப் பார்த்தான்.

''இந்த மடையன் ராமன் என்ன செய்கிறான்'' என்று உள்ளூரப் பொருமியபடி செயலற்று நின்றார் செல்வரத்தினம்.

ராமன் மடையன் அல்ல. சத்யாவின் வேதனையைக் கண்டு கூடவே வருந்தியவர். ஆயினும் அடித்தாலும் அணைத்தாலும் மனைவியின் இருப்பிடம் கணவன் வீடு என்ற எண்ணத்தில் ஊறியவர். இங்கே அனைவரும் சத்யாவுக்கு ஒரு கணவன் இருப்பதையே மறந்தாற்போல நடப்பது அவருக்குச் சரியாகப் படவில்லை. ஆனால், முதலாளி எதிர்பார்ப்பது என்ன என்பது புரிந்ததால் வாயிலிலேயே நின்றார். கார் வரக் காணவும் வேகமாக ஓடினார். ஆனால், மகளிடம் ஏதோ பேசியவாறு காரை ஓட்டிய விஜயா அவரைக் கவனிக்கவில்லை.

கணவரது கார் முன்னே நிற்கக் கண்டதும் விஜயா முறுவலுடன், ''உன் அப்பாவிடம் புதுச்சேலையைக் காட்டு சத்யா'' என்று கையை நீட்டிக் கார் கதவைத் திறந்து விட்டாள்.

கையில் சேலைப் பெட்டியுடன் படியேறிய சத்யா, அலுவலக அறையில் மின் விசிறி சுழலவும் அங்கே சென்றாள்.

உதடுகளில் இளம் புன்னகையுடன் ''அப்பா இன்று இந்தச் சேலையை அம்மா... அப்பா.. ஆ...''

இனிமையாகத் தொடங்கிய சத்யாவின் மென்குரல் தடுமாறி இடையிலேயே நின்றது. முகம் வெளுக்க கண்ணில் அச்சத்துடன் தன்னை அறியாமல் பின்னடைந்தாள்.

''சத்யா!'' என்று ஓர் எட்டு எடுத்து வைத்தான் கணவன்.

''அம்மா!'' என்ற கதறலுடன் பின்னே வந்த தாயை இறுகப் பிடித்துக் கொண்டு உடல் நடுங்கினாள் சத்யா.

அதற்கு மேல் அவளிடம் கேட்க ஏதும் இல்லை என்று உணர்ந்து வெளியேறினான், மாதவன்.

குனிந்த தலையுடன் அவன் செல்வதை ஒரு திருப்தியுடன் பார்த்தார் செல்வரத்தினம்.

பின்னர் மகளிடம் நெருங்கி, ''ஏன் பாப்பா, பயப்படுகிறாய்? தைரியமாக இரு'' என்றார் ஆறுதலாக.

அன்று இரவில் சத்யாவுக்கு மீண்டும் காய்ச்சல் உண்டாயிற்று. செல்வரத்தினம் அறையை விட்டு அகலவில்லை. ஆயிரம் நாமங்களை இட்டு மருமகனைச் சபித்தார். கவலையுடன் மகள் அருகிலேயே இருந்தார்.

விடிகாலை நேரத்தில் சத்யா விழித்தாள்.

மகளிடம் அசைவைக் கண்டதும் சாய்வு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார், செல்வரத்தினம். ''பசிக்கிறதா கண்ணம்மா?''

பதில் கூறாமல் விடிவிளக்கின் ஒளியில் தந்தையைக் கூர்ந்து பார்த்தாள், சத்யா. ''என்னடா அம்மா, என்ன வேண்டும்?''



''அப்பா...''

''என்னம்மா?''

''நான்... நான் இங்கேயே இருக்கிறேன், இருக்கலாமா அப்பா?''

மகளின் கையைப் பற்றி, ''ஏண்டா இருக்கக் கூடாது? நன்றாக இருக்கலாம். அப்பாகிட்டே இல்லாமல் நீ வேறு எங்கே இருப்பதாம்? எங்கேயும் உன்னை நான் அனுப்ப மாட்டேன்'' என்றார்.

''நிச்சயமா அப்பா?'' என்றாள் அவள் குழந்தை போல.

''உறுதியாகக் கண்ணா'' என்று உறுதி கூறினார்.

சத்யா அப்படியே அமைதியாகத் தூங்கி விட்டாள்.

சத்யா அறியாதபடி செல்வரத்தினம் சில ஏற்பாடுகளைச் செய்தார். மாதவன் வந்தால் வீட்டினுள் விடக் கூடாது என்று கூர்க்காவிடம் எச்சரிக்கை செய்தார். தன் துணை இல்லாமல் சத்யாவை வெளியே அழைத்துச் செல்லக் கூடாது என்று மனைவியிடம் திட்டம் செய்தார். எந்த விதத்திலும் சத்யா மாதவனைப் பார்க்க நேர்ந்து மீண்டும் ஒரு அதிர்ச்சி அவளுக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார். கடிதம், போன் எல்லா வழியிலுமே.

வயிற்றுப் பிள்ளை வளர வளர சத்யாவின் நெஞ்சிலும் சுமை ஏறியது. உள்ளே மகவு துள்ளும்போது அதைத் தந்தவனின் கொடிய வார்த்தைகள் ''பிள்ளையின் தந்தை நான் இல்லையே'' என்றானே அந்த வார்த்தைகள் நினைவில் தோன்றி அவளை வருத்தின.

திட்டும் வசவும் வாங்கி வளர்ந்த பெண் என்றபோதிலும், இது கொல்லும் சொல், தாங்கித் தாங்கிப் பூப்போல மென்மையாக வளர்க்கப்பட்டிருந்த சத்யா இது தாளமாட்டாமல் துவண்டு போனாள்.

உடல் வேதனையைத் தாங்கிக் கொள்ளலாம். ஏன் அவள் தாங்கவில்லையா? பழக்கமற்ற வேலைகளில் உடல் அணு அணுவாக வலித்த போதும் கைகால் எல்லாம் புண்ணாகி நொந்த போதும், அதைச் சகித்துக் கொண்டு அவள் செய்யவில்லையா?

இரு கைகளையும் விரித்துப் பார்த்தாள். முன்னிருந்த சொரசொரப்பும் காய்ப்புகளும் மாறி தோல் மீண்டும் மிருதுவாகி அழகாக இருந்தது. கைப்புண் ஆறிப்போயிற்று. ஆனால் மனப்புண்?

பரத்தைக்குச் சமானம் காட்டிப் பேசினானே - அது என்றேனும் ஆறக் கூடுமா? இனி ஒரு தரம் அவனைப் பார்த்துப் பேசப் பழக எப்படி முடியும்''

''முடியாது'' என்று நிச்சயமாக நினைத்தாள் சத்யா. வயிற்றினுள் ஏதோ உதைப்பது போல இருந்தது. பிள்ளைதான். தான் தந்தையில்லை என்று அவளுடைய கணவன் மறுத்த பிள்ளை.

அவன் தந்தையில்லாமல் அவளுடைய குழந்தை எப்படி வந்தது! அவன் சொன்ன மாதிரியா? அப்படியா? அப்பப்பா? சத்யாவின் உடல் எல்லாம் எரிந்தது. தாயாவது தந்தையாவது அருகில் இருந்தால் நன்றாக இருக்கும் போலத் தோன்றியது அவளுக்கு. ஆனால் பிடிவாதமாக மனதை அடக்கினாள். பெற்றோர் தனக்காகப் படும் வேதனைகளை அவள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாள்.

முன்பு தான் உடல் நலம் இல்லை; அவர்களின் துன்பம் சத்யாவுக்குப் புரியவில்லை எனலாம். இப்போது என்ன? இனியும் அவர்களை நோகடிப்பதா? கூடாது.

மெல்ல எழுந்து சென்று நூல் நிலையத்தில் இருந்து வாங்கி வந்த ''ராமகிருஷ்ணரின் போதனைகள்'' என்ற புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள். உள்ளூர ஒன்றும் புரியாவிட்டாலும் அவள் மனம் அமைதி பெற்றது.



அமைதி அடைந்தாலும் அவளுக்கு வாழ்வில் ஆர்வம் தோன்றிவிடவில்லை.

ஓர் உயிர் ஈருயிராக மாறுகையில் தாயுடலில் பலவித மாற்றங்கள் ஏற்படுகின்றன. முதலில் உணவு ஏற்பது இல்லை. இதில் மெலிகிற உடல் பின்னர் வயிற்றுப்பிள்ளை துடிக்கத் துடிக்கப் பிள்ளையைக் காணும் ஆசையிலும் மகிழ்ச்சியிலுமாகப் பூரிக்கிறது. என்ன வலித்தாலும் பிள்ளையைப் பெறுகிற அந்த விநாடி சுகத்தில் எல்லாம் மறந்து இன்புறுகிறது.

ஆனால் சத்யாவிடம் ஆர்வம் அடியோடு இல்லை. கடைசியாக கடுமையான வலியெடுத்த பின்னும் பிள்ளை பெறும் சக்தியற்றுப் போனாள். கடைசியாக மயக்கம் கொடுத்துச் சிசுவை வெளியே எடுத்தார்கள். ஸலைனும் ஆக்சிஜனும், இரத்தம் கொடுத்து மூன்று டாக்டர்கள் இரண்டு நாட்கள் போராடியபின், ''அபாயம்'' என்ற நிலையைத் தாண்டி சத்யா ஒரு வழியாகக் கண்ணைத் திறந்தாள்.

அவளுக்கு மகிழ்ச்சி ஊட்ட எண்ணி ''குழந்தையைப் பார்த்தியாம்மா?'' என்ற போது அவளுக்கு ஒன்றும் புரிபடவில்லை. யாருடைய குழந்தை என்று யோசித்தாள்.

ஆனால், குழந்தையைப் பார்த்ததும் யாருடைய குழந்தை என்று தெரிந்து போயிற்று. தன் பிள்ளை இல்லை என்று எவன் சொன்னானோ, அவனுடைய மகவு. அந்த நேரான நாசியும் பிடிவாதத்துடன் அழுத்தும் உதடுகளும் யாருடைய குழந்தை என்பதைப் பறைசாற்றின.

சத்யாவின் விழிகளில் நீர் பொங்கி வழிந்தது. ''உஸ்... அழக்கூடாதம்மா, சளி பிடித்து இருமல் வந்தால், தையல் விட்டுக் கொள்ளும்'' என்ற டாக்டரின் வார்த்தைகள் அவளை எட்டவே இல்லை. அயர்ந்து சோர்ந்து கண்மூடும் வரை விழிநீர் வழிவது நிற்கவில்லை.

அதன் பிறகு அவளிடம் குழந்தையை யாரும் காட்டுவதில்லை. அதைத் தேடும் அளவுக்கு விழிப்பு இல்லை.

''அந்தப் பையனுக்கு ஒரு கடிதம் எழுதிவிடுகிறீர்களா?'' என்று விஜயா கணவரிடம் கேட்டபோது, ''எந்தப் பையனுக்கு?'' என்று எரிந்து விழுந்தார் அவர்.

ஆனால், பேரன் முகத்தைப் பார்க்கையில் தப்பு செய்த உணர்வு வந்தது விஜயாவுக்கு. எனவே ராமனை அழைத்து ''காஞ்சிபுரத்துக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டு விடுங்கள் ராமன். ஆனால் சத்யாவின் அப்பாவுக்குத் தெரிய வேண்டாம்'' என்றாள்.

அன்று மாலையில் சத்யா அயர்ந்து தூங்கும் நேரத்தில் குழந்தை விழித்து அழத் தொடங்கினான். நல்ல பெரிய தொண்டை அவனுக்கு. சத்யாவை எழுப்பி விடக் கூடாதே என்ற பயத்தில் பேரனைத் தூக்கிக் கொண்டு அவசரமாக வெளியேறினாள் விஜயா. வெளியே ஒரு நர்சிடம் சிசுவைக் கொடுத்துவிட்டு வந்து பால் கரைத்து எடுத்துக் கொண்டு சென்று பேரனுக்குப் புகட்டினாள்.

குழந்தை அழுகை அடங்கிக் குடிக்கவும், ''இதற்குள் என்ன பிடிவாதமடா உனக்கு? நல்ல வேளை கண்ணாகிலும் எங்கள் சத்யா போல் அமைந்ததே'' என்று பேரனைக் கொஞ்சினாள்.

குழந்தை உரத்த குரலில் அழத் தொடங்கியபோதே சத்யாவின் தூக்கம் கலைந்து போயிற்று. அரைகுறை விழிப்பில் யாரோ அருகில் நிற்கக் காணவும் கண்களை நன்கு திறந்துப் பார்த்தாள்.

நின்றவன் மாதவன்.

''சத்யா'' என்று குனிந்து அவளுடைய வெளுத்த கரத்தைப் பற்றித் தன் உதடுகளால் ஒற்றி எடுத்தான்.

சத்யாவின் சோர்ந்த விழிகள் உணர்ச்சியற்று அவனை நோக்கின!



## 13

மனைவியின் கையை விடாமல் ஒரு நாற்காலியைக் கட்டிலின் அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான் மாதவன்.

ஒரு சிறு அமைதிக்குப் பின் அவசரமாக, ''முதலில் நான் உன்னிடம் மன்னிப்புப் பெற வேண்டும். சத்யா நீ என்னை மன்னிப்பாயா?'' என்றான் சற்றுக் கெஞ்சுதலாக.

சத்யாவின் பார்வையில் மாற்றம் இல்லை. அவள் பேசவும் இல்லை.

அவன் சற்றுப் பதட்டத்துடன், ''சத்யா அன்று நான் ஒரு மடையனைப் போல் நடந்து கொண்டேன். சத்யா, நான் சொல்வதைக் கவனிக்கிறாய் அல்லவா? உன்னைப் பிரிந்திருந்த இத்தனை மாதங்களில் ஒன்றை நான் தெளிவாகப் புரிந்து கொண்டேன். நீ இன்றி நான் இல்லை சத்யா, உன்னைப் பிரிந்தால் எனக்கு வாழ்வில் ஒன்றுமே இல்லை..''

கண்வரை வராத மெல்லிய புன்னகை ஒன்று சத்யாவின் இதழ்களில் நெளிந்தது. அதைக்கண்ட அவன் கைப்பிடி இறுகியது. குரல் பதறியது. ''சத்யா நான் சொல்வதை நம்புகிறாய் அல்லவா? உன்னைப் பிரிந்து என்னால் வாழ முடியவில்லை. சத்யா, இத்தனை நாளும் நரகத்தில் நான் உழன்றேன்.''

சத்யாவின் உதடுகள் பிரிந்தன. ஏதோ யோசனையோடு 'இந்த வார்த்தையைக் கேட்பதற்காக ஒரு காலத்தில் நான் நெருப்பில் நடக்கவும் சித்தமாக இருந்தேனே, ஆனால்...ஆனால்...இப்போது...' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டாள்.

''இப்போது என்ன சத்யா?'' என்று குரல் நடுங்கக் கேட்டான் மாதவன்.

எதையோ தீர அறிந்து கொள்ளும் முயற்சியில் சத்யாவின் புருவங்கள் சற்றே நெரிந்தன. ஓர் ஆச்சரியத்துடன். ''இப்போது எனக்கு...எனக்கு ஒன்றுமே... எதுவுமே தோன்றவில்லையே, எல்லாம் மரத்துப் போனது போல எதுவோ செத்து விட்டாற்போல...'' என்று சொல்லிக் கொண்டே போனாள்.

''சத்யா ப்ளீஸ்..'' என்று அவள் வாயைப் பொத்தி அவள் பேச்சை நிறுத்தினான் மாதவன். ''உனக்கு என் மேல் எவ்வளவோ கோபம் இருக்கும். ஆனால்...''

''இல்லை'' என்று தலையசைத்தாள் சத்யா. கோபம் இல்லை. எனக்குத் தெரிந்து நான் யார் மேலும் கோபம் கொண்டதே இல்லை, அன்று மட்டும்தான்'' எனுமுன் கண்களில் நீர் பெருகியது.

மாதவன் முகம் கன்றியது. கெஞ்சும் குரலில், ''சத்யா அன்று மடத்தனமாக ஏதேதோ பேசி விட்டேன். ஆனால் எல்லாவற்றுக்குமே அடிப்படையாக ஒரு காரணம் இருக்கிறது. நான்...''

நெஞ்சின் வேதனையில் சத்யாவின் விழிகள் அகன்றன. மிகவும் மெலிந்த குரலில், ''வேசியோடு ஒப்பிட்டுப் பேசியதற்குக் கூடவா?'' என்றாள்.

''சத்யா!'' இருக்கும். இடம் மறந்து கதறி விட்டான் மாதவன். சமாளித்துக் கொண்டு, ''சத்யா அன்று பேசிய வார்த்தைகளுக்காக எத்தனை முறை வேண்டுமானாலும் மன்னிப்புக் கேட்கிறேன். உன் காலில் விழவும் தயார். சத்யா தயவு பண்ணி என்னை வெறுத்து விடாதே'' என்று இறைஞ்சினான்.

''வெறுக்கவில்லை'' என்று மீண்டும் தலையசைத்தாள் சத்யா. ''முன்னே சொன்னேனே... ஏதோ செத்துவிட்டது போல''-

''அப்படிச் சொல்லாதே சத்யா!'' என்று தன் பிடியில் இருந்து அவளது கரத்தில் முகம் புதைத்தான் மாதவன். மனைவியின்



கண்களில் தெரிந்த அமைதியும் அன்னியமும் அவனால் தாங்க முடியவில்லை. ஓர் இனிய சொல்லுக்காக அவன் முகம் நோக்கி நாய்க்குட்டி போலக் காத்துக்கிடந்த சத்யாவை நினைக்கையில் அவன் நெஞ்சு குலுங்கியது. கைக்குள் இருந்த சொர்க்கத்தைக் காலாலே உதைத்து விட்டேனே அது மீண்டும் கிட்டவே கிட்டாதா? எப்படி? அய்யோ? எப்படி? சத்யாவை நிமிர்ந்து பார்த்தான். சலனமற்ற அவளது பார்வையே அவனைப் பொசுக்கியது. அவளது மெல்லிய இதயத்தைச் சுற்றி சுவர் எழுப்பிட்ட பிரமை தோன்றியது. உள்ளே செல்லும் வழி தெரியாமல் அங்கும் இங்கும் அலைந்த மனதோடு கண்களும் சேர்ந்து அலைந்தன. மூழ்குகிறவன் கையில் பட்ட மிதப்பைப் போலக் குழந்தையின் தொட்டில் அவன் கண்ணில் பட்டது இதோ, இதோ இருக்கிறது; இவளையும் என்னையும் இணைக்கும் தொடர். கண்ணில் வெற்றியுடன் சத்யாவின் முகத்தைப் பார்த்தான். ''சத்யா, குழந்தை எங்கே?'' என்றான் ஆவலுடன்.

சத்யாவின் முகம் சொல்லொணாத வேதனைக் காட்டியது. நடுங்கும் குரலில்; ''குழந்தையா? அதைப் பற்றி உங்களுக்கு என்ன? அதன் தந்தை தான் நீங்கள் இல்லையே'' என்றாள் கண்ணீர் பொங்கி வழிய.

''அப்படிச் சொல்லாதே சத்யா..''

அவன் கூவியதைக் கவனியாமல் விம்மலுடன் சத்யா தொடர்ந்தாள். ''அது என் குழந்தை. அது எனக்கு எப்படி வந்ததோ கடவுளுக்குத்தான் தெரியும். ஆனால் நிச்சயமாக நீங்கள் சொன்ன மாதிரியில் என் குழந்தை வரவில்லை? நிச்சயமாக சத்தியமாக கடவுள்... அம்மா அய்யோ அப்பா...'' அவன் பிடியிலிருந்து கைகளை உதறிக் கொண்டு வயிற்றில் வைத்து அழுத்தினாள். ''எரிகிறதே. அம்மா அன்று போலவே எரிகிறதே. அப்பா..அப்பா... வேண்டுமே'' என்று வேதனை தாளமாட்டாமல் கதறினாள்.

''என்று போல?'' என்று மாதவன் கேட்கவில்லை. அந்தக் கொடிய நாளில்-அவன் சொர்க்கத்தை உதைத்து விட்டு நரகத் தீயில் புகுந்த அந்த நாளில்-அவள் எரிகிறதே என்று முனகிய நினைவு இருந்தது. இப்போது சத்யா துடிப்பதைக் கண்டு பயந்து ''என்னம்மா செய்கிறது? நர்சை அழைக்கவா சத்யா'' என்று அவள் கையைத் தொட முயன்றான்.

அவளோ அவனை அடியோடு மறந்து ''அப்பா அப்பா'' என்று கதறினாள்.

மாலையில் செல்வரத்தினம் வருகிற நேரம், அது. நர்சை அழைக்க எண்ணி மாதவன் எழுந்தபோது அவரே உள்ளே வந்தார். மாதவனைப் பார்த்ததும் சினத்துடன், ''ராஸ்கல், உன்னை யார் உள்ளே அனுமதித்தது'' என்று சீறினார். அதற்குள் மகளின் கதறல் கருத்தில்பட மருமகனை மறந்து அவளிடம் ஓடினார். ''என்னடா கண்ணா, என்ன உனக்கு... அம்மா..டாக்டர்'' என்று அருகில் இருந்த மணியை ஓங்கி அழுத்தினார். மகளின் கைகளைப் பற்றி அமைதிப்படுத்த முயன்றார். ஆனால் அவளோ தந்தையையும் அறியாது கதறினாள்.

செய்வது புரியாமல் நின்ற மாதவனைக் கண்டதும், அவருக்கு வெடித்துக் கொண்டு வந்தது. ''கொலைகாரப் பாவி. இன்னமும் நிற்கிறாயே. தேறி வந்த உடம்பைக் கெடுத்து விட்டாயே! அவளைக் கொன்று விடவே வந்தாயாடா?'' என்று வாய்க்கு வந்ததைப் பேசித் திட்டினார்.

மீண்டும் கதவு திறந்தது. உள்ளே வந்த நர்ஸ் ''டாக்டர்'' என்று மீண்டும் வெளியே ஓடினார். வினாடிக்குள் ஒரு டாக்டருடன் திரும்பினார். ''நர்ஸ் ட்ராங்கு வலையர் எடுத்து வா'' என்று டாக்டர் கூற நர்ஸ் பறந்தார். களேபரத்தை அறிந்து பூத்துவாலைச் சுருளுக்குள் சிசுவுடன் விஜயாவும் வந்து சேர்ந்தாள். மருமகனை மூன்றாம் முறையாகக் கண்டு அதிர்ச்சியுற்று நின்றாள். ஆனால் அவன் நிமிர்ந்து யாரையும் பார்க்கவில்லை. கடைசிப் பார்வை போல சத்யாவை ஒரு தரம் பார்த்துவிட்டு முழுத் தோல்வி பெற்றவன் போலச் சோர்வுடன் வெளியேறினான்.



மீண்டும் பிரசவ ஜன்னி, அதிர்ச்சி என்று எல்லோரையும் ஒரு தரம் பயமுறுத்திவிட்டு சத்யா ஒருவாறு மீண்டாள்.

மகள் அபாய நிலையைக் கடந்ததும் விஜயா ராமனை அழைத்து, ''நீங்கள் ஒருதரம் காஞ்சிபுரம் சென்று வரவேண்டும்'' என்றாள்.

''சரியம்மா'' என்றார் ராமன் எதையும் வெளிக்காட்டாமல்.

''வந்து.. ராமன் இது எளிதான வேலையல்ல. அங்கே நீங்கள் அந்தப் பையனைப் பார்த்து பேச வேண்டும்...'' என்றாள் விஜயா ஆயாசத்துடன்.

''என்ன பேச வேண்டும், அம்மா?''

ஒரு நெடுமூச்சுடன் ''சத்யா என்ற பெண்ணை அடியோடு மறந்து விடுமாறு'' என்று விஜயா முடிக்கு முன் ''அம்மா'' என்று அலறினார் ராமன். ''கணவன் மனைவி என்கிற பந்தம் புனிதமானது அம்மா. ஆயிரம் காலம் தழைத்து வளர வேண்டியது. அதைத் தாயாகிய நீங்களே அழிப்பதா?'' தன் நிலைமை மறந்து ராமன் பேசினார்.

ஒரு கணம் விஜயாவின் உதடுகள் துடித்தன. ''ஆயிரம் தடவை யோசித்துப் பார்த்தேன், ராமன். குழந்தை முகம் கண்டு விட்டால் எல்லாம் சரியாகிவிடும். அந்தப் பையனுக்கும் ஏதேனும் தொழில் வைத்துக் கொடுத்து வளப்படுத்தி விடலாம் என்றுதான் நானும் நினைத்தேன். ஆனால் சுவரை வைத்தல்லவா சித்திரம் எழுத வேண்டும்? என் மகள் உயிரோடு இருந்தால் அல்லவா வளமாக வாழ முடியும்? இன்னொருதரம் அந்தப் பையனைப் பார்க்க நேர்ந்தால் அவள் உடம்பில் உயிர் தங்காது ராமன். நான் பெற்றவள் அல்லவா? என் குழந்தை வாழ்க்கையை இழந்தாலும் உயிரோடாவது இருக்கட்டும் ராமன். இவரானாலும் அந்தப் பையன் இங்கே வந்தால் கையை முறிப்பேன். காலை முறிப்பேன்

என்கிறார். எங்கோ அவனும் ஆயுசோடு இருக்கட்டும். இங்கே என் செல்வமும் உயிரோடு இருக்கட்டும்'' என்று கண்ணீர் விட்டாள்.

ராமனும் கலங்கிப் போனார். விஜயாவின் வார்த்தைகளில் உள்ள உண்மை அவருக்கும் புரிந்தது. குழந்தை பிறந்து ஓரளவு உடல் தேறிய பின்னும் மாதவன் வரவைச் சத்யாவால் தாங்க முடியவில்லையே கண்மணி, பொன்மணி என்று என் எனுமுன் எண்ணெயாய் நின்று பிள்ளைகளின் மனதை வலுவற்றதாக வளர்க்கும் பெற்றோரை மனதார ஒரு தரம் சபித்தார் ராமன். ஆனால் அப்படியும் சொல்வதற்கில்லையே; சத்யாவோடு பிறந்தவள் தான் சித்ரா. ஆனால் அவள் இப்படி ஒடிந்து உடைந்து போகக் கூடியவள் அல்லவே. எல்லாம் தலை விதி என்று பாரத்தை விதியின் தலை மேல் போட்டு விட்டு ''என்னம்மா செய்ய வேண்டும்?'' என்றார் விஜயாவிடம்.

விஜயா அவரிடம் பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்தாள். ''இதை அந்தப் பையனிடம் கொடும். மேலே கேட்டாலும் கொடுத்து விடலாம். இனி சத்யாவின் வாழ்வில் குறுக்கிடுவது இல்லை என்ற உறுதிமொழியை மட்டும் எப்படியும் பெற்று வாரும்'' என்றாள்.

காஞ்சிபுரம் சென்ற ராமன் சுவரில் அடிபட்ட பந்து போல உடனே திரும்பி வந்தார். பத்தாயிரம் ரூபாயையும் விஜயாவிடம் நீட்டினார். ''அவர் அங்கே வீட்டைக் காலி செய்து விட்டார். அலுவலகம் சென்று கேட்டால், வேலையை ராஜினாமா செய்து விட்டு எங்கோ போய் விட்டதாக சொல்கிறார்கள்? யாருக்குமே அவரது இருப்பிடம் தெரியவில்லை'' என்றார்.

'ஈசுவரா' என்று முனகினாள் விஜயா. ''ராமன் இந்தப் பணத்தைத் திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு அனுப்பி விடுங்கள். என் மகளை அந்தக் குமரக் கடவுள் தான் காத்துத் தர வேண்டும்'' என்றாள்.



## 14

**கா**லனின் பிடியில் இருந்து ஒருவழியாகச் சத்யா மீண்டு விட்டதாக டாக்டர்கள் சொன்னார்கள். ஆனால், அவளுள் ஒன்று செத்து விட்டதை முதலில் யாரும் கண்டு கொள்ளவில்லை.

அதை முதலில் உணர்ந்தவள் சித்ராதான். தன்னளவில் உறுதி செய்து கொண்டவள் பெற்றோரிடம் கூறினாள். அக்கா மிகவும் வித்தியாசமாக இருப்பதாகச் சொன்னாள்.

''என்ன என்ன வித்தியாசங்கள் உன் எக்ஸ்ரே கண்ணுக்குப் புலப்பட்டன?'' என்று கேலி செய்தார் செல்வரத்தினம்.

''விளையாடாதீர்கள் அப்பா. அக்கா முன்னைப் போல இல்லை. சிரிப்பில்லை! பேச்சில்லை; நடையில் பழைய பரபரப்பு இல்லை. அழுகைக்கூட இல்லை.''

அவள் பலவீனமாக இருப்பதை மறந்து விட்டாயே. ''சின்னக்குட்டி'' என்று பேரனின் முகத்தருகே சொடக்குப் போட்டு விளையாடினார், அவர்.

''என்னப்பா நீங்கள் பலவீனமாக இருந்தால் அடிப்படைக் குணங்கள் மாறிவிடுமா? தெருவில் போகிற குழந்தை அழுதால் கூடத் தாங்க மாட்டாளே-அன்று இந்தக் குட்டிப் பையன் அழுகிறான்? பேசாமல் இருக்கிறாள். இடி என்றால் நடுங்குவாளே அன்று இடி மின்னலுடன் மழை பெய்தபோது வெறித்துப் பார்த்துக் கொண்டு சாரலில் நிற்கிறாள். அன்று ஒரு ஜோக் சொன்னேன் - சிரிக்கவே தெரியாதவள் போல் ''அப்படியா'' என்கிறாள்'' பொரிந்து கொட்டினாள் சித்ரா.

''உன் ஜோக்கின் லட்சணம் அப்படி இருந்திருக்கும்'' என்று ஜோக் அடித்தாள். தாய்.

''போங்கம்மா, நீங்க கூட என்ன இப்படி? அப்பா கவனித்துப் பாருங்கள். நீங்கள் அலுவலகத்திலிருந்து வந்து அரை மணி நேரம் இருக்குமா? நாம் மூவரும் இங்கே இருக்கிறோம். அக்கா வந்தாளா? பழைய சத்யா இப்படியா தோட்டத்தில் அமர்ந்து வானத்தை வெறித்துக் கொண்டு இருப்பாள்? இப்போதுகூட நான் அவளை அழைத்து வரச் சொல்லி முருகனை அனுப்பிவிட்டுத்தான் வந்தேன். இவ்வளவு நேரம் ஆகியும் வரவில்லை... அதோ மெல்ல வருகிறாள். நீங்களே பாருங்கள்.''

குனிந்த தலையுடன் மெல்ல அறையினுள் வந்தாள் சத்யா. ''என்ன?'' என்பது போலச் சித்ராவைப் பார்த்துக் கொண்டு பேசாது நின்றாள்.

''சத்யா கண்ணா'' என்று அன்போடு மகளை அழைத்தார், செல்வரத்தினம். ''உன் மகன் சிரிப்பதைப் பார்த்தாயா? உன் அம்மாவைப் பாட்டிக் கிழவி ஆக்கி விட்டோம் என்று அவனுக்கு படுகுஷி'' என்றார் கேலி செய்வது போல.

''உன் அப்பாவே தாத்தாக் கிழவர் ஆகும் போது நான் பாட்டிக் கிழவி ஆனால் என்ன சத்யா?'' என்று கணவர் பேச்சோடு இணைந்து பேசிச் சிரித்தாள் விஜயா.

சத்யாவின் இதழ்கள் மட்டும் லேசாக நீண்டு பின் பழைய நிலைக்கே திரும்பின. அதன்பின் தன் போக்கில் திரும்பிச் சென்று விட்டாள்.

''இப்போது என்ன சொல்லுகிறீர்கள், அப்பா? இம் எனுமுன் எப்படிச் சிரிக்கிறவள், இப்போது ஒரு புன்னகை கூடச் சரியாக வரவில்லையே'' என்றாள், சித்ரா பதட்டத்துடன்.

''அப்பா, இது பற்றி எங்கள் ஸைக்காலஜி வகுப்பில் சொல்லித் தந்திருக்கிறார்கள். மென்மையான சுபாவம் உள்ளவர்களுக்கு துன்பத்தைத் தாங்கும் திறன் கிடையாது. துன்பப்பட நேர்ந்தால் சில சமயங்களில் உள் மனது அந்த உணர்ச்சிகளை உணர மறுத்துவிடும்;



அந்த நிலை வளர வளர எதையும் உணர ஒட்டாமல் எல்லாம் மரத்துப் போய் உணவு பழக்கங்கள் கூட மறந்து நடைப்பிணம் போல ஆகி விடுவார்கள் என்று...''

''உளராதே'' அதட்டினாள் தாய்.

''மெய்தான் அம்மா. உதாரணம் கூடச் சொன்னார் லெக்சரர். தந்தை விபத்துக்கு ஆளாகிவிட்டாராம். அந்தச் செய்தி கேட்டு தாய் வருந்துவதைக் கண்டு சகிக்க முடியாது கதறிய ஒரு சிறுவனுக்குக் கண் பார்வையே போய் விட்டதாம். பார்வை நரம்புகளை மரத்துப் போகச் செய்து விட்டதாம் உள் மனது. இதுபோல் எல்லாமே ஆகி விடுவது இயல்பு என்றார். இதைக் கேட்டதில் இருந்து எனக்கு ஒரே நடுக்கமாக இருக்கிறது அம்மா.''

''முதலில் ஒரு மனோ தத்துவ நிபுணரைப் பார்க்க வேண்டும்.''

''அவளுக்கு பைத்தியம் என்கிற பட்டம் வேறு வந்து சேரும். சத்யாவை நான் மாற்றிக் காட்டுகிறேன்'' என்று மூத்த மகளிடம் சென்றார் செல்வரத்தினம்.

தோட்டத்தில் கல் பெஞ்சில் அமர்ந்து குளத்தை வெறித்துக் கொண்டு இருந்தாள் சத்யா. அருகில் தந்தை அமரவும் ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் பழைய நிலைக்கே திரும்பினாள்.

''சும்மாவே இருப்பது போரடிக்கிறதா, கண்ணம்மா?'' என்று மகளின் கூந்தலை வருடினார் தந்தை.

வெறுமனே தலையசைத்தாள் மகள்.

''அப்பா வந்திருக்கிறேனே, சத்யாம்மா. காபி, குடித்தேனா என்று கேட்டாயா?''

மீண்டும் தலையசைப்பு.

''கேட்க வேண்டாமா கண்ணம்மா?''

விளங்காதது போல விழித்துவிட்டு ''சரி'' என்றாள் சத்யா.

தாளமாட்டாமல் தந்தை எழுந்து விட்டார். உள்ளே வருமுன் எதிர்கொண்டு பலகாரம் எடுத்து வைத்துப் பதமாகக் காபி ஆற்றிக் கொடுப்பாளே. அதற்குள் புதிதாக மலர்ந்த மூன்று வகை ரோஜாப்பூவில் இருந்து குருவிக் குஞ்சு பறந்தது வரை அத்தனையும் அளப்பாளே. அவளை இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டானே... பாவி மட ராஸ்கல் தடிப்பயல்...அவன்...

சத்யாவைப் பழைய நிலைக்கு மீட்டுவிட வேண்டும் என்று வேகம் பிறந்தது. மீண்டும் திரும்பி வந்து ''இன்று சினிமாவுக்குப் போகலாமா, சத்யா கண்ணா?'' என்று வினவினார்.

சினிமாவும் நாடகமும் நாட்டியமும் மகளை மாற்றிவிடும் என்று தினந்தோறும் அழைத்துப் போனார். நகையும் துணியும் வாங்கிக் கொடுத்தார்.

கடைசியில் தோல்வியுடன் சின்ன மகளிடம் வந்து நின்றார். ''சத்யாவிடம் மாறுதலையே காணவில்லையே சின்னக் கண்ணா! இனி என்னடா செய்யலாம்?'' என்று என்னவோ சின்னவள் சகலமும் அறிந்தவள் போல அவளிடம் கேட்டார், தந்தை. ''உன் சைக்காலஜி வகுப்பில் இதற்கு என்ன சொல்லித் தந்தார்கள்?''

தந்தையை இரக்கத்துடன் பார்த்தாள் சித்ரா. ''அவள் மூளையைத் தூண்டி விடவேண்டும். அப்பா கட்டாயப்படுத்தி ஏதாவது செய்ய வேண்டும். ஏதாவது வேறுபாடாக... அம்மா. நீங்கள் உங்கள் சமூக சேவையைத் தொடருங்களேன். சத்யாவையும் உடன் அழைத்துப் போங்கள்.''

''உளறுகிறாயே, சித்ராம்மா, அங்கே பாதிப் பேர் வம்பிகள்தானே. அவர்கள் வம்புப் பேச்சுக்குச் சத்யாவை இலக்காக்குவதா?''

''தப்புதான்... ஆகா, அப்பா, அக்காவை எங்கேனும் வேலைக்கு அனுப்பினால் என்ன?''



''இப்போது உன் மூளையில்தான் கோளாறு போலத் தெரிகிறது'' என்று கோபமும் பரிகாசமுமாகச் சொன்னார், பெற்றவர். ''அவள் வேலைக்குப் போய் சம்பாதிப்பதாக்கும்.''

''சம்பாதனைக்காக அவள் சொல்லவில்லை'' என்றாள் தாய்.

''அதுவும் முக்கியம்தான்; அம்மா.''

''என்னடி உளறல்?'' இது தாய்.

''நான் அவளைப் பாதுகாப்பேன்'' இது தந்தை.

''சில விஷயங்களைப் பேசித்தான் ஆகவேண்டும் அப்பா, நீங்களோ, அம்மாவோ என்றும் சாஸ்வதமாக வாழ முடியுமா?''

''நான் விட்டுப் போகும் சொத்து உங்கள் இருவருக்கும் இரண்டு தலைமுறைக்குப் போதும்.''

''அதையேனும் பாதுகாக்கத் தெரிய வேண்டும் அல்லவா? யாரேனும் மோசம் செய்து விட்டால்?''

''சொத்தை விற்க முடியாமல் ஏற்பாடு செய்வேன். மாதா மாதம் வருமானத்தை மட்டும்..''

தலையில் லேசாக போட்டுக் கொண்டாள், சித்ரா ''அப்பா, அப்பா, அந்த வருமானத்தை மாதா மாதம் வாங்கி உண்ணவானும் தெரிய வேண்டும் அல்லவா? அவள் எப்படிப்பட்ட பயங்கர நிலையை நோக்கிப் போய்க் கொண்டு இருக்கிறாள் என்று உங்களுக்குத் தெரியவில்லையே'' என்றாள் வருத்தத்துடன்.

''முதலில் நம் டாக்டரிடம் ஆலோசனை கேட்போம்'' என்றாள் விஜயா.

டாக்டரும் சித்ரா கூறியதையே ஆமோதித்தார். ''தன்னைப்பற்றிய நினைவில் மறுகிப் போயிருக்கிறாள். முழுக்க

முழுக்க வேறு சூழ்நிலையில் வேலை செய்வது அவள் மன நிலைக்கு மிகவும் நன்மை தரும்'' என்றார். ''அல்லது, அவள் கணவன் திருந்தி வந்து நல்லபடியாக வைத்துக் கொண்டாலும் சரியாகி விடும்.''

மேலே பேசாமல் திரும்பிவிட்டார், செல்வரத்தினம் ''என்ன ஆனாலும் அந்தப் பாவி முகத்தில் என் பெண் விழிக்கக் கூடாது'' என்றார், இளைய மகளிடம்.

''ஏன் சித்ராம்மா. நம் அலுவலகத்திலேயே...''

''அடிப்படையையே கெடுக்காதீர்கள் அப்பா. பெரிய மேனேஜரிலிருந்து வாட்ச்மேன் வரை எல்லோரும் அவளுக்குச் சலாம் போடுவார்கள், அந்த சூழலில் அவள் என்ன வேலையை பொறுப்பாகச் செய்வாள்? முழுக்க முழுக்க வேறு சூழ்நிலை வேண்டும் என்று டாக்டர் சொல்லவில்லையா?'' என்று எடுத்துச் சொன்னாள்.

''பாரீன் டிரேடர்ஸ்'' என்று ஒரு பெரிய கம்பெனி ஏற்றுமதி இறக்குமதி பரவலான வியாபாரம் போன்றவைகளில் ஈடுபட்டது. அதன் உரிமையாளரான பரசுராம், செல்வரத்தினத்துடைய நண்பர். அவரது சென்னை அலுவலகத்தில் நிர்வாகியின் ஒரு ஸ்டேனோவாக சத்யா வேலையில் சேர்ந்தாள். நிர்வாகி வயதானவர். அவருக்கு மட்டும் சத்யாவின் விஷயம் தெரியும்.

''வேலை பார்க்கிறாயா?'' என்று கேட்டபோது சத்யா மறுக்கவில்லை.

அலுவலகத்தில் கொடுத்த வேலையைக் குறையின்றி நிதானமாகச் செய்து முடித்தாள். முதல் நாள் வேலை முடிந்து வருகையில் சித்ரா தடுத்தும் கேளாமல் செல்வரத்தினம் காரில் தன் மகளை அழைத்து வந்தார். மகளின் விரல்களை மெல்ல வருடி, ''வலிக்கிறதா அம்மா?'' என்று குரல் கம்மினார்.



''இல்லையப்பா, முன்னே அடித்ததுதானே'' என்றாள் சத்யா. சின்னதாக என்றாலும் அவள் நாலு வார்த்தை சேர்த்துப் பேசியது அவருக்கு நிம்மதியாக இருந்தது. ஆயினும் எதற்காக மகள் ''டைப்'' பண்ணப் படித்தாள். அது எப்படி இப்போது பயன்படுகிறது என்று நினைக்கும்போது வேதனைப்பட்டார்.

செய்வன திருந்தச் செய்ய வேண்டும் என்று தானே வேலைக்குச் சென்று வரவும் சத்யாவுக்குப் பழக்கம் செய்வித்தாள், சித்ரா. முதலில் பஸ்சில் அக்காவுடன் கூடச் சென்று வந்தாள். எதிர்பார்த்தது போலவே புதிய பழக்கங்கள், முகங்கள், சூழ்நிலை, பொறுப்பு இவற்றால் சத்யா பெருமளவு மாறினாள். மாதவனைப் பற்றிய அனைத்துமே மறுக்கப்பட்டதாகிப் பின் மறைக்கப்பட்டதாகவும் மாறின அங்கே.

மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தன.

தன் பயிற்சியை முடித்துக் கொண்டு தாய் நாடு திரும்பினான், மதன்.

சத்யாவின் மைந்தன் அவனைப் பார்த்து ''இது என் அப்பாவா?'' என வினவினான்.

## 15

வேலை பார்க்கத் தொடங்கியதில் இருந்தே சத்யா மாறினாள்.

முன்பு போல மணியோசை போலச் சிரிக்காவிடினும் பார்த்தால் புன்னகையும் பேச்சில் சிறு சிரிப்புகளும் இழையோடின.

தேடி ஓடித் தூக்கிக் கொஞ்சாவிட்டாலும் மகன் வந்தால் மடியில் வைத்துக் கொண்டாள்.

ஆனால், இந்த மாற்றத்தில் மற்ற மூவரும் திருப்தி அடைந்து விடவில்லை. மீண்டும் டாக்டரை அணுகினர். ''அவளது சிரிப்பு

இன்னும் பழைய நிலையை எட்டவில்லையே டாக்டர்'' என்று குறைப்பட்டாள் சித்ரா.

டாக்டர் முறுவலித்தார். ''ஓர் ஆண்டு காலம் வளர்த்ததை ஒரே நாளில் குணமாக்கிவிட முடியுமா? சின்னப் பெண்தானே? பொறுத்துப் பார்ப்போம்'' என்றார்.

ஆறு மாதம் கடந்த பின்பும் பழைய சத்யா மீளாததால் மீண்டும் டாக்டரை சந்தித்தார்கள்.

''இரண்டு வழிகளில் பழைய சத்யாவாக மாற்ற முயற்சிக்கலாம் செல்வம், கவனி-முயற்சிக்கலாம் என்று தான் சொன்னேன். ஏனெனில் மனம் சம்பந்தப்பட்ட எதிலும் எதையுமே உறுதியாகச் சொல்ல முடியாது.''

''என்ன வழிகள் டாக்டர்?'' என்று அவசரப்பட்டாள் சித்ரா.

''ஒன்று-அவளை அவளுடைய கணவனோடு வாழச் செய்வது.''

''அடுத்ததைச் சொல்லப்பா'' என்று எரிச்சலோடு கூறினார் செல்வரத்தினம்.

''அடுத்தது, காலம் அவளை மாற்றும்'' என்றார் டாக்டர் அமைதியாக.

''பொறுத்திருந்தே பார்க்கலாம்'' என்று முடித்துவிட்டார் செல்வரத்தினம்.

''வீட்டின் கலகலப்புக்கு வற்றாத ஜீவநதியாகக் குழந்தை இருந்தான். தெய்வப் பெயராக வைக்க வேண்டும் என்று குமரக் கடவுளின் பெயரில் அவனைக் குமரன் என்று அழைத்தனர். பெற்றோரின் பேரன்பு இல்லாத குறை தெரியாமலே அவன் சிறப்பாக வளர்ந்தான். ஓடியாடினான். மூன்று ஆண்டு நிறைந்து நர்சரி பள்ளிக்குச் சென்றான்.



''பாபா பிளாக்ஷீப் ஹாவ்யூ எனி உல்?'' என்று அவன் பாடி நடித்துக் காட்டியபோது விஜயாவுக்கும் செல்வரத்தினத்திற்கும் இந்த உலகமே மறந்து போயிற்று. சித்ராவிடம் ''சித்தி-இப்பி ஆடு'' என்று அவளையும் ஆட வைத்தான். சத்யாகூடச் சிரித்தாள். மாதவனைப் பற்றிய நினைவு கிட்டத்தட்ட எல்லோருக்குமே மறந்து போயிற்று.

சத்யா ஒழுங்காக வேலைக்குச் சென்று திரும்பினாள்.

சித்ரா கல்லூரிப் படிப்பை முடித்தாள்.

சித்ராவைப் பெண் கேட்டு வந்த யாரையும் செல்வரத்தினத்திற்கு பிடிக்கவே இல்லை. ஒரு மகளைத் திருமணம் செய்து கொடுத்துப் பட்ட பாடு போதும் என்று இருந்தது அவருக்கு.

இந்த நிலையில் தாய்நாடு திரும்புவதாக மதனிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது.

அந்தக் கடிதத்தைத் தொடர்ந்து மதனுடைய தந்தை சிவசுந்தரமும் அங்கே வந்தார்.

அவரைக் கண்டதும் செல்வரத்தினத்துக்கு ஒரே ஆச்சரியம். தங்கையின் கணவர் உறையூரை விட்டு வெளியே அசைகிறவர் அல்ல. அதிலும் மனைவி இறந்தபின் வயலும் தோப்புமே அவரது மூச்சு. ஆகையால் வியப்புடன் ''வாருங்கள். அத்தான், ஏது அதிசய வரவு?'' என்று வரவேற்றார்.

''மதன் வருகிறான் அல்லவா? பயல் தனியாக வருகிறானா... ஜோடியோடு வருகிறானா என்று பார்க்க வேண்டுமே'' என்று சிரித்தார் சிவசுந்தரம்.

''அத்தான் அப்படிப்பட்டவர் இல்லை'' என்று சிறுசினத்துடன் மறுத்தாள் சித்ரா.

''ஓகோ சின்னவளா? பெரிய ஆளாகிவிட்டாளே! சித்ராம்மா. உன் அத்தான் அப்படி இல்லாமல் இருப்பது நல்லதுதான். இருந்தாலும் சகித்துத்தானே ஆகவேண்டும் அவள் நாலு பிள்ளைக்காரியாக இருந்தால்கூட ''வாம்மா மருமகளே'' என்று ஒப்பித்தானே ஆகவேண்டும். அட சத்யாவின் மகனா! சித்தி மாதிரி துறுதுறு. வாடா கண்ணா'' என்று குட்டிக் கரணம் போட்டுக் கொண்டே உள்ளே வந்த குமரன் கையில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை வைத்தார்.

''டூப்பீஸ், அம்மா டூப்பீஸ்'' என்று குதித்துக் கொண்டு விஜயாவிடம் ஓடிச் சென்று ரூபாய் நோட்டுக்களை நீட்டினான், சிறுவன். அவனுக்கு 'ர' வருவதில்லை. எல்லாம் 'ட' ஆகிவிடும்.

''மதனுக்கு மூன்று ஆண்டுதானே அண்ணா பயிற்சி இப்போது நாலு ஆண்டுக்கு மேலேயே ஆகிவிட்டதே'' என்று சிற்றுண்டித் தட்டை நீட்டினாள் விஜயா.

''படிப்பு மூன்று ஆண்டுதான் அம்மா. இவன் உலகச் சுற்றுப் பயணம் போக ஆசை என்று கேட்டான். சரிதான் தினமுமா அனுப்பப் போகிறோம்... போய் வா என்றேன். இப்போது வருவதாக எழுதியிருந்தான். பார்த்துக் கொஞ்சம் நாளான மாதிரி இருந்ததால் வந்தேன்'' என்றார் அவர்.

''நாலு ஆண்டு! ஏதோ நாலு மாதம் மாதிரிச் சாதாரணமாக மாமா சொல்வதைப் பாருங்கள் அம்மா'' என்று தாயிடம் குறை கூறினாள் சித்ரா.

''உன் மாமாவிடம் குணம் அப்படித்தானே சித்ராம்மா. இப்போது அவர் இங்கே வந்ததுகூட எனக்கு ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது'' என்றாள் தாய்.

''ஜோடி வருவார் என்று ஜோக் வேறு'' என்று எரிச்சலுடன் முணுமுணுத்தாள் சித்ரா.



''அவருக்குப் பயிர்தான் உயிர். பெற்ற பிள்ளைக்கூட அடுத்தபடிதான்'' என்று உள்ளே வந்தார். செல்வரத்தினம்.

''அண்ணா எங்கே'' என்று வினவினாள்,

''தோட்டக்காரனுடன் அளவளாவத் தொடங்கி விட்டார். போரடித்துப் போய்த் திரும்பி விட்டேன். ஒன்று சொல்கிறேன் விஜி. மதன் எவளோடாவது வந்தால் கூட அத்தான் திருப்திதான் கொள்வார். வயலை மறந்து அவனது திருமணம் பற்றி யோசிக்க வேண்டாமே என்று நிம்மதி அடைவார்,'' என்றார் அவர்.

''ஆனால் அத்தான் அப்படிப்பட்டவர் அல்ல'' என்றாள் சித்ரா; அழுத்தம் திருத்தமாக.

''நிச்சயமாக'' என்றார் தந்தை. ''அவன் வந்த பின் அவனுக்குத் திருமணம் எல்லாம் நாம்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். ''விஜி...விஜி எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இங்கே சித்ராவுக்கு வருகிற பையன்கள் எல்லாம் எனக்கும் ஒன்றும் பிடிக்கவில்லை. இவளும்தான் ''அத்தான் அத்தான்'' என்கிறாள். அவன் வந்ததும் இவர்கள் இருவருக்குமே ஒரு முடிச்சைப் போட்டு விட்டால் என்ன?'' என்றார்.

''முருகன் அருளில் நடக்கட்டும்'' என்றாள் தாய்.

''இந்தத் தடவை தெளிவாகக் கேட்டுவிட வேண்டும். சித்ரா கண்ணா நீ என்ன சொல்கிறாய்? அத்தானை மணக்கச் சம்மதமா?''

முகம் வெட்கத்தில் சிவந்த போதிலும், அமர்த்தலாக ''அதெல்லாம் வினாடியில் சொல்ல முடியாது அப்பா, அத்தானின் மீசை எனக்குப் பிடிக்கிறதா என்று பார்த்த பிறகுதான் சொல்ல முடியும்'' என்றவள் அதற்குமேல் சிரிப்பை அடக்கமுடியாமல் ஓடிவிட்டாள்.

மறுநாள் சிங்கப்பூர் விமானம் காலை பதினொன்றரைக்கு வந்தது. சிவசுந்தரத்துக்கு வசதியாகப் போயிற்று. மகனை விமான நிலையத்தில் வரவேற்றுச் சற்று நேரம் அளவளாவி விட்டு உறையூருக்குக் கிளம்பி விட்டார்.

''அப்பா இவ்வளவு தூரம் வருவார் என்று நான் எதிர் பார்க்கவே இல்லை மாமா. மாமா, உங்களுக்குக் காதோரம் முடி நரைத்து விட்டதே. ஏன்? உங்களுக்கு நாற்பத்தாறு தானே அத்தை. உங்களுக்கும் சித்ரா, சத்யாவுக்கும் சிங்கப்பூர் ராமுடைய மனைவி சில சேலைகள் அனுப்பினார்கள். சித்ரா வாயாடி. வாயையே திறக்கக் காணோமே ஏன்?'' என்று வளவளவென்று அறுத்தான் மதன்.

வீடு வந்து உள்ளே சென்றபின் ''சத்யா எப்போது வந்தாள் மாமா? அந்த வீட்டில் அவளைக் காணப் பொறுக்க முடியவில்லை. மாமா, என் கடிதம் பார்த்து விட்டுத்தான் இங்கே கூட்டி வந்து விட்டீர்களா?'' என்றான்.

சத்யா இங்கு இருப்பதும் வேலை பார்ப்பதும் கடித மூலம் மதன் அறிந்த விவரங்கள். மற்றதை எல்லாம் இப்போது நேரில் சொன்னார். கேட்டு மிகவும் வருந்தினான்.

மாலையில் பள்ளி முடிந்து வந்த குமரன் மதனை வியப்புடன் பார்த்தான். ''ஹேய் குட்டிப்பையன் குமரன் இவன் தானா?'' என்று அவனைத் தூக்கிப் போட்டுப் பிடித்தான்.

கிளுகிளுத்துச் சிரித்துவிட்டு அவனிடம் இருந்து இறங்கி விஜயாவின் அருகில் சென்று நின்றான் குமரன். ''நான் குட்டிப் பையன் குமடன் இல்லை. செந்தில் குமடன்'' என்றான் கம்பீரமாக.

பிறகு விஜயாவின் கையைப்பற்றி ''அம்மா இது யாரு அப்பாவா!'' என்று விழிகளை அகல விரித்து வினவினான்.

எல்லோரும் அதிர்ந்து போய் நின்றனர்.



பையனின் பார்வை அலுவலகத்தில் இருந்து திரும்பிய சத்யாவிடம் பாய்ந்தன.

''நான் சத்யாம்மாகிட்டக் கேட்கப் போடேன்'' என்று தாயிடம் தாவி ஓடினான்.

## 16

தன்னிடம் ஓடிவந்த குமரனிடம் கைப்பையைக் கொடுத்தாள், சத்யா குனிந்து அவனைத் தூக்கிக் கொண்டாள்.

''சத்யாம்மா இன்னிக்கு ஸ்கூல்லேந்து வந்தேனா...'' என்று தொடங்கினான் குழந்தை.

குமரன் மேலே தொடருமுன், ''சீக்கிரமா வந்தாயா அக்கா. மதன் அத்தான் வந்துவிட்டார். குமரா வாடா, அம்மா காபி குடிக்கட்டும். உனக்கு நான் மில்க் சாக்லேட் தருகிறேன் வா'' என்று கைகளை நீட்டினாள் அவசரமாக வந்த சித்ரா.

குமரன் யோசனையுடன் 'எக்லேர்ஸ்' என்றான்.

''அதுவும்தான், வா,'' என்று அவனைத் தூக்கிக் கொண்டு சகோதரியை உள்ளே அனுப்பினாள். தோட்டக்காரனிடம் சிறுவனை விட்டு, ''இங்கேயே வைத்து அவனுக்கு விளையாட்டுக் காட்டு, சின்னா, நான் சாக்லேட்டு எடுத்து வருகிறேன்,'' என்று உள்ளே திரும்பி விரைந்தாள்.

அதற்குள்ளாகப் புல்தரையில் குட்டிக்கரணம் போடத் தொடங்கிவிட்டான் குமரன்.

உள்ளே மதனைப் பார்த்து லேசாக புன் முறுவல் செய்து 'வா அத்தான்' என்றாள் சத்யா.

''அடடே, சத்யா தேவியாரா? வருக வருக அம்மணி தங்கள் அலுவலகத்தில் வேலை எல்லாம் சரிவர நடக்கின்றதா? மாதம் மும்மாரி மழை பொழிகிறதா, மகாராணியாரே?'' என்று இடைவரைக் குனிந்து வணங்கி விசாரித்தான் மதன்.

எல்லோரும் நகைத்தனர்.

தானும் சேர்ந்து லேசாகச் சிரித்துவிட்டு, ''இங்கே அலுவலகத்துக்குள் மும்மாரி மழை பொழிந்தால் பைல் எல்லாம் என்ன ஆகும்?'' என்று மீண்டும் சிரித்தாள் சத்யா.

சாக்லேட் எடுக்க உள்ளே வந்து கொண்டிருந்த சித்ரா சிறு அதிர்ச்சியுடன் சத்யாவைப் பார்த்து விழித்தாள். பெற்றோரும்கூட அதிர்ச்சியுடன் மூத்த மகளைப் பார்த்தனர்.

''நான் குளிக்கப் போகிறேன். இன்று பஸ்சில் ஒரே கூட்டம்'' என்று சொன்னாள் சத்யா.

''சத்யாவுக்கு கார் அனுப்பக் கூடாதா மாமா?''

''நான் தான் சொன்னேனே! எல்லாம் அவள் மூளைக்கு வேலை கொடுப்பதற்காகத்தான்? எப்படியோ இந்த அளவுக்கு ஆளானாளே, ஆனால் மதன், சத்யா இன்றளவு சிரித்து நாலு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது.''

''நீங்கள் கவலைப்படாதீர்கள் மாமா இந்த நாலு ஆண்டுக்கும் வட்டியும் முதலுமாகச் சேர்த்து சிரிக்க வைத்து விடுகிறேன். ஆனால் நீங்கள் அந்த ராஸ்கலை சும்மா விட்டிருக்கக்கூடாது. போலீசில் புகார் செய்து சந்தி சிரிக்க வைத்திருக்க வேண்டும்'' என்றான் சினத்துடன்.

''நம் மானமும் சேர்ந்துதானே சந்தி சிரிக்கும். அதோடு அதை எல்லாம் யோசித்து செய்யும் நிலையில் யார் இருந்தார்கள்? இவளானால் எப்போதும் ''அப்பா அப்பா'' என்று ஒரே கதறல். எப்படியோ கண் காணாமல் ஒழிந்தால் சரி என்று இருந்து விட்டோம்'' என்றார் செல்வரத்தினம்.



''குமரன் பிறந்த பிறகும் ஒரு தகவலும் இல்லையா?''

''இல்லை.''

''இருக்கிறானா இல்லையா என்று கூடத் தெரியாத ஒருவனுக்காக சத்யாவை வாழா வெட்டியாக்கி வைத்திருக்கிறீர்களா அத்தை? பேசாமல் 'டைவர்ஸ்' செய்துவிட்டு வேறு கல்யாணம் செய்து வையுங்கள். சமூக சேவை அது இது என்பீர்களே அத்தை, வீட்டில் செய்யத் தோன்றவில்லையா?''

'மதன்!' என்றார் செல்வரத்தினம் ஆச்சரியமும் யோசனையுமாக 'இது எங்களுக்குத் தோன்றவே இல்லையே.''

''இப்போது ,தோன்றிவிட்டதில்லையா செய்யுங்கள். நாலு ஆண்டுகள்! அங்கெல்லாம் நடப்பதைப் பார்த்த பின் இங்கே உள்ள பெண்களுக்கு நாம் பெருத்த அநியாயம் செய்வதாகவே தோன்றுகிறது மாமா'' என்றான் மதன்.

''மதன் சொல்வது சரி,'' என்றார் செல்வரத்தினம் புதிய வேகத்துடன்.

''பொறுங்கள். சத்யாவிடம் இந்தப் பேச்செல்லாம் யோசித்து தான் சொல்ல வேண்டும். அவள் இன்னமும் நன்கு தெளியவில்லை. அதோடு ஒரு பிள்ளை இருக்க அவளை மணக்க யார் முன் வருவார்?''

''பிள்ளைப் பொறுப்பு நம்மது'' என்றார் செல்வரத்தினம்!

''ஏன் முன்வர மாட்டார்கள்? சத்யா அழகி. பணக்காரி இளவயது இருக்கிறது.''

''சத்யா வருகிறாள், மதன் இதுபற்றிப் பிறகு யோசிக்கலாம்'' என்று முடித்தாள் விஜயா.

''உன் வெளிநாட்டுப் பயணமெல்லாம் எப்படி இருந்தது அத்தான்?'' என்று கையில் காபியுடன் வந்தாள் சத்யா.

''பிரமாதம் போ. இங்கே வரவே மனசில்லை. கடைசியாக நம் மாமன் மக்கள் இரண்டு மருக்கொழுந்துகள் இருக்கிறார்களே, நம்மைக் காணாமல் உருகி உயிரை விடுமுன் வந்து சேர வேண்டுமே என்று ஓடோடி வந்தேன். வந்து பார்த்தால் ஊ...ம்'' என்று பெரிய பெருமூச்சு விட்டான் மதன்.

''என்ன ஊ...ம்'' என்றாள் சத்யா முறுவலுடன்.

''பின்னே என்னவாம்? ஒருத்தியானால் ஜாலியாகக் கைப்பையைச் சுழற்றிக்கொண்டு வேலைக்குப் போகிறாள். அடுத்த மருக்கொழுந்தானால் சைக்காஜி முடித்துவிட்டு ''சோசியல் சர்வீஸ்'' ஊர் சுற்றுகிறாள். எவளும் என்னை நினைத்ததாகவே தெரியவில்லையே. இவர்களுக்காக என் அரும்பெரும் வெளிநாட்டை விட்டுவிட்டு ஓடோடி வந்தேனே...! தான் வந்தேனே...'' என்று பழைய கால நாடக பாணிப் பாட்டுடன் முடித்தான் மதன்.

சத்யா சிரித்துவிட்டு, ''நாலு ஆண்டுகள் தங்கிவிட்டு ஓடோடி வந்தியாக்கும்? இதில் வந்தேனே என்று அழுகை வேறு. அப்படி அழ அங்கே என்ன இருக்கிறது'' என்று கேட்டாள்.

மதன் பார்வை மாறியது. கண்ணில் கவனத்துடன் முக்கியமாக இருப்பது. ''டைவர்ஸ்'' என்றான்.

''டைவர்ஸ்.''

''ஆமாம் டைவர்ஸ், விவாகரத்து, இம்மென்றால் போதும் அவன் குறட்டை விட்டான் என்று டைவர்ஸ், அடிக்கடி தும்மினான் என்று



கூட டைவர்ஸ். இங்கே போல அந்தக் கணவன் என்ன கொடுமை செய்தாலும் ''கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்'' என்று அவன் காலடியிலேயே விழுந்து கிடப்பதில்லை. கண்ணில் காணாமல் போய் பல ஆண்டுகள் ஆன பிறகும் அவன் வருகிறானா என்று வழி பார்ப்பதில்லை. ''சீ, போ'' என்று உதறிவிட்டு வேறு மணம் செய்து விடுகிறார்கள்.'' என்றான் மதன்.

சத்யா முகம் மாறாமல், ''பெரிய சொற்பொழிவு ஆற்றி விட்டாயே அத்தான். கிரஷ் கொண்டுவரச் சொல்லட்டுமா?'' என்று முறுவலித்தாள்.

''விளையாட்டு இல்லை சத்யா. எல்லாம் மெய்.''

''ம்...ம்? ஆனால் சிரமம் இல்லையா அத்தான்?'' என்றாள் யோசனையோடு.

''அதெப்படி சிரமம்? கிடையாது?'' என்று அவசரமாக மறுத்தான் மதன்.

திடீரென்று குழந்தை ''அப்பாவா?'' என்றது செல்வரத்தினத்தின் மனதை உறுத்தியது. மகளிடம் சென்று அப்பா எங்கே என்று கேட்டுவிடக்கூடாதே என்ற பயம் வேறு. பேரனுக்கு விளையாட்டுக் காட்டுவது போலத் தனியே அழைத்துச் சென்று பேசினார். ''என்னடா கண்ணா, திடீரென்று அப்பாவா என்று கேட்டாயே!''

''எங்க கிளாஸ்லே எல்லா பேருக்கும் அப்பா இருக்காங்களே.'' என்று குட்டிக்கரணம் போடத் தொடங்கிவிட்டான் பேரன். ''இதான் சாமர்சால்ட் தாத்தா. ஒன் டூ, த்ரி...''

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''அம்மாவிடம் அப்பா என்று பேசவே கூடாது குட்டிக்கண்ணா! தாத்தா சொல்வது தெரிந்ததா?''

''ஊம்...'' என்று தலையைச் சரித்து யோசித்தான் குமரன். ''அம்மாகிட்டே கேக்கக்கூடாதா? அப்போ சத்யாம்மாட்டே கேக்கட்டா?'' என்று வினவவும் அவருக்கு ஒரேயடியாகத் தூக்கி

வாரிப்போட்டது. 'குமரா?' என்று கத்திவிட்டார். பிறகுதான் விஜயாவை "அம்மா" என்றும் சத்யாவைச் "சத்யாம்மா" என்றும் பேரன் அழைக்கும் வழக்கம் நினைவுக்கு வந்தது. ஒரு பெருமூச்சுடன் "சத்யாம்மா கிட்டேதாண்டா கேட்கவே கூடாது" என்றார்.

தாத்தாவின் அருகில் வந்து பெஞ்சில் ஏறி அவரது கழுத்தை அணைத்துக் கொண்டான் குமரன். அவரது காதருகில் வாய்வைத்து, "ஏன் தாத்தா சத்யாம்மாவுக்கும் தெரியாதா?" என்று ரகசியமாகக் கேட்டான்.

சத்யா இந்த வயதில் தன் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஓராயிரம் கேள்விகள் கேட்ட நினைவில் அவருக்குக் கண்ணீர் வந்தது. பேரனை இறுக அணைத்து, "ஆமாண்டா கண்ணா" என்றார் கண்ணீருடன்.

"அழாதே தாத்தா தெரியாட்டா நான் கேக்கலை. நீ அழாதே" என்று தேற்றினான் சிறுவன்.

அன்று காலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு இருந்த மதன் திடீரென்று "மைகாட்" என்று அதிர்ச்சியுற்றுக் கத்தினான்.

"என்ன அத்தான்" என்று வினவினாள் சித்ரா.

"பார் சித்ரா, என் பேராசிரியர் - இந்த வெளிநாட்டுப் பயணத்திற்கு என்னை ஊக்கியவரே அவர்தான். வசதியுள்ளவன் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டாமா என்பார். இவர் இறந்துவிட்டாராம். வருந்துகிறோம் தலைப்பில் போட்டிருக்கிறது. நேற்றே சென்று பாராமல் இருந்து விட்டேன் சித்ரா, நான் அவர் உடலையாவது பார்க்க வேண்டும்."

உடனே புறப்பட்டான் மதன்.



வெகு நேரம் கழித்து வந்தான் மதன். பிறகும் அவன் ஆற்றாமையோடு சித்ராவிடம் அவரைப் பற்றிப் பேசினான். "உன்னிடம் பேசப் பேச மனதில் பாரம் குறைவது போல் இருக்கிறது, சித்ரா வருகிறாயா, ஊரிலிருந்து வந்த பெட்டியில் அவரோடு சேர்ந்து நாங்கள் எடுத்த படம் இருக்கிறது காட்டுகிறேன்" என்று அவளை அழைத்துச் சென்றான்.

"எல்லா பையன்களிடமும் அவருக்குப் பிரியம் உண்டு சித்ரா. ஆனால் நானும் மாதுவும் ஸ்பெஷல். நீங்கள் இருவரும் ஒற்றுமையாக இல்லையே என்பார். மாதுவிடம் கூட நான் மன்னிப்புப் பெற வேண்டும் சித்ரா."

"மாதுவா?" அந்தப் பெயர் சித்ராவின் நெஞ்சை வருடியது. "அவரது முழுப் பெயர் என்ன?"

"அது ரொம்ப நீளப் பெயர். மாது என்றுதான் எல்லோரும் அழைப்பது. ஏழைப் பையன், "பார்ட்டைம்" வேலை செய்து கொண்டே படித்தான். பேராசிரியர் நேசமணிக்கு அவனிடம் அதிக அன்பு. அதனால் பாதி எனக்கு அவனிடம் பொறாமை என்று நினைக்கிறேன். என்ன படித்தாலும் ஏழைப் பையன்தானே என்று நினைப்பேன். வெளிநாடு போய் அங்கே எல்லாரும் வித்தியாசம் இல்லாமல் பழகுவதைப் பார்த்த பிறகு இங்கே அவனிடம் நான் நடந்து கொண்ட முறையை நினைத்தால் வெட்கமாக இருக்கிறது."

"என்ன செய்தீர்கள்?" என்றாள் சித்ரா யோசனையோடு.

"எதற்கும் மட்டம் தட்டுவேன், அவனது ஏழ்மையை கிண்டல் செய்து அழ வைப்பேன்."

"கடைசியாக ஒரு நாள் திருமணப் பேச்சு வந்தது, "இந்த மாதிரிப் பரதேசிப் பயல்களுக்கு யாராவது பிச்சைக்காரிதான் கிடைப்பாள். என் மாமா மகளை எடுத்துக் கொண்டால், அவளை என்னை மாதிரி பணக்காரனுக்குத்தான் மாமா கொடுப்பார் - உயரப் பறந்தாலும்

என்ன படித்தாலும் பிச்சைக்காரப் பயலுக்குக் கொடுப்பாரா? படித்து விட்டோம் என்ற கர்வத்தில் போய் நின்றால் மாமா மகளே செருப்பால் அடிப்பாள்...'' என்று ஏதேதோ உளறிக் கொட்டினேன். காக்காய்களுக்குக் கேட்க வேண்டுமா? ஒவ்வொரு வார்த்தைக்கும் கைதட்டு, விசிலடிப்பு. மாது என் மேல் பாய்ந்தே விட்டான். நல்லவேளை அந்த வேளையில் பேராசிரியர் வந்து விட்டார் இல்லையானால் என்னைக் கொன்றே பழி தீர்த்திருப்பான். அவன் கண்களில் அப்படி ஒரு வெறி.''

உங்களுக்கு பதில் அவர் என் அக்காவைப் பழி தீர்த்து விட்டாரே அத்தான்'' என்று கதறினாள் அவள்.

## 17

''சித்ரா, என்ன சொல்கிறாய்?'' என்று திகைத்தான் மதன்.

''உங்கள் பணத் திமிரில் எங்கள் சத்யாவின் வாழ்க்கையைச் சீரழித்து விட்டீர்களே அத்தான் உங்களைப் பழி தீர்த்துக் கொள்ள, நினைத்து அவள் வாழ்வைப் பழி வாங்கி விட்டாரே அந்த மாது. அத்தான் இந்த மாதுவும் சத்யாவை மணந்த மாதவனும் ஒருவரேதான் அத்தான். ஒருவரேதான்'' என்று முகத்தை மூடிக் கொண்டு கதறி அழுதாள் சித்ரா.

''இவனா? இதோ இந்த மாதுவேதான் மாதவனா. அவன் பெயர் மிகவும் நீளமாயிற்றே... சித்ரா, நான் நினைக்கவே இல்லையே. கடவுளே, நான் செய்த தவறு இந்த அளவுக்கு சத்யாவின் வாழ்வை வீணடிக்கும் என்று கனவில் கூட நினைக்கவில்லை. சித்ரா எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டேன்,'' என்று மிகவும் வருந்தினான் மதன்.

''தவறு அல்ல அத்தான், நீங்கள் செய்தது தப்பு. தெரிந்தே செய்த தப்பு... அவர் இவ்வளவு சூழ்ச்சி செய்து மணந்தவர் அவளைக்



கொடுமைப் படுத்துவானேன் என்று பலமுறை யோசித்துக் குழம்பினேன் அத்தான். இப்போது அல்லவா காரணம் தெரிகிறது...''

''சித்ரா, என்னை மன்னித்து விடு... சித்ரா...''

''நான் யார் உங்களை மன்னிக்க?'' என்றாள் வெறுப்புடன்!

''நீங்கள் அழித்தது என் வாழ்வை அல்லவே. போங்கள் அவளிடம் போய் ''உன் வாழ்வு நாசமாக நான்தான் காரணம்'' என்று சொல்லி மன்னிப்புக் கேளுங்கள், அவளுக்குப் புரிந்தால் அவள் உங்களை மன்னிக்கட்டும்: மன்னித்து விட்டு, வீணாகிப் போன தன் வாழ்வை எண்ணி அவள் மீண்டும் கதறட்டும்.''

''போதும் சித்ரா, தயவு பண்ணி வார்த்தைகளால் என்னைக் கொல்லாதே. இப்படி ஆகும் என்று எண்ணி நான் எதையும் செய்யவில்லை சித்ரா, இப்போதும்கூட இதைச் சீர்ப்படுத்த நான் எதுவும் செய்யத் தயார்.''

விம்மி அழுது கொண்டிருந்த சித்ரா மெல்ல நிமிர்ந்தாள். ''எதுவும் செய்யத் தயார் இது உதட்டளவு வார்த்தை இல்லையே,'' என்று அவனையே பார்த்துக் கேட்டாள்.

''சத்தியமாக இல்லை சித்ரா'' என்றான் அவன்.

சித்ரா நிமிர்ந்தாள் ''அப்படியானால் ஒன்று செய்யுங்கள். அன்று சொன்னீர்களே - அவள் கணவனை டைவர்ஸ் செய்து விட்டு சத்யாவுக்கு வேறு கல்யாணம் செய்யுங்கள் என்று, சத்யாவை மணப்பவராக நீங்கள் இருங்கள்.''

''சித்ரா!''

''ஆமாம். அது ஒன்றுதான் நீங்கள் செய்யக்கூடிய பிராயசித்தம்.''

''அது எப்படி முடியும் சித்ரா. நான் உன்னை அல்லவா...''

மறுப்பவள் போலக் கைகளை நீட்டி ''அப்படிச் சொல்லாதீர்கள்'' என்று கதறினாள் சித்ரா.

நீட்டிய கைகளைப் பற்றி, ''எப்படிச் சித்ரா முடியும்? நெஞ்சில் நீ இருக்க வேறு ஒருத்தியை எப்படி மணப்பது? எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எனக்காகக் காத்திருப்பதாக நீ சொன்னது...'' என்று அவன் தொடருமுன், சித்ரா இடைமறித்தாள்.

கைகளை உதறி விடுவித்துக் கொண்டு, ''உங்களை என்னால் மணக்க முடியுமா, அத்தான்?'' என்று கேட்டாள் வெறுப்பும் வேதனையுமாக.

''சித்ரா!''

சித்ரா மீண்டும் நிமிர்ந்தாள். ''எந்தத் தப்புக்கும் இரண்டு தீர்வு உண்டு அத்தான்! ஒன்று பிராயசித்தம். மற்றது தண்டனை. செய்த தப்புக்கு பிராயசித்தமாகச் சத்யாவை ஏற்று அவளுக்கு வாழ்வு அளியுங்கள். அல்லது தீர்வாகத் தண்டனையாக எண்ணி என்னை மறந்து அவளை மணந்து கொள்ளுங்கள்'' என்றாள் உறுதியாக.

''சத்யாவை மணப்பது யாருக்கும் தண்டனை ஆகாது சித்ரா. இன்னொரு பெண்ணைக் காதலிக்கும் ஒருவனைத் தவிர மற்ற யாருக்குமே அவளை அடைவது பெரும் பேறுதான். ஆனால்... ஆனால் என்னை விடு சித்ரா. நீ? உன் மனம் அது என்னை விரும்புகையில் அதை மறுக்க நீ என்ன தப்பு செய்தாய் சித்ரா? நீ செய்த எந்தத் தவறுக்குரிய தண்டனை அல்லது பிராயசித்தம் இந்த வேதனை?''

சித்ரா தன் முழு உயரத்திற்குமாக நிமிர்ந்தாள். ''என் உடன் பிறந்தவளுடைய வாழ்வை அழித்த ஒருவரை மணந்து மகிழும் அளவுக்கு நான் இழிந்தவள் அல்ல அத்தான். அதோடு நாலு ஆண்டுகளில் ஒருவர் மனம் மாறாதா? நான் இன்னமும் உங்களை விரும்புவதாக யார் சொன்னது?''



''பொய் சொல்லாதே சித்ரா.''

சித்ரா அலட்சியமாக முகத்தைத் திருப்பினாள்.

''இப்போது என்னதான் சொல்கிறீர்கள்? உங்களால் விளைந்த தவறைச் சீர்படுத்த எதுவும் செய்யத் தயார் என்று சொன்னது பொய் என்கிறீர்களா? பொறுப்பில் இருந்து தப்பி ஓடப்போகிறீர்களா?''

இப்போது மதன் கம்பீரத்துடன் நிமிர்ந்தான். ''பொறுப்பைத் தட்டிக் கழித்து ஓடுகிறவன் நான் அல்ல சித்ரா, சத்யாவை மணந்து அவள் முகத்தில் வற்றாத சிரிப்பை மலர வைப்பேன். இது நிச்சயம்'' என்றான் உறுதியான குரலில்.

''செய்து காட்டுங்கள்'' என்று கூறி முடித்துவிட்டு வேகமாக வெளியேறினாள் சித்ரா.

நேராகத் தன் அறைக்குள் சென்றாள். கதவைத் தாளிட்டாள். படுக்கையில் குப்புற விழுந்து தலையணையில் முகம் புதைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

சத்யாவை மணந்து கொள்ள விரும்புவதாக மதன் சொன்னபோது செல்வரத்தினத்திற்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

''நீ சித்ராவை விரும்புகிறாயோ என்று நினைத்தேனே'' என்றார் வாய்விட்டு.

ஒரு கணம் யோசித்துவிட்டு, ''அது அது தப்புக் கணக்கு மாமா'' என்றான் மருமகன்.

செல்வரத்தினத்தின் உற்சாகம் விஜயாவுக்கு இல்லை.

''மறுமணம் என்று தயங்குகிறீர்கள் அம்மா'' என்று குற்றம் சாட்டினாள் சித்ரா.

''சமூகசேவை என்று எத்தனை பேருக்கு விதவா விவாகம் செய்து வைத்திருக்கிறீர்கள்? இப்போது நம் வீட்டினுள் என்ற உடன் பத்தாம் பசலித்தனமா?'' என்று கடுமையாகத் தாயைத் தாக்கினாள்.

''அது விதவா விவாகமடி. இங்கே அந்தப் பையன் இருக்கிறானா இல்லையா என்றே தெரியவில்லையே. ஆனால் நான் தயங்கக் காரணம் அது அல்ல.''

''சத்யா இன்னும் பழைய சத்யா ஆகவில்லையே. அவள் மனதில் அவளுடைய கணவனின்...''

''கணவன் என்று சொல்லாதே'' என்று அதட்டினார் அவள் கணவர். ''திருட்டு ராஸ்கல் என்று சொல். அல்லது அந்தப் பையன் என்பதோடு நிறுத்திக் கொள்.''

''சத்யா அவனை மறக்கவில்லையா என்று...''

''அவன் நினைவே அவளுக்கு இல்லையே'' என்று வெடித்தார் செல்வரத்தினம் பொறுமையிழந்து.

''எப்படிச் சொல்லுகிறீர்கள்?'' விஜயாவும் விடவில்லை.

''ஒரு தரமேனும் அவனைப் பற்றிப் பேசினாளா?''

''அவள் என்றுதான் பேசினாள்?'' இங்கே வந்த ஒருநாள் தவிர என்றேனும் அவள் மனம் விட்டு ஒரு வார்த்தை சொன்னதுண்டா? அப்போது மறவாதவள் இப்போது மட்டும் மறந்து விட்டிருப்பாளா?''

''அதற்காக என்ன செய்ய வேண்டும் என்கிறாய்? அந்தப் பயலைப்பற்றி அவளிடமே கேட்டு நினைவுபடுத்தி ஆக வேண்டும் என்கிறாயா?'' என்று கத்தினார் அவர். வாடிப் போன மகளுக்கு வளம் வரப்போகிறது; அவளைப் போற்றிப் பாதுகாக்க நல்ல துணை கிட்டப் போகிறது என்று பார்த்தால் மனைவி குறுக்கே விழுந்து குழப்புகிறாளே என்று கோபம் வந்தது அவருக்கு.



விஜயாவுக்கு வேதனையாக இருந்தது. மகளின் நிலை ஒருபுறம் வாட்டியது. ''கோபிக்கிறீர்களே'' எனுமுன் கண்ணீர் வந்தது.

அவருக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. ''அதில்லை விஜி. கடவுளாகப் பார்த்து தருகிற வரம் போல மதன் தானாக வருகையில் நீ தடுக்கிறாயே என்றுதான் எனக்குக் கோபம் வந்துவிட்டது. காலம் வருகையில் அவளைப் பற்றிய கவலை இல்லாது கண்ணை மூடலாம் என்று நினைத்தேன்.''

''எனக்கும் அந்த எண்ணம் இல்லையா? அவள் அந்தப் பையனை மறந்து விட்டாள் என்கிறீர்கள். இது மறக்கக்கூடிய விஷயமா? அவளாகத் தன் சொந்த அறிவைப் பயன்படுத்தி அவனோடு இனி வாழ முடியாது என்றால் அதுவேறு விஷயம். இப்போது அவள் மறக்கவில்லை. அவள் மனம் மரத்துப் போய் இருக்கிறது. அவளுள் ஓர் உறக்கம். இந்த உறக்கம் அவள் இன்னொருவனோடு வாழ்க்கையில் கலந்தால் என்ன ஆகும்; அதை எண்ணிப் பாருங்கள் என்றுதான் சொன்னேன்'' என்றாள் தாய்.

சற்று நேரம் சிந்தித்து விட்டு, ''ஆவது ஆகட்டும் விஜி. நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்'' என்றார் செல்வரத்தினம். சத்யா வேலையிலிருந்து திரும்பியபின் அதைச் செயலாற்றினார். ''சத்யாம்மா, உனக்கு வேறு திருமணம் செய்யலாம் என்று இருக்கிறேன்'' என்றார் காபி அருந்திக் கொண்டு இருந்த மகளிடம்.

சத்யாவின் அகன்ற விழிகள் பேதமையுடன் விழித்தன. ''எனக்கு எனக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டதே அப்பா?'' என்றாள் குழப்பத்துடன்.

## 18

ஒரு சிறு குழந்தையிடம் பேசுவது போல செல்வரத்தினம் மகளிடம் பேசினார்.

''ஆமாண்டா கண்ணா. ஆனால், அந்தப் பயல் ஒரு மடையன், உன் அருமை தெரியாமல் கொடுமை செய்தான். அதனால் அவனை விவாகரத்து செய்துவிட்டு, மதன்—நம்ம மதன் இல்லையா—அவனுக்கு உன்னை மறுமணம்... என்னடா அம்மா...''

மகள் நெற்றிப் பொட்டில் விரல்களை வைத்து அழுத்துவதைக் கண்டு பேச்சை நிறுத்தினார், செல்வரத்தினம்.

''தலை வலிக்கிற மாதிரி இருக்கிறது அப்பா நான்...நான் கொஞ்ச நேரம் படுத்திருக்கட்டுமா, அப்பா?'' என்று தந்தையிடம் அனுமதி கேட்டாள் சத்யா.

''இதற்குக் கூட கேட்க வேண்டுமா சத்யாம்மா? போய்ப் படுத்துக்கொள். அதிக வலி இருக்கிறதா? மாத்திரை வேண்டுமா?''

''லேசாய்த்தான் இருக்கிறது'' என்று எழுந்து சென்றாள் சத்யா.

அத்துடன் விடாமல் மறுநாளும் கேட்டார். ''எனக்குத் தெரியவில்லையே, அப்பா'' என்று மீண்டும் குழம்பினாள் அவள்.

''உனக்கு என்ன குழப்பம் சத்யா? யாரும் ஏதும் சொல்வார்கள் என்று பயமாக இருக்கிறதா...? அல்லது பிடிக்க வில்லையா? அத்தானிடம் பிரியம் இல்லையா?''

''அப்பா, எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லையே அப்பா'' என்றாள் பரிதாபமாக.



''அவளைச் சும்மா விடுங்கள்'' என்று குறுக்கிட்டாள் அதுவரை பேசாமலிருந்த தாய். ''சத்யாம்மா நீ சற்று நேரம் குமரனோட விளையாடிக் கொண்டு இரு'' என்று மகளை அனுப்பினாள். ''அவளை மேலும் சங்கடப்படுத்தாதீர்கள். அவள் கலங்குவது தெரியவில்லையா?'' என்றாள் கணவனிடம்.

உதட்டை இறுக மூடிச் சற்றுநேரம் சினத்தை அடக்கினார், அவர், பிறகு பொறுமையுடன், ''இதோ பார் விஜி மதனைக் காட்டிலும் அவளைப் போற்றிப் பாதுகாக்க யார் கிடைப்பார்கள்; அவள்நிலை தெரிந்தவன்; குணம் புரிந்தவன்; உடன் வளர்ந்து உறவின் பாசமும் உடையவன். மற்ற எவனும் பணத்துக்காகத் தானே வரவேண்டும், நம் காலம் முடிந்த பின்னும் அவன் அவளைக் காப்பான் என்று என்ன நிச்சயம்? மதனாக வந்து கேட்கும்போது வாய்ப்பை நழுவ விடலாமா?'' என்றார்.

''எனக்கு மட்டும் அந்த எண்ணம் இல்லையா? அவள் கலங்குகிறாளே...''

''அதற்காக ஆயுள் பூராவும் அவள் அப்படியே இருக்கட்டும் என்கிறாயா?'' பொறுமை இழந்து எரிந்து விழுந்தார் செல்வரத்தினம்.

''எனக்கும் அவள் மகள் என்பதை மறந்து பேசுகிறீர்கள். அவளுக்கு மனநிலை இன்னமும் பூரண குணம் ஆகவில்லை. இந்நிலையில் தீவிர முடிவு எடுப்பது தவறு.''

செல்வரத்தினம் அயர்ந்து போய் உட்கார்ந்தார்.

தன் அறையில் கண்ணைத் துடைத்துக் கொண்டு இருந்த தாயிடம் சித்ரா வந்தாள். ''என்னம்மா நீங்கள்? அப்பாவுக்குச் சத்யாவின் எதிர்காலம் பற்றி பெரும் கவலை. அதில் ஏதாவது சொல்லி விடுகிறார். அதை எல்லாம் பெரியதாக எடுத்துக் கொண்டு

அழலாமா? உங்களுக்கும் இப்போது மனம் பலவீனமாகி விட்டது?'' என்றாள் தேறுதலாக.

''உன்னை சைக்காலஜி படிக்க வைத்தது பெரிய தப்பாகிப் போயிற்று. வீட்டில் ஒவ்வொருவரையும் அலசத் தொடங்கி விட்டாய். இந்த அலசலை எல்லாம் வெளியே வைத்துக் கொள்'' என்று புன்னகை செய்தாள் தாய்.

செய்வது அறியாமல் இளைய மகளிடம் ஆலோசனை கேட்டார் செல்வரத்தினம். சத்யா மனநிலை இப்படி ஆனதிலிருந்தே வீட்டு விஷயங்களில் அவருக்கு அவள் தானே முக்கிய அமைச்சர். ''சின்ன கண்ணா. இப்போது என்ன தான் செய்வது? இதற்கு உன் சைக்காலஜி வகுப்பில் என்ன சொல்லித் தந்தார்கள் ஏதாவது சொல்லேன்'' என்றார்.

சித்ரா சிரித்தாள் ''போங்கப்பா நம் வீட்டில் இப்படி நடக்கும் என்று அதை எதிர்பார்த்து அங்கே கற்றுத் தருவார்களா இருக்கட்டும் பார்ப்போம். அத்தானிடம் சத்யாவை அங்கே இங்கே அழைத்துப்போய் வரும்படி கேட்கலாம். மெல்ல மெல்ல அவள் மனமே அத்தானை நாடி விடலாம்...அத்தான்...வந்து... அத்தான் எப்படியும்... அவள் மனதைக் கவர்ந்து விடுவார் அப்பா.''

மூத்த மகளைப் பற்றிய கவலையில் இளையவளின் தடுமாற்றத்தைப் பெற்றவர் கவனிக்கவில்லை.

மதனிடம் விஷயத்தை கூறியபோது அவனும் சித்ரா கூறியதை ஆதரித்தான். ''சத்யாவின் மனம் தெளிவடைகிற வரையில் நான் காத்திருப்பேன், மாமா. அவளைக் காப்பது என் கடமை கூட. அதனால் நீங்கள் கவலைப்படாதீர்கள்'' என்று உறுதி கூறினான்.

அவன் சென்றபின் விஜயா தன் கணவரைத் தேற்றினாள். ''சும்மா கவலைப்படாதீர்கள் சத்யாவை மணந்து காப்பாற்றா விட்டாலும் அவளுடைய தங்கையின் கணவனாக இருந்து சத்யா துன்புறாமல் காப்பான் மதன்'' என்றாள்.



''என்னது!'' என்று வியந்தார் செல்வரத்தினம். ''சத்யாவை மணப்பதாகச் சொல்பவன் சித்ராவை மணப்பானா? வரவர உளறுகிறாய் விஜி.''

குறுக்கும் நெடுக்கும் சற்று நேரம் நடந்துவிட்டு, ''விஜி. சித்ராவை நிறைய பேர் கேட்கிறார்கள். சத்யா விஷயம் முடிவாகி விட்டால் நன்றாக இருக்கும் என்று பார்த்தேன். அது நாளாகுமானால் சித்ராவுக்காவது முடித்துவிட வேண்டாமா அவளுக்கும் வயது இருபத்து ஒன்றாகிறதே'' என்றார்.

''சித்ரா... என்று தொடங்கிய விஜயா நிறுத்தி விட்டுப் பிறகு, ஓர் ஆறு மாதம் பொறுப்போமே'' என்றாள் கெஞ்சுவதுபோல.

''ஏன் சொல்கிறாய் என்று தெரியவில்லை. ஆனால் உன் விருப்பம் போலச் செய்யலாம்'' என்று முடித்தார் செல்வரத்தினம்.

தன் படிப்புக்குச் சரியாக பெரிய தொழிற்சாலை ஒன்றிற்கு உரிய பூர்வாங்க வேலைகளைச் செய்து கொண்டிருந்தான் மதன். முதலில் மாமன் வீட்டிலிருந்து வெளியேறினான். செல்வரத்தினத்திற்கு இது பிரியமில்லை. என்றாலும் ''என் வரவை எதிர்நோக்கும் பழக்கம் சத்யாவுக்கு வரும்'' என்று சமாளித்தான் அவரிடம். ஆனால் விஷயம் வேறு. சித்ராவைக் காண்பதை முடிந்த அளவு தவிர்க்க நினைத்தான். சித்ராவும் அதை அறிந்து ஆமோதித்தாள்.

வேலை முடிந்த சத்யா கிளம்பும்போது அனேகமாக காருடன் காத்திருப்பான் மதன். சும்மா ஒரு டிரைவ், 'டிரைவ் இன்'னில் டிபன். சினிமா, நாடகம் என்று எங்கேனும் அழைத்துப் போவான். 'டிரைவ்' தான் அதிகம். வெளிநாடு அனுபவங்களை தனக்கே உரிய பாணியில் அவன் அளக்கும்போது சத்யா சிரிப்பாள். ''உன்னைப்

பார்த்து மூன்று தினங்கள் முடிந்து விட்டனவே அத்தான்'' என்று கூறும் அளவுக்கு சத்யா மாறினாள்.

விஜயா சொன்ன ஆறு மாதங்கள் முடிந்துவிட்ட போதிலும் சத்யா மாறிவரக் கண்டு பொறுமையுடன் காத்திருந்தார் செல்வரத்தினம்.

''நம் அலுவலகத்தில் நிறைய மாற்றங்கள் ஏற்படக் கூடும், சத்யா'' என்றார் திருமாறன்.

அவரிடம்தான் சத்யா ஸ்டெனோவாக வேலை செய்தாள்.

''அப்படியா சார்'' என்றாள் சத்யா லேசான முறுவலுடன்,

அவர் மேலே பேசத் தொடங்குமுன் டெலிபோன் மணியடித்தது. அவர் போனை எடுத்துப் பேசவும் சத்யா தன் பகுதிக்குள் சென்று வேலையைத் தொடங்கினாள். ஆனால் விரைவிலேயே திருமாறன் அழைத்தார். ''சத்யா முதலாளி தான் பேசினார். மாற்றங்கள் என்று சொன்னேனில்லையா? மாற்றுகிறவர் இங்கே வருகிறார். ஒரு வாரத்தில் அதற்குள் வீடு பார்த்து சோபா செட்டெல்லாம் போட்டு... நான் அதைப் பார்க்கப் போகிறேன்'' என்று பறந்தார்.

மறுநாள், ''சத்யா இளநீல வண்ணச் சுவருக்கு என்ன கலரில் திரைச்சீரை இருக்க வேண்டும்?'' என்று வந்தார்.

''இளம் சிவப்பில் பெரிய பூக்கள் போட்டதாக இருக்க வேண்டும்'' என்றாள் சத்யா, ''தங்கநிறம் கூடப் பொருந்தும்.''

''நன்றி சத்யா இந்த மாதிரி பண வசதி உள்ள விவகாரம் எல்லாம் உனக்குத் தானே நன்றாகத் தெரிகிறது'' என்று மீண்டும் பறந்தார்.

புதிய அதிகாரி வருவதைப் பற்றி சத்யா வீட்டில் சொன்னாள். செல்வரத்தினம் தன் நண்பர் பரசுராமிடம் அதுபற்றிக் கேட்டார்.

''ஆமாம் செல்வம், கிருஷ்ணன் கெட்டிக்காரப் பையன். பம்பாய், டெல்லி, கல்கத்தா மூன்று அலுவலகங்களையும் சீர்படுத்தி



இருக்கிறான். இப்போது நிர்வாகச் செலவு கணிசமாகக் குறைந்து விட்டது. ஊழியர்கள் திருப்தியாக இருக்கிறார்கள், அதனால் இங்கேயும்...''

''பையன் என்கிறாயே.''

''சிறு வயதுதான். முடிந்தால் என் தங்கை மகளைக் கொடுத்து இங்கேயே பிடித்து வைத்து விடுவேன். எனக்கு என்ன பிள்ளையா குட்டியா?''

''இங்கேயே வீடு செட் அப் பண்ணுகிறாயாம்?''

''ஆமாம். கம்பெனி தலைமைச் செயலகம் இதுதானே? ஆமாம் நீஏன் துருவுகிறாய்? சத்யாவுக்குத் தொல்லையா என்றா? சும்மா அவன் ஜி.எம். மாதிரி. அவள் வேலைக்கும் அவனுக்கும் தொடர்பில்லை'' என்று தைரியம் சொன்னார் பரசுராம்.

ஒரு வாரம் சென்றபின் ''இன்று உதவி ஜி.எம் கிருஷ்ணன் வருகிறார்'' என்றார் சென்னை அலுவலக நிர்வாகி திருமாறன்.

கிருஷ்ணன் வந்ததும் ஒவ்வொரு பகுதிக்கும் அழைத்துச் சென்று எல்லோரையும் அறிமுகம் செய்து வைத்தார். கடைசியாக தன் அறைக்கு அழைத்துச் சென்றார். ''இது தான் என் அறை, கிருஷ்ணன் சார். இந்தப் பக்கம்...'' என்று அந்த மறைப்பின் பக்கம் அழைத்துப் போய், ''இவள் டைப்பிஸ்ட்'' பொதுவான பைல் எல்லாம் இவள் பொறுப்பு'' என்று அந்தப் பெண்ணிற்கு அறிமுகம் செய்தார்.

பிறகு மறுபடியும் அழைத்துப் போய் ''இவள் சத்யா மாதவன். முக்கியமான பைல்கள் இவள் பொறுப்பு. சத்யாம்மா, இவர்தான் மிஸ்டர் கிருஷ்ணன்...'' எனுமுன் டெலிபோன் மணி அடித்தது. ''இதோ வருகிறேன் சார்'' என்று தம் மேசைக்குச் சென்றார்.

சத்யாவின் நீண்ட விழிகள் அகன்று அந்தக் கிருஷ்ணன் முகத்தில் நிலைத்தன. முகம் ரத்தப்பசையிழந்து வெளுத்தது. இவன்... இவன் பெயர் கிருஷ்ணன் அல்லவே?

## 19

சத்யாவின் விழிகள் திகைப்புடன் புதிய அதிகாரியின் முகத்தில் நிலைத்தன.

ஆனால், அவனோ சலனமற்று அவளைப் பார்த்தான்.

அதற்குள் திருமாறன் மீண்டும் வந்தார். "நீங்கள் வந்தாயிற்றா என்று முதலாளி விசாரித்தார். அரைமணி நேரம் கழித்து போன் பண்ணுவீர்களாம்" என்றார். பிறகு சத்யாவிடம், "சத்யாம்மா, நேற்று உன் பேனாவைக் கடன் வாங்கினேனே. கொடுக்க மறந்தே போனேன் இந்தா" என்று நீட்டினார்.

சத்யாவின் நடுங்கிய விரல்களிலிருந்து பேனா நழுவியது.

அவன் புதிய அதிகாரி—சட்டென குனிந்து பேனாவைப் பிடித்தான். "கலக்கத்திற்கு அவசியம் இல்லை" என்று அவள் கையில் பேனாவை வைத்துவிட்டு அங்கிருந்து அகன்றான்.

கால்கள் தொய்ந்தாற் போல நாற்காலியில் தொப்பென அமர்ந்தாள் சத்யா. மாதவனா? கிருஷ்ணனா? இருவரும் ஒருவரா அல்லது ஒருவரைப் போல் இருவரா?

இடைவேளை முடிந்தபின் பதிய அதிகாரியிடமிருந்து மூடிய கவரில் திருமாறனுக்கு ஒரு சீட்டு வந்தது.

நம்பிக்கைக்கு உரிய ஒரு டைப்பிஸ்டு தனக்குத் தேவைப்படுவதாகவும், சத்யாவை அதற்காக தன்னிடம் அனுப்ப முடியுமா என்று கேட்டு எழுதியிருந்தான்.

திருமாறன் உடனே போனை எடுத்தார். கிருஷ்ணனிடம், "சார் அந்தப் பெண் சத்யா வந்து... சார், அதன் விஷயம் முதலாளி



சொன்னாரா? அவள்..." என்று சொல்லுமுன் அவன் இடைமறித்தான்.

"எல்லாம் எனக்குத் தெரியும், மிஸ்டர் திருமாறன், அதனால்தான் டெலிபோனில் பேசாமல் சீட்டு அனுப்பினேன். மேலும் முதலாளியின் சம்மதமும் கேட்டு விட்டேன். நீங்கள்அவளிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு அவளை அனுப்பி வையுங்கள்" என்று டெலிபோனை வைத்து விட்டான்.

திருமாறன் பெருமூச்சு விட்டார். "பெரிய அதிகாரி பட்டென்று வைத்துவிட்டார்" என்று எண்ணியபடி சத்யாவை அழைத்தார். விவரத்தைச் சொன்னார்.

சத்யா குனிந்த தலையுடன் சிலையாக நின்றாள்.

"சத்யாம்மா. ப்ளீஸ்..." என்றார் திருமாறன்.

தலை நிமிராமலேயே, "சரி சார்" என்றாள் சத்யா.

சத்யா மெல்ல நடந்தாள்; நெஞ்சு படபடத்தது. கதவைத் தட்டி அனுமதி பெற்றுக் கொண்டு உள்ளே சென்றாள்.

"வந்துவிட்டாயா? நல்லது அதோ பார். கண்ணாடித் தடுப்புக்கு அந்தப் பக்கம் உனக்கு மேசை. சில கடிதங்கள் எழுதி வைத்திருக்கிறேன். டைப் செய்ய வேண்டும். எழுத்து புரியவில்லையானால் கேட்டுக் கொள்" என்று சொல்லி விட்டு அவன் தன் கையிலிருந்த பைலில் மூழ்கினான்.

அவனை வெறித்துப் பார்த்துவிட்டு, அவன் சொன்ன இடத்தில் அமர்ந்து கடிதங்களை எடுத்தாள். கையெழுத்து மாதவனுடையது தான். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னும் அவளுக்கு அடையாளம் புரிந்தது. ஆனால் கிருஷ்ணன் என்றான் எப்படி? மனதில் அலை மோதிய குழப்பங்களை ஒதுக்கிவிட்டு வேலையைத் தொடங்கினாள் சத்யா.

வேலை முடிந்து அவள் கிளம்புகையில், 'ஒரு நிமிடம்' என்றான் அவன்.

உதட்டைக் கடித்துக் கொண்டு அசையாமல் நின்றாள் சத்யா.

தன் இருக்கையிலிருந்து எழுந்து அவள் எதிரே வந்து நின்றான் அவன். குனிந்திருந்த முகத்தையே பார்த்தபடி ''குழந்தை நலமா?'' என்று தணிந்த குரலில் வினவினான்.

அவன் தான்? தலை நிமிராமலேயே தலையாட்டினாள் சத்யா. பேச முடியாமல் தொண்டையை ஏதோ அடைத்தது. கண்ணில் ஒரு கேள்வியுடன் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் குனிந்தாள்.

'புரிகிறது' என்றான் அவன். ''மாதவன், கிருஷ்ணன் ஆனது எப்படி என்று தோன்றுகிறதா? என் பெயர் ரொம்ப நீளம். மாதவ மதுசூதன கிருஷ்ணன். காஞ்சியை விட்டு வெளியேறிய பிறகு கிருஷ்ணன்...வேறு...வேறு ஏதேனும் தெரிய வேண்டுமா?''

''இல்லை'' என்பது போல தலையசைத்தாள் சத்யா.

குரலில் ஒரு நிராசையுடன், ''ஒன்றுமே இல்லையா?'' என்று கேட்டான் மாதவன்.

மீண்டும் தலையசைத்துவிட்டு, ''நான்...நான் போக வேண்டும்'' என்றாள் அவள்.

அவளது பாதையில் தான் குறுக்கே நிற்பதை அப்போது தான் உணர்ந்தவனாக, ''சாரி'' என்று வழி விலகினான் மாதவன்.

கீழே வாயிலில் காருடன் சத்யாவுக்காகக் காத்திருந்தான் மதன்.

சத்யா கண்ணுக்கு மறைந்ததும் சன்னல் அருகே சென்று வெளிவாயிலைக் கவனித்த மாதவன் மதனுடைய காரில் சத்யா ஏறுவதைக் கண்டான்.



சில தினங்கள் தன் போக்கில் சென்றன.

அன்று நடந்தபடியே ஒரு ''ஸ்டேட்மென்ட் டிக்டேட்'' செய்து கொண்டிருந்த மாதவன், சன்னல் அருகே சென்றதும் வாக்கியத்தை இடையில் நிறுத்தினான். திரும்பி, ''வாசலில் காருடன் அடிக்கடி காத்திருக்கிறானே, யார் அது'' என்றான் ஒருமாதிரி குரலில்.

''மதன் அத்தான்'' என்று தடுமாறினாள் சத்யா, ''ஏன் வீடு செல்ல உனக்கு வழி தெரியாதோ? அல்லது அவனுக்குத்தான் வேறு வேலை கிடையாதோ? இன்று வேலை முடிய நேரமாகும் என்று அனுப்பிவிட்டு வா'' என்றான் அவன் அதிகாரமாக.

''நான்...''

''வேலை இருக்கிறது. சீக்கிரம்'' என்றான் அவன் சுருக்கமாக.

என்ன உரிமையில் இந்த அதிகாரம்! பழைய கால நினைவா? என்று மனம் கேட்ட போதும் அதை வாயால் வெளியிடத் தைரியம் இல்லாமல் எழுந்து சென்று மதனை அனுப்பிவிட்டு வந்தாள் சத்யா.

அவள் திரும்பி வந்து அமர்ந்ததும் அவள் எதிரே வந்து மேசையில் இரு கைகளையும் ஊன்றி அவள்முகத்தைக் கூர்ந்து பார்த்து, ''ஏதேதோ நிறையக் கேள்விப்பட்டேனே உண்மையா?'' என்று வினவினான் அவன்.

டைப்ரைட்டரை வெறித்தபடி பேசாதிருந்தாள் சத்யா.

அன்று சித்ராவுக்கு ஒரே எரிச்சலாக வந்தது. சமூக சேவை வகுப்பு முடிந்து திரும்பும் சமயம் சேரிப் பெண் ஒருத்தி இடுப்புவலி என்றாள். எட்டாவதாம், கண்ணராவி அவளைக் கொண்டு மருத்துவமனையில் சேர்த்து விட்டுத் திரும்பி வந்தபோது, ஆள் நடமாட்டம் இல்லாத இந்தப் பகுதியில் வந்து கார் நின்றுவிட்டது. அவளால் இயன்ற அளவு முயன்று பார்த்தும் அசையவில்லை.

அப்போது, அவள் அருகில் ஒரு கார் வந்து நின்றது. ''நான் உதவி செய்யலாமா?'' என்று ஆங்கிலத்தில் ஒரு குரல் கேட்கவும் திரும்பி பார்த்த சித்ரா திகைத்துப் போனாள். ''நீங்...நீங்களா?'' என்றாள் பிரமித்துப் போய், ''நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்?''

''ஏன் சென்னைக்கு நான் வரக்கூடாது என்று ஏதேனும் சட்டம் இருக்கிறதா?'' என்று ஏளனமாகக் கேட்டான். ''அப்படிச் சொல்லவில்லையே.'' ''நல்ல வேளை பிழைத்தேன். ஏங்க அப்படி ஏதேனும் சட்டம் இருக்கிறதா மீறி வந்துவிட்டேனா என்று பயந்து போனேன்.'' என்று லேசாக மட்டம் தட்டியபடி தன் காரை விட்டு இறங்கிய மாதவன்; ''என்ன தகராறு?'' என்று காரின் பாட்டரி வயர்களைச் ''செக்'' பண்ணினான்.'' ''ஊகூம் உன் கார் இப்போதைக்கு கிளம்பாது... என்றவள் தன் காரைக் காட்டி, ''இதில் ஏறிக் கொள். வேண்டிய இடத்தில் உன்னை இறக்கிவிட்டு விடுகிறேன்'' என்றான்.

ஒரு விநாடி சித்ரா யோசித்தாள்.

சத்யா சற்று மாறி வருகிற நேரத்தில் பூஜை வேளைக் கரடி மாதிரி வந்து நிற்கிறானே. சுற்றி வளைப்பதை விட இவனிடமே நேரில் வேண்டிக் கொண்டால்?

அவன் சொன்னபடி செய்தாள் சித்ரா. அவள் காரைப் பூட்டிவிட்டு வந்து அமர்ந்ததும் தன் காரைக் கிளப்பினான் மாதவன்.

முதலில் பொதுப்படையாகப் பேச்சைத் துவங்க எண்ணி, ''இது உங்கள் காரா?'' என்று வினவினாள் சித்ரா.

''ஏன் இவனுக்கெல்லாம் கார் ஒரு கேடா என்று இருக்கிறதா?'' என்றான் வெடுக்கென்று.

சித்ரா அயர்ந்து போனாள். எதற்கும் இப்படி எதிர் கொட்டுகிறவனிடம் என்ன பேசுவது? பாவம் உரக்கப் பேசி



அறியாத சத்யா இவனிடம் என்ன பாடுபட்டாளோ என்று வருந்தினாள்.

சில வினாடிகள் ஏதோ நினைத்தவனாகச் சற்று தணிந்த குரலில், ''இது கம்பெனி கார். ஆனால் முழுக்க என் கையிலேயே கொடுத்திருக்கிறார்கள்'' என்றான் அவன்.

மீண்டும் ஒரு அமைதிக்குப் பின் சித்ரா.

''வந்து...வந்து...மிஸ்டர்'' அவனை அழைக்கும் வகை அறியாமல் தடுமாறினாள் சித்ரா.

மிஸ்டர் என்று அன்னியமாக அழைக்கவும் முடியவில்லை; அத்தான் என்று உறவு கொண்டாடவும் பிரியமில்லை.

புரிந்தவன் போல லேசாகச் சிரித்தான் அவன். ''பிடிக்கிறதோ இல்லையோ, உன் அக்காவின் கணவன் தானே அந்த முறையிலேயே கூப்பிடு.''

''வந்து அத்தான். நான் வந்து உங்கள் சொந்த விஷயத்தில் குறுக்கிடுகிறேன் என்று எண்ணாதீர்கள். நான் என் சகோதரிக்காகப் பேசுகிறேன். தயவு பண்ணி இனியும் அவள் வாழ்வில் நீங்கள் குறுக்கிடாதீர்கள்'' என்று வினயமாக கேட்டாள்.

''ஏன்? நீ குறுக்கிடப் போகிறாயா?'' என்றான் அவன் குரலில் பேதமின்றி.

''அவள் அவள் இப்போதுதான் மீளத் தொடங்கி இருக்கிறாள் அவளுக்கு...வேறு திருமணம் செய்யலாம் என்று இருக்கிறோம்.''

''அவள் இன்னமும் என் மனைவிதான் என்பதாக எனக்கு ஞாபகம்.''

''அவளைச் சித்தம் சிதறிப் போகும் அளவுக்குக் கொடுமை செய்து விட்டீர்கள். இந்தனை ஆண்டுகள் அரும்பாடுபட்டு

அவளைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தோம். இந்த சமயத்தில் வந்து ''என் மனைவி'' என்கிறீர்களே. அதற்கு உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது.''

''கொடுமை செய்தேன் என்று சத்யா சொன்னாளா?'' என்றான் அவன் அதுதான் முக்கியம் போல.

''அவள் வாயால் சொல்ல வேண்டுமா? எங்களுக்குக் கண்கள் இல்லையா? இளைத்துக் கறுத்த உடம்பு, காய்ப்புப் பிடித்த முரடாகி விட்ட கைகள், சருமம் வெடித்துப் புண்ணாகிப் போன கால்கள்—இவை சொல்லாததையா சத்யா சொல்லிவிடப் போகிறாள்'' என்று பதிலுக்கு ஆத்திரத்துடன் கேட்டாள் சித்ரா.

''ஒரு நானூறு ரூபாய் சம்பளக்காரனுடைய மனைவியாக இருக்கப் பயிற்சி அளித்தேன்...''

அவன் சொல்லி முடிக்குமுன் சித்ரா குறுக்கிட்டாள். ''சும்மா சொல்லாதீர்கள். எனக்கு ஒன்றுமே தெரியாதது போலப் பேசுகிறீர்களே. நானும் சத்யா என்று நினைத்தீர்களா? நானூறு ரூபாயில் பற்றுத் தேய்க்க, மாவரைக்க இருபது ரூபாயில் ஒரு வேலைக்காரி வைக்கமுடியாதோ? எனக்கு வெளி உலகமும் தெரியும் அத்தான்.''

''நானூறு ரூபாயில் எனக்கு வேறு செலவும் பொறுப்புக்களும் இல்லையா சித்ரா? உனக்கு நான் விளக்கம் கூற வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் கேட்டுக் கொள். நான் அனாதை, என் படிப்புக்கு ஓர் ஆசிரியர் பெரும் உதவி செய்தார். வேலை பார்க்கத் தொடங்கியதும் என் போல ஓர் அனாதையின் உணவுக்கும் படிப்புக்கும் உதவ வேண்டும் என்று உறுதி கொண்டிருந்தேன். அதற்கு எவ்வளவு செலவு ஆகக்கூடும் என்று நினைக்கிறாய்?''

''ஓ?'' என்று திகைத்தாள் சித்ரா.



''ஆமாம், 'ஓ!' தான். ஏழைகளிடம் நல்லது இருக்கக் கூடும் என்று நீங்கள் எண்ணுவதே இல்லை. ஒட்டு மொத்தமாய் எல்லாம் மோசம் என்று தீர்ப்புச் சொல்லி விடுவது'' என்றான் மாதவன்.

ஒரு கணம் தலை குனிந்தாலும் உடனேயே நிமிர்ந்து, ''நீங்கள் மட்டும் என்னவாம்? ஒட்டு மொத்தமாய்ப் பணக்காரர்கள் எல்லோருமே மோசம் என்று சொல்லிவிட வில்லையா? அல்லது சத்யாவை அந்தப் பாடுபடுத்துவீர்களா?'' என்று பதிலுக்குக் கேட்டாள்.

சற்று நேரம் மாதவன் எதுவும் பேசவில்லை. பிறகு ''மறு திருமணம் செய்ய உன் அக்காவுக்கு சம்மதம்தானா'' என்று வினவினான்.

''அக்காவை சம்மதிக்க வைப்பது என் பொறுப்பு.''

''அப்படியானால் இன்னமும் அவள் சம்மதிக்க வில்லை?''

''சம்மதித்து விடுவாள்,''

''ஒரு குழந்தையுடன் அவளை மணக்க யார் முன் வருவார்?''

''எங்கள் அத்தான் மதன்.''

''திடுக்கிட்டுத் திரும்பினான் மாதவன்.

## 20

ஒரு குலுக்கலுடன் காரை நிறுத்தினான் மாதவன்.

''ஓகோ அதனால்தான் தினமும்மாலையில் காப்டன் தவம் கிடக்கிறானோ. சத்யாவுக்காக உன் அப்பா எத்தனை லட்சம் கொடுப்பதாகச் சொன்னார்?'' என்றான் இகழ்ச்சியாக.

தன்னை மறந்த சினத்துடன் சித்ரா பேசினாள். "என் மதன் அப்படிப்பட்டவர் அல்ல. பணத்துக்காக மணக்கும் தேவையும் அவருக்கு இல்லை. அவரே பணக்காரர். நல்லவரும் கூட, உங்களிடம் கூட மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று காத்திருப்பவர். தன் விளையாட்டு புத்தியால் ஏற்பட்ட விபரீதத்துக்குப் பிராயசித்தம் என்று தன் காதலைத் தியாகம் செய்து சத்யாவை மணக்க முன் வந்தவர்..." என்றவள் சட்டெனப் பேச்சை நிறுத்தினாள்.

அவளையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த மாதவன் சிரித்தான்.

"சரி, சித்ரா, அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?" என்று அவன் அமைதியாகக் கேட்டான்.

அவளுக்கு ஒரே ஆச்சரியமாகி விட்டது. வியப்புடன் அவனைப் பார்த்தபடி, "தயவு பண்ணி கொஞ்ச காலம் அக்கா கண்ணில் படாமல் இருங்கள்" என்று வினயமாகக் கேட்டுக் கொண்டாள்.

அவன் உரக்க நகைத்தான்.

"இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது" என்று எரிச்சலுடன் கேட்டாள் சித்ரா.

"நிறைய" என்றான் அவன்.

சித்ரா புரியாமல் விழித்தாள்.

"இந்த ஒரு மாத காலமாக வாரத்தில் ஆறு நாட்கள் உன், அக்காவின் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்கிறேன்" என்றான் மாதவன் அலட்சியமாக.

"என்ன!" என்றாள் சித்ரா அதிர்ச்சியுற்று. "அப்படியானால் அக்காவின் புதிய..."



"புரிந்து கொண்டாயே. கெட்டிக்காரிதான். உன் அக்கா என் கீழ்தான் வேலை பார்க்கிறாள். என் முழுப் பெயர் மாதவ மதுசூதன கிருஷ்ணன் என்றால் நன்றாகப் புரிந்துவிடும் என்று நினைக்கிறேன் சரிதானா!"

"ஆனால்... ஆனால் சத்யா ஒன்றுமே சொல்லவில்லையே" என்று ஒரேயடியாகக் குழம்பினாள் சித்ரா.

"ஏன் சொல்லவில்லை என்பதை—நீதான் மகாபுத்திசாலி ஆயிற்றே—கண்டுபிடியேன்" என்று மீண்டும் கிண்டலாகப் பதில் சொல்லிக் கொண்டு காரை ஓட்டத் தொடங்கினான் மாதவன்.

சித்ரா பேச்சிழந்தாள்.

மாதவன் காரை நிறுத்தி, "முனை திரும்பினால் மூன்றாவது உங்கள் வீடு. போய்க் கொள்வாய் அல்லவா?" என்று இறக்கி விட்டான். போகும் போது ஒன்றைச் சொன்னான்; "ஒன்றை மட்டும் கேட்டு விட்டுப் போ சித்ரா, சத்யாவின் மகிழ்ச்சி உன்னைப் போலவே எனக்கும் முக்கியம். அவளாக விவாகரத்து கோரினால் நான் மறுக்க மாட்டேன். ஆனால் நீயோ உன் தந்தையோ அவளை துன்புறுத்தியதாகத் தெரிந்தால் அப்புறம் உன் எண்ணம் ஒருநாளும் நிறைவேறாது" என்றான். "நானாகவும் அவளிடம் எதையும் வற்புறுத்தி கேட்க மாட்டேன்."

"ந...நன்றி" என்று தடுமாறி விட்டு வீட்டை நோக்கி நடந்தாள் சித்ரா.

அன்றிலிருந்து தன் சகோதரியை கூர்ந்து கவனிக்கத் தொடங்கினாள்.

சத்யாவிடம் முன்பு கண்ட மாற்றங்கள் இப்போது இன்னொரு விதமாகத் தெரிந்தன. மதனுடன் வெளியே போவதை வெகுவாகக் குறைத்து விட்டாள். மகனுடன் அதிக நேரம் கழித்தாள். முடிந்தவரை

தனித்திருக்க முயற்சி செய்தாள். தந்தையிடம் ஒட்டி ஒட்டி அமர்ந்தாள்.

அன்று மாலையில் பெய்த மழை மாதவனுக்கு ஓர் வாய்ப்பை நல்கியது.

ஏதோ முக்கிய விஷயமாக முதலாளி பரசுராமுடன் ஆலோசனையில் ஈடுபட்டிருந்த மாதவன் மாலையில்தான் தன் அறைக்கே வந்தான். அதன் பின் ஐந்து மணி வரையில் சத்யாவுக்கு மூச்சு விட நேரம் இல்லாமல் வேலை கொடுத்தான்.

அப்போது கீழே கார் சத்தம் கேட்கவும், ''உன் அத்தான்; வேலை இருக்கிறது என்று அவனை அனுப்பிவிட்டு வா'' என்றான்.

வானத்தைப் பார்த்துவிட்டு தயங்கி நின்றாள் சத்யா.

''சீக்கிரம் வா, சத்யா. இந்தக் கடிதங்களை எல்லாம் இன்று முடித்தாக வேண்டும்'' என்றான் மாதவன் பொறுமை இழந்து.

சத்யா மேலும் தயங்கி நிற்கவே காரணத்தை ஊகித்தவனாக ''சரி சரி. போய்க்கொள். நானே டைப் செய்து விடுகிறேன்'' என்றான் சற்று இறங்கிய குரலில்

சத்யாவுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. ''இல்லை நானே செய்கிறேன்.'' என்று மதனிடம் விஷயத்தைச் சொல்லி அனுப்பினாள். இடியும் மின்னலும் தொடர்ந்தன.

தன் வேலைகளை முடித்துவிட்டுக் கடிதங்களுக்காகக் காத்திருந்தான் மாதவன். அவனது கண்கள் சத்யாவிடமே நிலைத்தன.

ஒவ்வொரு இடி மின்னலுக்கு அவள் மேனி அதிர்வதையும் முகம் வெளுப்பதையும் பார்த்தபடி செயலற்று அமர்ந்திருந்தான் இவன்.



ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக ஓர் இடி மழை இரவு நினைவு வந்தது. பரிட்சைக்காக அவன் படித்துக் கொண்டு இருந்தபோது தயங்கித் தயங்கி அவன் அருகில் வந்து ''உங்களைத் தொட்டுக் கொண்டு இருக்கிறேனே'' என்று அவள் கெஞ்சியது நினைவு வந்தது. அன்று அவளைக் கேலி செய்து விரட்டியதை நினைக்கையில் நெஞ்சில் வலித்தது.

டைப்ரைட்டரை மூடிவிட்டு சத்யா கடிதங்களுடன் வந்தாள். அவன் சரிபார்த்துக் கையெழுத்திடவும் ஒவ்வொன்றாக அதற்குள் உறையில் இட்டு ஒட்டினாள். மறுநாள் டெஸ்பாட்ச்சுக்கு செல்லும் ''டிரே''யில் வைத்துவிட்டுக் கிளம்பினாள்.

அவனும் மேசையைப் பூட்டிவிட்டு எழுந்தான்.

மின்னல் ஒன்று கண்ணைப் பறித்தது. தொடர்ந்தது பெரிய இடி. அவள் முகத்தைப் பார்த்துவிட்டு ''என்னுடன் வருகிறாயா?'' என்று வினவினான் மாதவன்.

அவள் இடியால் அதிர்ந்தாளோ? அவனது கேள்வியால் அதிர்ந்தாளோ? ''வே... வேண்டாம்'' என்றாள் நடுக்கத்துடன்.

''இந்த மழையில் எப்படிப் போவாய், சத்யா? நானே கொண்டு விட்டு விடுகிறேன்.''

''இ... இல்லை வேண்டாம்...'' என்றாள் அவள் தலை நிமிராமல்.''

''சத்யா...''

கைப்பையை எடுத்துக்கொண்டு நிமிராமலேயே வெளியேறினாள் சத்யா.

வழக்கம்போல அவள் சென்றதும் எழுந்து சென்று சன்னல் அருகில் நின்று வெளியே பார்த்தான் மாதவன், ''இன்னமும் ஏன் சத்யா வெளியே வரவில்லை?''

உலகைக் குருடாக்கும் மின்னலை அடுத்து, காதைச் செவிடாக்கும் இடி முழங்கவும் சட்டென திரும்பி வேகமாகக் கீழே இறங்கிப் போனான் மாதவன்.

அங்கே அவன் நினைத்தது போலவே மாடிப்படியின் கீழ்ப்படியருகில் நடுங்கியபடி சுவரில் முகம் புதைத்து நின்றாள் சத்யா. இரண்டே எட்டில் அவளை அடைந்து அவளைத் தன்புறம் திருப்பி இறுக அணைத்துக் கொண்டான்.

மத்தளம் போல இடி முழங்க முழங்க அவள் அவனுள்ளேயே புதைந்து விடுபவள் போல ஒண்டினாள்.

மழை வேகம் சற்றுக் குறையவும், ''சத்யா'' என்று மெல்ல அழைத்தான் மாதவன்.

அவள் இன்னும் ஆழமாக அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

அவன் மெல்ல மெல்ல அவள் கூந்தலை வருடினான். விரல்கள் மெல்லக் கழுத்தில் இறங்கித் தோளைப் பற்றின. ''சத்யா?'' என்று தாபத்துடன் அவளை அழைத்தான்.

குரல் விரல்களின் பேதம் புரிந்துவிட்ட போதிலும் சத்யா விலகவில்லை. விலகத் தோன்றவும் இல்லை. அவனது அழுத்தமான உதடுகள் அவளது பட்டான நெற்றியில் அழுந்தி மிருதுவான கன்னத்தில் புதைந்து மலர் இதழ்களை மூடியபோதும் அவள் விலகவில்லை.

இந்த நிலை எவ்வளவு நேரம் நீடித்ததோ அதை இருவரும் அறியார்கள். ''என்ன என்ன'' என்ற வாட்ச்மேன் குரல் கேட்கவும் சிறு சிரிப்புடன் மனைவியை விடுதலை செய்தான் மாதவன். சரிந்து கிடந்த முந்தானையை எடுத்து மூடிவிட்டான். ''வா சத்யா, போகலாம்'' என்று அவள் தோளை அணைத்தபடியே சென்று காரில் ஏற்றினான்.



வியப்புடன் வாயைப் பிளந்து கொண்டு நின்றான் வாட்ச்மேன்.

சத்யாவை அமர்த்திவிட்டு மறுபுறம் காரில் ஏறினான் மாதவன். இதழ்களில் முறுவலுடன் அவள் கையைப் பற்றி ஒருமுறை அழுத்திவிட்டுக் காரை ஓட்டலானான். ''நேரே நம் வீட்டுக்கே போய் விடலாம் சத்யா, அங்கிருந்து உன் அப்பாவுக்கு டெலிபோன் செய்து விடலாம்...ம்?'' என்றான்.

சத்யாவின் நெஞ்சு படபடத்தது. ''வேண்டாம்'' என்றாள் குரல் நடுங்க.

''ஏன்? உன் அப்பா வீட்டில் சொல்லிவிட்டுத்தான் நம் வீட்டுக்குப் போக வேண்டுமா?'' என்றான் மாதவன்.

''ஊகூம். வேண்டாம்.''

''என்ன வேண்டாம்?''

''நான்... நான் என்னை அப்பா வீட்டிலேயே விட்டு விடுங்கள்'' என்றாள் சத்யா.

''நான் உங்கள் வீட்டுக்கு வரமாட்டேன்'' என்றாள் அழுத்தமாக.

''சத்யா!'' சட்டென பிரேக்கை அழுத்திக் காரை ஓர் ஓரமாக நிறுத்தினான் மாதவன்.

''சத்யா, இன்னமும் என் மேல் கோபமா? அல்லது பயமா? நான் பழைய மாதவன் அல்ல, சத்யா; முன்னைப் போல நீ வேலை செய்யத் தேவை இல்லை. உன்னை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள என்னால் முடியும் சத்யா.''

வேலைகளுக்கு நான் அஞ்சவில்லை என்று நினைத்தாள் சத்யா. ஆனால் அவன் கூறிய வார்த்தைகள், அவள் நெஞ்சில் ரத்தம் வடிய வைத்த பேச்சுக்கள், ''சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்வதில்லை'' என்ற ஆங்கிலப் பழமொழி நினைவுக்கு வந்தது.

இயற்கை குணம் எப்படி மாறும்? ஒருமுறை பட்ட துன்பம் போதாதா?

''எனக்கு மகிழ்ச்சி வேண்டாம்'' என்றாள் சத்யா சிறு குழந்தைப் போல.

''என்ன சத்யா அது? இப்போதுதானே அலுவலகத்தில்...''

சத்யா இரு காதுகளையும் பொத்திக் கொண்டாள். ''வேண்டாம். எனக்கு மகிழ்ச்சியே வேண்டாம். மணவாழ்வு வேண்டாம். நிம்மதி வேண்டும். நிம்மதி மட்டும் தான் வேண்டும். அது உங்களிடம் கிடையாது. என்னை அப்பா வீட்டில் விட்டுவிடுங்கள், அங்கேதான் நிம்மதி'' விம்மி அழுதாள், சத்யா.

மாதவன் அதற்கு மேல் ஒன்றுமே பேசவில்லை.

கார் வெறி கொண்டு சீறிப் பாய்ந்தது.

செல்வரத்தினத்தின் வீட்டுமுன் காரைக் கொண்டு போய் நிறுத்தினான். ''போ, நிம்மதியோடு போ. நானும் போகிறேன். முடிந்த அளவு விரைவில் உன் வாழ்வை விட்டு ஒரேயடியாகப் போய்விடுகிறேன்'' என்று சொல்லி முடிக்கு முன் கார் மீண்டும் சீறிப் பாய்ந்தது.

கண்ணீரினூடே நிமிர்ந்து பார்க்க முயன்றாள் சத்யா.

அதற்குள் மூன்றாம் வீடு தாண்டி தெரு முனையில் கார் திரும்பியது. எதிரே ஒரு மாடு கன்றுடன் வர அவன் ஒடித்துத் திருப்பிய வேகத்தில் கார் சாலை ஓரமாக நின்ற பெரிய மரத்தின் மீது பயங்கர சத்தத்துடன் மோதி நின்றது.

கண் முன்னே நடந்துவிட்ட விபத்தைக் கண்டு ''அய்யோ'' எனக் கதறியபடி காரை நோக்கி ஓடினாள் சத்யா.



''சத்யா டெலிபோனும் பண்ணவில்லை. இன்னமும் வரவும் இல்லையே'' எட்டிப் பார்க்க வந்த செல்வரத்தினம் மகள் அலறிக் கொண்டு ஓடுவதைக் கண்டு பின் தொடர்ந்தார். மதனும் ஓடினான்.

காரின் முன்புறம் மரத்தில் மோதிய வேகத்தில் நொறுங்கிப் போயிருந்தது. உள்ளே இரத்த வெள்ளத்தில் ''ஸ்டியரிங் வீல்'' மேல் கவிழ்ந்து கிடந்தான் மாதவன்.

''அத்தான்'' என்ற கதறலுடன் காரின் கதவைத் திறக்க முயன்றாள் சத்யா. எப்படியோ ''ஜாம்'' ஆகிப் போயிருந்த கதவு திறக்க வரவில்லை. பதட்டத்தில் உடைந்திருந்த கண்ணாடி வழியே கையை விட்டுக் கதவைத் திறக்க முயன்றதில் அவள் கையையும் கண்ணாடி கிழித்தது.

அதற்குள், ''சத்யா கையை எடு'' என்று அவள் கையை மெல்ல வெளியே எடுத்துவிட்டு கார் கதவை பலமாக இழுத்துத் திறந்தான் மதன்.

''சத்யா கண்ணா, என்னடா?'' என்ற தந்தையிடம்,

''அவரைப் பாருங்களேன் அப்பா'' என்று பதறினாள் மகள்.

''யார்?'' என்று அவள் அருகில் வரவும், மதன் மயங்கிக் கிடந்தவனை மெல்ல நிமிர்த்தினான்.

மாதவனைக் காணவும் இருவருமே அதிர்ந்து போயினர். ஆனால் திகைத்து நிற்க இது நேரமில்லையே. செல்வரத்தினமும் மதனுமாக மெதுவாக மாதவனைத் தூக்கி மதனுடைய காரில் கிடத்தினார்கள். சத்யாவும் செல்வரத்தினமும் உடன் வர மதன் காரை மருத்துவமனைக்குச் செலுத்தினான்.

மாதவனுக்கு எல்லாம் வெளிக் காயங்கள் தானே தவிர எலும்பு முறிவோ தசைச் சிதைவோ உள் பாதிப்போ இல்லை என்றார் டாக்டர் சபேசன்.

நல்ல ஆரோக்கியமான உடலை உடையவன் என்பதால் காயங்களும் விரைவிலேயே குணமாயின.

சத்யா இருவேளைகளிலும் மருத்துவமனைக்குச் சென்று வந்தாள். வீட்டிலிருந்து உணவு எடுத்துச் சென்றாள். ஆனால் ''வந்தாயா, வா. போகிறாயா சரி'' என்பது போன்ற பேச்சுக்கள் தவிர மாதவன் சத்யாவிடம் எதுவுமே பேசுவது இல்லை. அவளும் வேறு எதுவும் பேசவில்லை.

ஒருநாள் மட்டும் ''வேலைக்குப் போகவில்லையா?'' என்று மாதவன் கேட்டான். ''இல்லை'' என்று ஒரே வார்த்தையில் பதில் அளித்தபின் வேறு எதுவும் அவன் கேட்கவில்லை.

மதன், சித்ரா, விஜயா, செல்வரத்தினம், பரசுராம் எல்லோருமே ஆளுக்கு ஒருவித உணர்ச்சியுடன் பின்னணியில் ஒதுங்கினர். இந்த நாடகத்தின் முடிவை நோக்கி காத்திருந்தனர்.

சற்று குணமானபின் ஆபீஸ் பைல்களை மருத்துவமனைக்கு வரவழைத்துப் பார்க்கத் தொடங்கினான் மாதவன்.

பரசுராம் தானே மாதவனுக்குத் தேவையானதைச் செய்தார். அடிக்கடி வந்து பார்த்தார். தயக்கத்துடன் அது பற்றிப் பேசிய செல்வரத்தினத்திடம், ''இருக்கட்டும் செல்வம். அவன் ஒரு கெட்டிக்காரப் பையன். கிட்டத்தட்ட ஒரு பிள்ளையைப் போல எனக்கு. உன் உறவு முறையை எல்லாம் அவர்கள் இருவருமாக முடிவு செய்யட்டும். பிறகு பார்க்கலாம். அதுவரை எல்லாம் நானே பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்று முடித்துவிட்டார்.

திடீரென்று ஒருநாள், ''நாளையிலிருந்து நீ என்னைப் பார்க்க இங்கே வர வேண்டாம்'' என்று சத்யாவிடம் கூறினான் மாதவன்.



# 21

**ச**த்யா திகைத்தாள்.

''ஏன்?''

கையிலிருந்த பிளாஸ்கை வருடியபடி, ''நாளைக் காலையில் நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்றான் அவன் உணர்ச்சியற்ற குரலில். பிறகு மீண்டும் அவனே பேச்சைத் தொடங்கி, ''நாளை மறுநாளில் இருந்து அலுவலகத்திற்கும் செல்லப் போகிறேன்?'' என்றான்.

சத்யா திணறினாள். வீட்டிற்கு வா என்று அவளிடம் அவன் சொல்லவில்லையே. முன்பு அழைத்தபோது அவள் ஏற்கவில்லைதான். ஆனால் இப்போது அவனாக விலகும்போது அவளுக்கு வேதனை உண்டாயிற்று.

''இன்னொரு விஷயம்'' என்று மீண்டும் தொடர்ந்தான் அவன். ''இதற்குள் அலுவலகத்தில் எல்லோருக்கும் விஷயம் பரவியிருக்கும். அதனால் நீ அந்த வேலையை விட்டு விடுவது நல்லது...உங்களுக்குத்தான் வேலை பார்த்து சம்பாதித்துதான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லையே. அப்படி வேலை வேண்டும் என்றால் வேறு ஒரு வேலை தேடித் தர உன் அப்பாவால் முடியும்'' என்றான்.

அலுவலகத்திலும் சந்திப்பை வெறுக்கிறான் என்பது சத்யாவுக்கு புரிந்தது. ஏன்?

மாதவன் வீடு திரும்பி இரண்டு தினங்கள் சென்றன.

சத்யா தன் அறையிலேயே அடைந்து கிடந்தாள்.

நெருங்கி வந்தவர்களிடம் ''என்னை தனியே விடுங்கள்'' என்றாள்.

அன்று மாலை, செல்வரத்தினம் தொழிற்சாலையிலிருந்து திரும்பி வந்து மாலைச் சிற்றுண்டியை முடித்த பின் ''அப்பா, நான் அங்கே போகிறேன்'' என்றாள்.

விபத்து நடந்த நாளில் இருந்தே எல்லோரும் இதை ஓரளவு எதிர்பார்த்ததுதான். எனவே ''எங்கே'' என்று கேளாமல், ''கட்டாயம் போக வேண்டுமா?'' என்று கேட்டார் செல்வரத்தினம்.

''ஆமாம் அப்பா'' என்றாள் சத்யா, ''அந்த விபத்து நடக்கக் காரணமே நான்தான். அங்கே அவர் தனியே கஷ்டப்படும்போது நான் இங்கே இருப்பது தப்பு போலத் தோன்றுகிறது.''

''ஒரு நர்ஸ் வேண்டுமானால் ஏற்பாடு செய்து விடுவோமே'' என்றார் தந்தை விடாமல்.

''அவராலேயே அது முடியும் அப்பா, அங்கிள் கூட அவருக்குத் தேவைப்படுவதைச் செய்து கொடுப்பார். ஆனால் அப்பா, இப்போது அங்கே இருப்பது, என் கடமை. அதோடு அவர் அனுமதித்தால் அங்கேயே தங்கிவிடுவேன்'' என்றாள் அதே மெல்லிய குரலில் ஆனால், உறுதியோடு.

''மாதவன் அனுமதித்தால்'' என்று சத்யா கூறவும், செல்வரத்தினத்துக்கு ஆத்திரம் வந்தது. ''அனுமதித்தாலா? அது வேறா? அவன் உன்னை அழைக்கவில்லையாக்கும்?'' என்றார் ஏளனமாக.

''இல்லையே அப்பா'' என்றாள் சத்யா வாடிய முகத்துடன். ''விபத்துக்கு முன்பு அவர் அழைத்தபோது நான் மறுத்துவிட்டேன். இனி ஒரு நாளும் அவராக என்னை அழைக்க மாட்டார். அவர் சுயகவுரவம் பார்க்கிறவர். இனி நானாகத்தான் போக வேண்டும் அப்போது கூட அனுமதிப்பாரோ என்னவோ தெரியவில்லை'' என்றாள் கலக்கத்துடன்.



''பின்னே ஏன் போக வேண்டும்? அந்த ராஸ்கலின் காலில் ஏன் விழ வேண்டும்?'' என்று உறுமினார். தந்தை உடனே தன்னை அடக்கிக் குரலைத் தணித்து, ''சத்யாம்மா மதன் நல்ல மாப்பிள்ளை...'' என்று அவர் மேலே தொடருமுன் சத்யா அவசரமாகக் குறுக்கிட்டாள். ''அப்பா வேண்டாம்பா அப்படி எல்லாம் ஒன்றும் சொல்லாதீர்கள்'' என்றாள் கண்கள் நனைய.

''உனக்காகத்தானே சொல்கிறேன் கண்ணம்மா. ஒரு தடவை அந்த முரடனிடம் பட்டது போதாதா? உன்னை அவன் அரை உயிர் ஆக்கிவிட்டானே'' என்று குமுறினார் அவர் அச்சத்துடன். ''இன்னொரு தடவை அவனிடம் சிக்கினால் உன் கதி என்ன... ஆகும் என்று ஒரு தரம் யோசித்துப் பாரம்மா. ஓர் ஆண்டாக மதன் காத்திருக்...''

''சொல்லாதீர்கள் அப்பா வேண்டாம்'' என்று அவசரமாக மறுத்தாள் சத்யா. ''தயவு பண்ணி அந்தப் பேச்சே வேண்டாம் அப்பா. மனசெல்லாம் கூசுகிறது.''

''அவள் சொல்வது சரிதான்'' என்றாள் விஜயா முதல் முதலாக வாயைத் திறந்து.

''என்னது சரி!'' என்று எரிந்து விழுந்தார், செல்வரத்தினம்.

பிறகு மகளிடம் திரும்பி, ''சத்யா கண்ணா, மதன் வேண்டாம் என்றால் விட்டுவிடு, இதுவரை இருந்தது போல இங்கேயே நிம்மதியாக இருந்துவிடேன். மீண்டும் அவனிடம் சென்று வேதனைப்பட வேண்டுமா?'' என்ற நயமாகப் பேசினார்.

அவருக்கு மாதவன் கையில் மீண்டும் சத்யாவை சிக்கவிடப் பயமாக இருந்தது. சூழ்ச்சி செய்து தந்தையையும் மகளையும் பிரித்த

பாவி, பூவான மகளை கசக்கி எறிந்த கயவன், அவன் நிழல் கூட மகள் மீது படலாமா? முடிந்த அளவு தடுத்தார்.

''எவ்வளவு நாள் அவளும் தனி மரமாக நிற்க முடியும்; கணவன் குடும்பம் என்று வாழ வேண்டாமா?'' என்றாள் தாயார்.

''ஒரேயடியாக உளறிக் கொட்டாதே'' இரண்டு நிமிடம் வாழ என் மகள் இருபத்து மணி நேரம் வதைபட வேண்டுமா?'' விஜயாவைக் கடுமையாகக் கடிந்து கொண்டார் செல்வரத்தினம்.

''அப்பா, அம்மா நிறுத்துங்கள்'' என்று குறுக்கிட்டாள்-''மகள் நான்... கணவனும் மனைவியுமாக வாழும் அந்த வாழ்வுக்காக என்று நான் அவரிடம் போகவில்லை. அவர் துணையின்றி வாழ முடியாது என்பதும் இல்லை. குமரனைப் பற்றுக் கோடாகக் கொண்டே இனி என் வாழ்வைக் கழித்துவிட முடியும் ஆனால்...''

''என்னடா கண்ணா?''

''அங்கேதான் எனக்கு உயிர்ப்பு இருக்கும், அப்பா உணர்வு இருக்கும்! சிந்திக்கும் சக்தியிருக்கும்; செயலாற்றும் திறன் இருக்கும். இதையெல்லாம் எனக்குத் தரும் கதிரவன் அவர்தான். அவரைப் பிரிந்ததால் ஒளியிழந்த நிலவு போல நான் உயிர்ப்பிழந்து போனேன். அப்பா அந்த மாதிரி நிலையை இனி என்னால், தாங்க முடியாது. அதனால் என்னை அவரிடம் அனுப்பி வையுங்கள் அப்பா. ப்ளீஸ்...'' என்ற கெஞ்சலுடன் முடித்தாள் சத்யா.

அவள் கெஞ்சிய பிறகு தந்தையால் மறுக்க முடியுமா?

அவசியமான துணி அணிகளுடன் சத்யாவை அழைத்துப் போவது; பிறகு அங்கே உசிதம் போலச் செய்வது என்று முடிவு செய்தார் தகப்பனார். ''அப்போதே போக வேண்டும்'' என்றாள் சத்யா.



''காலையில்'' என்று தள்ளிப் போட முயன்ற தந்தையிடம் ''அலுவலகம் கிளம்பும் போது என்ன தடை நேர்ந்தாலும் அவர் கோபப்படுவார் அப்பா'' என்று அடக்கினாள், மகள். தந்தை வேறு வழியின்றி சம்மதித்தார்.

மகளைப் பிடிவாதமாகச் சாப்பிட வைத்தாள் விஜயா. மாதவனோ தனி ஆள் திடீரென்று இரவில் சாப்பாட்டுக்கு ஆள் போய் நின்றால் அவன் பாவம் என்ன செய்யக்கூடும்?

தட்டில் விழுந்ததைக் கொறித்துவிட்டு எழுந்தாள் சத்யா. ஒதுங்கி நின்று எல்லாவற்றையும் மவுனமாகக் கவனித்துக் கொண்டிருந்த சித்ராவிடம் வந்தாள். தன் கலக்கத்தை மறைத்து புன்னகையுடன் ''இனி மதனைத் தாராளமாக வீட்டிற்கு வந்து போகச் சொல்லடி. அவனைப் பார்க்க முடியாமல் நீயும் உன்னைப் பார்க்க முடியாமல் அவனும் திண்டாட வேண்டாம்'' என்று பேசிச் சிரித்தாள்.

''அக்கா! நீ...நீ... என்ன சொல்லுகிறாய்?''

சத்யா கேலியாகப் பார்த்தாள். ''எல்லாம் எனக்குத் தெரியும் சித்ரா. இந்த ஒரு மாத காலமாக நானும் கவனித்துக் கொண்டு தானே இருக்கிறேன். பெரிய தியாகம் செய்துவிட்டதாக எண்ணமாக்கும்? பைத்தியம், பைத்தியம் எனக்கு மூளை மரத்துப் போயிருந்தால் உங்கள் இருவருக்கும் ஓவராக அதிக வேலை செய்ததாக்கும்?'' என்று அன்பாகக் கடிந்தாள்.

இரவு எட்டு மணி அளவில் சத்யா தாயின் கால்களில் விழுந்து பணிந்தாள். ''நன்றாக இரும்மா'' என்று மகளை எழுப்பி அணைத்து விஜயாவுக்கு பழைய நினைவுகள் தோன்றின. அன்றே இப்படி ஆசீர்வதித்திருந்தால் இந்த இடைப்பட்ட காலத்தில் நேர்ந்த துன்பங்கள் நிகழ்ந்திராதோ? இனியேனும் நலமாக வாழட்டும் என்று எண்ணி இந்தா ''திருச்செந்தூர் விபூதி'' என்று மகளுக்குத் திருநீறு பூசி விட்டார்.

உறங்கும் மகனது கன்னத்தில் முத்தமிட்டு விட்டு சத்யா கிளம்பினாள்.

காரில் செல்கையில் ''கொஞ்சம் கஷ்டப்படுத்தினாலும் தகவல் தெரிவி. கண்ணம்மா, நான் உடனே வந்து உன்னைக் கூட்டி வந்து விடுகிறேன்'' என்றார் தந்தை.

தந்தையைப் பரிவுடன் பார்த்து விட்டுப் ''பார்ப்போமே அப்பா'' என்றாள் மகள். அவர் அதற்குமேல் எதுவும் பேசவில்லை.

கச்சிதமான அந்த சிறு வீட்டின் முன் காரை நிறுத்தி விட்டு அழைப்பு மணியை அழுத்தியபோது அவருக்கே நெஞ்சு படபடத்தது. மகளைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

கதவைத் திறந்த மாதவன் முகத்தில் தோன்றிய வியப்பு வினாடியில் மறைந்தது. நிமிர்ந்த தலையுடன் ''உள்ளே வாருங்கள்'' என்று அழைத்துச் சென்றான். செல்வரத்தினத்தின் கையில் இருந்த சூட்கேசை அவன் கவனித்ததாகவே தெரியவில்லை.

அறைக்குள் சென்றதும், ''உட்காருங்கள். என்ன சாப்பிடு கிறீர்கள்? இரவாகி விட்டால் காபி தருவது சரியில்லை. ஓவல் குடிக்கிறீர்களா? அல்லது வெறும் பாலா?'' என்று வினவினான் மாதவன்.

அடிக்கடி வரும் உறவினரை உபசரிப்பது போல அவன் நடந்து கொள்வதைக் கண்டு செல்வரத்தினம் திகைத்தார். இதை அவர் எதிர்பார்க்கவில்லை. ''ஒன்றும் வேண்டாம். வந்து இப்போது தான் உணவு ஆயிற்று...'' என்று தடுமாறினார்.

''அப்படிச் சொல்லக் கூடாதே'' என்று முறுவலித்தான் மாதவன். வந்த விருந்தாளிகளை வெறும் வயிற்றுடன் அனுப்புவது நம் பழக்கம் இல்லையே'' என்று உட்புறம் திரும்பி, ''கோபி'' என்று குரல் கொடுத்தான். ''இரண்டு விருந்தினர் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டு கப் ஓவல் கொண்டு வா'' என்றான்.



''அந்த விருந்தாளி'' என்ற சொல்லை அவன் அழுத்திய விதம் சத்யாவின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

## 22

**ச**த்யாவையும் விருந்தாளியாக்கி அனுப்பிவிட முடிவு செய்து விட்டானா மாதவன்?

தந்தையும் மகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

குழப்பத்தை மறைத்துக் கொண்டு, ''இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று விசாரித்தார் செல்வரத்தினம். ''நிறைய காயம் பட்டிருந்ததே.''

''காயம் எல்லாம் கிட்டத்தட்ட ஆறிவிட்டது. ஒன்றிரண்டுதான்'' என்று பிளாஸ்ட்ரைத் தொட்டுக்காட்டினான் மாதவன். ''மற்றபடி ஒன்றுமில்லை. அலுவலகம் போகிறேனே'' என்றான். அதற்குள் பையன் ஓவலைக் கொண்டு வந்து வைத்தான்.

ஒரு கப்பை எடுத்து மாமனாரிடம் நீட்டினான். ''சாப்பிடுங்கள், சத்யா நீயும் ஒன்றை எடுத்துக் கொள்'' என்றான்.

மேலே என்ன பேசுவது என்று புரியாமல் செல்வரத்தினம் தவித்தார்.

ஆனால் மாதவன் தானாகவே அவரது தொழில் பற்றிப் பேச்செடுத்தான். அதில் செய்துவரும், அபிவிருத்தி பற்றி அவர் சொல்ல மேலும் விற்பனைக்கு என்னென்ன செய்யலாம் என கூற இருவரும் தொழில் பற்றிய பேச்சில் இறங்கினர்.

ஓவலை முழுவதும் குடிக்க முடியாமல் தவித்துவிட்டு பாதியை மீதம் வைத்துக் கப்பை ட்ரேயில் அவள் வைத்தபோதுதான் சத்யாவைப் பற்றிய கவலை, மீண்டும் செல்வரத்தினத்திற்கு வந்தது.

கடைசியாகத் துணிந்து ''சத்யா இங்கே வந்து உங்கள் வீட்டில் இருக்கப் போவதாகச் சொன்னாள். உங்கள் உடம்பு... அதாவது உங்களுக்கு ஒத்தாசை-உதவியாக இருக்க விரும்புகிறாள்.''

முகமோ குரலோ மாறாதபடி, ''அவள் விருப்பம் போல் செய்யட்டும்'' என்றான் மாதவன்.

அதையே சம்மதமாகக் கொண்டு ''அப்போது நான் கிளம்பட்டுமா?'' என்று எழுந்தார் அவர்.

''செய்யுங்கள்'' என்று தானும் எழுந்து வழியனுப்பினான்.

சத்யா வெளிவாசல் வரையில் தந்தையுடன் சென்றாள். மாதவன் பின் தங்கிவிட்டான். அவனது காது கேளாத தூரம் சென்றபின் ''சத்யா கண்ணா, நீயும் என்னோடு வந்து விடுகிறாயம்மா? அவன்-வந்து அவர் விட்டேற்றியாகப் பேசுவதைப் பார்த்தால் உன்னை இங்கே விட்டுப் போக எனக்கு மனம் வரவில்லையே. நீ வருவதில் மகிழ்ச்சி என்று குறிப்பு காட்டவில்லையே,'' என்று படபடத்தார்.

சத்யாவுக்கும் கலக்கம்தான். காட்டிக் கொள்ளாமல் ''போ என்றும் சொல்லவில்லையே அப்பா. பார்க்கலாம், நீங்கள் தைரியமாகச் செல்லுங்கள்'' என்று அவரை அனுப்பி வைத்தாள்.

அவரது கார் கிளம்பவும் உள்ளே வந்தாள் சத்யா.

அப்போது ''நோயாளிக்கு சேவை செய்வது கடமை என்று நினைவில் வந்திருந்தால்... அதற்கு நீ தேவையில்லை சத்யா'' என்றது மாதவனது குரல் கண்டிப்புடன்.

தலையை அசைத்துவிட்டு உள்ளே வந்தாள் சத்யா.

அவளது பெட்டியைக் குனிந்து எடுத்தான் மாதவன்.

''நானே...'' என்று அருகில் வந்தாள் சத்யா.



''நான் இன்னமும் நோயாளி அல்ல. என்னால் முடியும். வா'' என்று பெட்டியை எடுத்துக்கொண்டு அடுத்த அறைக்குள் சென்றான் மாதவன். அவளும் பின் தொடர்ந்தாள்.

பெரிய அறை படுக்கை அறையிலேயே டிரஸ்ஸிங் டேபிள், பீரோ எல்லாம் இருந்தன. ஒரு புறமாக பாத்ரூம் கதவு சன்னல் அருகில் சிறிய மேசை...

சத்யாவின் பார்வைத் தொடர்ந்தே தன் பார்வையையும் செலுத்திக் கொண்டிருந்த மாதவனின் மும் சட்டெனக் கருத்தது. ''அங்கே உன் அப்பா தானே?'' என்று சன்னல் வழியே காட்டினான்.

அங்கே நாலைந்து வீடு தாண்டி காரை நிறுத்தி வைத்திருந்தார் செல்வரத்தினம் சற்று மறைவாகத் தான் இருந்தது. ஆனால் மாதவன் கண்டு கொண்டான்.

சத்யாவுக்கு தந்தையை நினைத்துப் பரிதாபமாக இருந்தது. மாதவனிடம் பயமாகவும் இருந்தது. அதற்குள் மாதவன் கோபியை அழைத்தான். அவன் வந்ததும் காரை காட்டி, ''அந்தக் காரில் இருப்பவரிடம் வீட்டுக்குச் செல்லும்படி நான் சொன்னதாகச் சொல்; அவசியமானால் அய்யாவிடம் கார் இருக்கிறது என்றும் சொல்'' என்று அவனை அனுப்பினான்.

அவன் சென்ற பின் சத்யாவிடம் திரும்பி, ''இந்த இரவில் காட்டு மிராண்டியைப் போல் உன்னை வெளியே விரட்டி விடுவேன் என்ற நினைப்பு. அவ்வளவு அவநம்பிக்கையில் ஏன் வரவேண்டும்?'' என்றான் உண்மையாகவே.

''நான் அப்பாவை நிற்கச் சொல்லவில்லை'' என்றாள் சத்யா மெல்லிய குரலில்.

மாதவன் முகத்தில் கடுமை மறைந்தது. ''சூட்கேஸ் கனமாக இருந்ததே. என்ன என்ன கொண்டு வந்தாய்?'' என்று முகத்தில் பார்வையை நிறுத்திக் கேட்டான்.

கேள்வியின் அவசியம் புரியாமல் ''துணிமணி, சீப்பு, பேஸ்ட்..'' என்று இழுத்தாள் சத்யா.

''முக்கியமானதை விட்டு விட்டு வந்தாய் போல இருக்கிறது.''

சுரீலென்றது சத்யாவுக்கு குமரனைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறான்.

''ஒரு வேளை இந்தக் காட்டுமிராண்டி பிள்ளை எதிரில் ஏடாகூடமாக நடப்பான் என்று எதிர்பார்த்தீர்களோ?''

''.....''

''அப்பா வீட்டில்தான் நிம்மதி கிடைக்கும் என்று ஆணித்தரமாக அன்று சொன்னவள் இன்று எதை நாடி இங்கே வந்தாய்?''

''நான்...நான் ஆ'' என்று அவனைக் கெஞ்சுவது போலப் பார்த்தாள் சத்யா.

''சொல் சத்யா. அன்று வர மறுத்தவள் இன்று வருவதானால் காரணம் இருக்க வேண்டும்? அல்லவா?'' மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக்கொண்டு பேசாமல் நின்றபடி அவன் கேட்டான், ''சொல் சத்யா பதில் சொல்.''

பதில், பதில், அதைச் சொல்லும் வரையில் அவன் விட மாட்டான். ஆனாலும் காதலும் சுயகவுரமும் ஒன்றோடொன்று ஒத்துப் போவதில்லையோ?

''இப்போதுதான் எனக்குப் புரிந்தது...?''

''என்ன புரிந்தது?''

''உங்களைப் பிரிந்து வாழும் வாழ்வை இனி என்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்று'' குனிந்த தலை நிமிராமல் கண்ணீரை அடக்க முயன்றாள் சத்யா.



''சத்யா'' என்று வெகு அருகில் அவன் குரல் கேட்கவும் நிமிர்ந்தாள். அதற்குள் அவனது நீண்ட கரங்களும் அவளைச் சுற்றி தழுவியிருந்தன.

அன்று இரவெல்லாம் தூங்காமல் மாதவன் நிறையப் பேசினான். முதல் இரவன்று பேசாத பேச்சுக்கள் எல்லாம் அன்று வாயில் வந்தன. சிறுவயது, வளர்ந்த விதம், படிக்கப் பட்டபாடு, மதனின் கிண்டல்-ஏன் எப்படி அவளை மணந்தான் என்று எல்லாமே ஒளிவு மறைவு இன்றி மான அவமானம் பாராமல் அவளிடம் சொன்னான். மணமான பிறகும் அவனது மனநிலை எப்படி பாதிக்கப்பட்டிருந்தது என்பதையும் எடுத்துச் சொன்னான்.

''சத்யா முன்பு உன்னிடம் நான் நடந்து கொண்ட முறை சரியே என்று நியாயம் கற்பிக்க இன்று இதை எல்லாம் நான் உனக்குச் சொல்லவில்லை. என் மனைவி என்ற முறையில் அப்போது நீ அந்த வேலைகளை எல்லாம் செய்தது சரியே என்றுதான் நான் இன்னமும் நினைக்கிறேன். ஆனால் அப்போது நான் உன்னை நடத்திய முறை தவறு - பேசிய முறை தப்பு. வார்த்தைகளும் தவறே. அதிலும் அந்த நாளில் பேசியது மன்னிப்புக் கேட்கக் கூட முடியாத தப்புதான். அவன் கையணைப்பில் கிடந்த அந்த வேளையிலும் அவள் உடல் சிலிர்ப்பதை உணர்ந்தான் அவன்.

அவளை இறுக அணைத்துக்கொண்டு, ''பாதிக்கப்பட்டிருந்த என் மனம், தாழ்வுணர்ச்சி ஆகியவற்றை எண்ணி தயவு பண்ணி என்னை மன்னித்துவிடு சத்யா,'' என்று குரல் கரகரக்க வேண்டிக் கொண்டான் மாதவன்.

அவன் குரலில் இருந்த பணிவும் வேதனையும் சத்யாவின் மனதை என்னவோ செய்தன. கணவனது வேதனையைக் காணப் பொறுக்காமல் அவன் தோளை ஆறுதலாக வருடினாள்.

கடைசியாக ஊரை விட்டு ஓடியதைச் சொன்னான். டெல்லியில் இந்தக் கம்பெனியில் வேலையில் சேர்ந்தது. அங்கேயிருந்த

நிர்வாகி இவனது வேலைத் திறத்தைப் பார்த்துவிட்டு முதலாளியிடம் அறிமுகம் செய்வித்தது. முன்னேறியது எல்லாம் சொன்னான். ''சென்னைக்கு வருகிறாயா என்று ''பாஸ்'' கேட்டபோது எனக்கு மனமே நிலைகொள்ளவில்லை சத்யா. உன்னைப் பார்த்து மீண்டும் என்னவளாக்கிக் கொள்ள நெஞ்சு துடித்தது. ஆனால் எந்த அளவுக்கு உன்னை முன்பு வாட்டி விட்டேன் என்பதை நினைக்கையில் உன்னைப் பார்க்கும் தைரியமே வரவில்லை'' என்று அவன் சொன்னபோது ''உங்களுக்கா தைரியம் வரவில்லை'' ஆச்சரியத்துடன் வினவினாள் சத்யா.

அன்று வெகுநேரம் கழித்து உறங்கிய போதிலும் சத்யா சீக்கிரமாகவே விழித்து விட்டாள். ஆனால் எழ முடியவில்லை, அவளை விட மனமற்றவன் போல மாதவனின் கரங்கள் அவளைச் சுற்றித் தழுவியிருந்தன. தலையைத் திருப்பி அவன் முகத்தைப் பார்த்தாள். தூக்கத்திலும் அவன் முகத்தில் பரவியிருந்த இளம் புன்னகையும் நிம்மதியையும் காண அவளுக்குப் பரவசமாக இருந்தது. ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே அவன் விழிகள் மலர்ந்தன. வெட்கத்துடன் எழ முயன்ற சத்யாவை இறுக அணைத்து அவள் நெற்றியில் முத்தமிட்டான் அவன்.

''அங்கே உன் அப்பா கவலைப்பட்டுக் கொண்டு இருப்பார்-அய்யோ, அந்த முரடன் என்னென்ன செய்தான் என்று. டெலிபோன் செய்து விடுகிறாயா சத்யா'' என்று கேட்டுவிட்டு குறும்புடன் நகைத்தான் மாதவன்.

''நேரிலேயே போவோம். சத்யா சீக்கிரமாகக் கிளம்பு உன்னை அங்கே விட்டு விட்டு நான் அலுவலகம் போகிறேன். மாலை வரும்போது அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன் சரிதானா?'' என்றான் ஆவலுடன்.

வாய் திறந்து சொல்லா விட்டாலும் குமரனைப் பார்க்கும் ஆசையில்தான் இவன் அங்கே வருவதாகச் சொல்கிறான் என்பதை சத்யா புரிந்து கொண்டாள்.



காலை எட்டரை மணிக்கெல்லாம் மாதவனின் கார் செல்வரத்தினத்தின் வீட்டினுள் நுழைந்தது.

வெளியே செல்ல உடையணிந்து குறுக்கும் நெடுக்கும் வராண்டாவில் நடந்து கொண்டிருந்தார் செல்வரத்தினம். அப்போது காரில் இருந்து அவசரமாக இறங்கிய மகளின் முகத்தைப் பார்க்கவும் அவருக்கு முகத்தில் மகிழ்ச்சி பரவியது. நிம்மதி ஊற்றாய் பெருகியது. ''வா கண்ணா'' என்று ஆவலுடன் வரவேற்றார், ''வாருங்கள் மா... மாப்பிள்ளை'' என்று அவனையும் வரவேற்றார்.

அவரது தயக்கத்தைக் கண்டு தனக்குள் நகைத்த போதிலும் வெளிக்காட்டாமல், ''பாருங்கள் மாமா, உங்கள் மகளுக்கு அதற்குள் அப்பாவிடம் வரவேண்டுமாம். விடிந்ததில் இருந்து ஒரே பிடிவாதம்'' என்றான் முறுவலுடன்.

''பொய் பொய். அப்பா, நான் கேட்கவே இல்லை. அவராகத்தான் ''உன் அப்பா கவலைப்படுவார்!'' என்று அழைத்து வந்தார்.

''அவ்வளவுதானா சொன்னேன்? சொல்வதானால் நான் சொன்னது எல்லாமே சொல்ல வேண்டும். உம். சொல்லேன்'' என்றான் அவன் விஷமச் சிரிப்புடன்.

கன்னம் சிவக்க அவனை முறைத்தாள் சத்யா.

ஆறுதலும் ரசனையுமாகத் தாமும் சிரித்தபடி ''விஜி. மாப்பிள்ளையும் சத்யாவும் வந்திருக்கிறார்கள் பார்'' என்று மனைவியை அழைத்தார்.

''வாருங்கள்'' என்று வந்த விஜயாவுடன் சித்ராவும் வந்தாள். எல்லோரும் உள்ளே சென்றபோது மாதவனிடம் ''ஜெயித்து விட்டீர்கள்'' என்றாள் சித்ரா.

''ஆமாம். ஆனால் வென்றது உன் அக்காவும்தான். திருமணமானபின் இது உனக்குப் புரியும்'' என்றான் மாதவன்.

''மாது என்னை மன்னித்து விடு'' என்று வந்தான் மதன். முன் இரவில் செல்வரத்தினம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவன் அங்கேயே தங்கியிருந்தான்.

''பழசை எல்லாம் மறந்துவிடு மதன்'' என்றான் மாதவன்.

''அது என்ன பழசு'' என்று வினவினார் செல்வரத்தினம்

''அது ஒன்றுமில்லை மாமா'' என்று மாதவன் மறுக்கையிலேயே ''அதுதான் அப்பா, நம் மதன் அத்தான் செய்த வேலை'' என்று தொடங்கினாள் சித்ரா.

''என்ன வேலை?''

''ஒன்றுமில்லை என்றேனே, விடு சித்ரா'' என்றான் மாதவன்.

அவளைக் கவனியாதவள் போல, ''படிக்கும் போது'' என்று தொடர்ந்தாள் சித்ரா.

மாதவன் மதன் பக்கம் திரும்பினான். ''மதன் உன்னை மன்னிக்க ஒரு நிபந்தனை அப்பா, இந்த வாயாடிப் பெண்ணுக்குச் சீக்கிரமாக ஒரு கடிவாளத்தை மாட்டு,'' என்றான் அழுத்தமான குரலில்.

சித்ராவின் பேச்சு நின்று முகம் சிவந்தது. சமாளித்துக் கொண்டு, ''கடிவாளமாமே; உங்கள் சத்யா என்று நினைத்தீர்களா?'' என்றாள் விடாமல்.

''ஏதோ என் சத்யா என்பதை ஒப்புக் கொண்டாயே அதுவே போதும்'' என்றான் மாதவன் பதிலுக்கு.

தங்கையும் தன் கணவனும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் பேசுவதை ரசனையுடன் கவனித்தாள் சத்யா.

''அப்போது, நான் ரெடி; புது பென்சில் கொடு'' என்றது ஒரு மழலைக் குரல். எல்லாவற்றையும் மறந்து திரும்பினான் மாதவன்.



முகமறியாத ஒருவனை அங்கே காணவும் யோசனையுடன் தலையைச் சரித்துப் பார்த்தான் குமரன்.

மாதவன் மெல்ல மகன் அருகில் சென்றான். ஒருவரை ஒருவர் பார்த்தபடி சில கணங்கள் இருவரும் அசையாமல் நின்றனர்.

மகனின் கான்வென்ட் சீருடையை பார்த்துவிட்டு, ''மை ஸன்?'' என்று கை நீட்டினான் மாதவன், நீட்டிய கரத்தைப் பற்றி ''நான் ஸன் என்றால், நீங்கள் என் அப்பாவா?'' என்று கேட்டான் குமரன்.

''ஆமாண்டா கண்ணா!'' என்று இரு கரங்களாலும் அவனைத் தூக்கி அணைத்துக் கொண்டான் மாதவன்.

தந்தையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு. ''அம்மா எனக்கு அப்பா வந்தாச்சு, சத்யாம்மா எனக்கும் அப்பா வந்தாச்சு'' என்று குதூகலத்துடன் கூவினான் குமரன்.

''அப்பா, என்க்கு 'ரைம்' தெரியுமே சொல்லவா ஃபாதர் இந்த ஃபேமிலி, ஹாப்பி ஹாப்பி ஹோம்...?'' என்று பாடவும் மாதவன் உட்பட அனைவரின் கண்களும் நீரால் நனைந்தன.

தோளில் தூங்கிய மகனுடன் மனைவியிடம் வந்து நின்றான் மாதவன்.

''குழந்தைக்கு ஸ்கூலுக்கு நேரமாகி விட்டது'' என்று வந்தார் ராமன்.

தந்தையைவிட மனமின்று ''சாயங்காலம் வர்ரீயாப்பா?'' என்று கேட்டான் குமரன்.

''வர்ரீங்களாப்பா என்று சொல்'' என்று திருத்தினாள் சத்யா.

''எத்தனை மணிக்கு பள்ளி முடிகிறது?''

''நாலு மணிக்கு.''

''உன் பள்ளிக்கு வந்து உன்னை அழைத்து வருகிறேன் கண்ணா'' என்று பிள்ளையை அனுப்பினான் மாதவன்.

அவன் திரும்பியதும், ''அவனையும் அழைத்துப் போய் விடுவீர்களா?'' என்று பதட்டத்துடன் வினவினாள் விஜயா.

அவரைப் பரிவுடன் பார்த்தான் மாதவன்.

ஒரே சமயத்தில் மகளையும் பேரனையும் எப்படிப் பிரிவார் இந்த அன்பான பெண்மணி? ''இல்லை அத்தை இன்னும் கொஞ்ச நாள் - குமரனுக்கு எட்டு வயதாகும் வரை அவன் இங்கே இருக்கட்டும். பிறகு அவன் பெற்றோரிடம் இருப்பது நல்லதல்லவா?'' என்று வினவினான்; ஆனால் பேரனைப் பிரிய வேண்டும் என்று கவலைப்படாதீர்கள். அத்தை அதற்குள் எத்தனை பெற்று உங்களிடம் தள்ளப் போகிறாளோ சித்ரா'' என்று அவளை வம்புக்கு இழுத்தான்.

முகம் சிவந்தாலும் சமாளித்துக் கொண்டு, ''ஏன், உங்கள் சத்யா பெறமாட்டாளாக்கும்'' என்று பதிலுக்கு கொடுத்தாள் சித்ரா.

''ஏன் மாட்டாள்? என் திட்டப்படி.....ஓகோ, இனி பெண்டாட்டியிடம் கலந்து ஆலோசிக்காமல் திட்டம் போடக் கூடாது என்று நினைத்தேனே. ஏன் சத்யா, இன்னும் இரண்டு போதுமா அல்லது மேலும் வேண்டும் என்று நினைக்கிறாயா?'' என்று சாது போலக் கேட்டுவிட்டுக் குறும்பாகச் சிரித்தான் மாதவன்.

அவள் முகம் சிவக்க ஓட்டம் எடுப்பதைக் கண்டு எல்லோரும் சிரித்தார்கள்.

